# கல்கி

KALKI 16.4.89 ரூ. 2




## பாரதிராஜாவின் புதிய கதாநாயகி


PONDS
பொன் நகைகள்
மின்னிட.... சந்தன
நறுமணம் கமழ்ந்திட....
இனிய உணர்வுகள் மனதில்
மலர்ந்திடும் கணங்கள். உங்கள்
மேனியில் பொன் நகைகள்
மின்னிட, தூய சந்தனத்தின்
நறுமணம் கமழ்ந்திட இதுவரை
அனுபவித்தறியா உணர்வுகளால்
உள்ளம் பூரிக்கிறது; பெண்மை
உங்களிடம் பூரண பொலிவு
பெறுகிறது.
அரிய நறுமணம்.
மதிப்பில் பொன்னைப்
போல் உயர்ந்தது.
பாண்ட்ஸ்
சாண்டல்
டால்க்
POND'S
Sandal Talc
POND'S Sandal Talc

HTA 7023



# பெரியாரின் நண்பர் வெங்கடேச தீட்சிதர்!

**இந்த** சட்டமன்றத் தொடரில், நடக்கும் அடிதடிகளை விட்டுவிட்டுப் பார்த்தால், சபையில் கலகலப்பூட்டிக் கொண்டிருப்பவர் ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதி ஜனதா தளத்தின் உறுப்பினர் ஒய். வெங்கடேச தீட்சிதர்தாம்.

மன்றத்தில் இவர் எழுந்தாலே, சிரிப்பு அலைகள் பரவுகின்றன. சபையில் மட்டுமல்ல; நேரிலும் அப்படித்தான். பேச்சுக்குப் பேச்சு ஜோக்குகள்தான். எழுபத்து மூன்று வயதான தீட்சிதர் சபையிலேயே மூத்த உறுப்பினர்.

திருவானைக்காவல்தான் தீட்சிதர் பிறந்து வளர்ந்த இடம். பத்தாம் வகுப்புக்கு மேல் படிப்புக்கு டாடா காண்பித்து விட்டார். பதினான்கு வயதில் திருமணம். மனைவி பெயர் தையல்நாயகி. படிப்பை நிறுத்திவிட்டாலும், வேத வகுப்புகளுக்குச் சென்று வந்தவர் தீட்சிதர். பேசும் போது சம்ஸ்கிருத ஸ்லோகங்களை மேற்கோள் காட்டிப் பேசுகிறார்.

''அந்தக் காலத்தில் எங்கள் முன்னோர்கள் பல யாகங்களை நடத்தினார்கள். அதனால்தான் எங்கள் குடும்பத்திற்கு 'தீட்சிதர்' பட்டம் வந்தது. ஆனால் இப்போது என் மகன், தன் பெயருடன், தீட்சிதர் பெயரைப் போட்டுக் கொள்ள விரும்பவில்லை...'' என்கிறார் தீட்சிதர்.

தீட்சிதருக்கு மிகவும் பிடித்தது இட்டிலிதான். அடிக்கடி தம் குடுமித் தலையைப் பக்கவாட்டில் ஆட்டுவதும், நாக்கை மேல் உதட்டில் தடவிக் கொள்வதும் தீட்சிதரின் மேனரிசம்.

தீட்சிதருக்கு ஈரோட்டுத் தொடர்பும் உண்டு. இவர்கள் குடும்பத்திற்கு ஈரோட்டுக்கு அருகில் நிலபுலன்கள் இருந்ததால், பெரியாருடன் நல்ல பழக்கம். 1962 – இல் ஸ்ரீரங்கம் முனிசிபல் சேர்மன் பதவிக்கு நின்ற சமயம் உள்ளூர் தி. க. காரர்கள், இவரை எதிர்க்க நினைத்த போது, பெரியார் தலையிட்டுத் தீட்சிதருக்குச் சாதகமான நிலையை உண்டாக்கினார். பெரியாருடன், பல சமயங்களில் பயணம் செய்யும் வாய்ப்பைப் பெற்றவர் தீட்சிதர்.

பரம்பரை, பரம்பரையாக கிராம முனிசீப் பதவி இவர்கள் குடும்பத்திற்கு வந்ததால், தீட்சிதரும் இருபத்து மூன்று வருடங்கள் முனிசீப்பாக இருந்திருக்கிறார். இளம் வயதில் முரட்டுத்தனம் கொண்டவராக இருந்தார். எங்கே அடிதடி நடந்தாலும் அங்கே பிரசன்னமாகி விடுவாராம், தீட்சிதர்.

கிட்டத்தட்டப் பதினாறு வருடங்கள் ஸ்ரீரங்கம் முனிசிபல் மன்றத் தலைவராக இருந்தவர். ஊராட்சி மன்றங்களின் மூலம் மாநில மேல் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1972 முதல் 1978 வரை பணியாற்றினார். காங்கிரஸில் பிளவு ஏற்பட்ட போது, காமராஜ"டன் கைகோத்து, ஸ்தாபன காங்கிரஸில் இணைந்தவர். 1977 – இல் திருச்சி பாராளுமன்றத் தேர்தலில், மறைந்த பெரியவர் கல்யாண சுந்தரத்திடம் தோற்றார். 1977 – இல் ஜனதாவில் சேர்ந்த தீட்சிதர், அந்தக் கட்சியில் ஏகப்பட்ட புயல்கள் அடித்தும் அதிலேயே தொடர்ந்து இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

பெயர்தான் தீட்சிதரே தவிர, அவருக்கு வேண்டியவர்கள் எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்கள்தாம். ''என் ஏரியாவில், எந்த தாழ்த்தப்பட்ட வீட்டில், மங்கல காரியங்கள் நடந்தாலும் சரி, துக்க காரியங்களானாலும் சரி, அங்கே நான் இருப்பேன்'' என்று சொல்கிறார். கடந்த சட்டமன்றத் தேர்தலில் இவர் வெற்றி பெற்றதற்குக் காரணம் தாழ்த்தப்பட்ட மக்களும், தி. க. வினரும் பெருமளவில் ஆதரித்ததுதான் என்கிறார் இவர்.

தீட்சிதருக்கு ஒரு மகன், மூன்று பெண்கள். எல்லோருக்கும் கல்யாணம் ஆகி, இப்போது, பேரன், பேத்திகளுக்கும் கல்யாணம் ஆகிவிட்டது.

''சட்டமன்றத்தில் 'தீக்ஷிதர்' என்று யாரும் சரியாக உச்சரிப்பதில்லை – ஒருவரைத் தவிர...'' என்று சிறிது நேர இடைவெளிக்குப் பிறகு சொல்கிறார்: ''அந்த ஒருவர் கலைஞர் தான்!''

சந்திப்பு: **ப்ரியன்**

படம்: **சுபா**



> …பதவி ஆசை மட்டும் எனக்கு இருந்திருந்தால்… ஒரு சைகை — ஒரு கண் ஜாடை காங்கிரஸுக்குக் காட்டியிருந்தால் நான் முதல்வராகியிருக்க முடியும்…

## — மனம்திறந்து பேசுகிறார் ஆர்.எம். வீரப்பன்

**கேள்வி:** நீங்கள் இப்போது புதிதாக ஆரம்பித்திருக்கும் அ.தி.மு.க. (எம். ஜி. ஆர்.) என்ற கட்சி, சிதறுண்டு போன அ.தி.மு.க. வின் ஒரு பகுதிதான் என்று சொல்லலாமா?

**ஆர். எம். வீரப்பன்:** எங்கள் கட்சி புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கட்சி என்பதை நான் முழுமையாக மறுக்கிறேன். சொல்லப் போனால், புதிதாக ஒரு கட்சி ஆரம்பிக்கப் படுவதையே நான் ஆதரிக்காதவன். ஒரு கட்சிக்குள் இருக்கும் போது ஒரு சில கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டால் கூட கட்சியின் நன்மை கருதி அவற்றை விட்டுக் கொடுத்து அக்கட்சிக்குள்ளேயே இருக்க வேண்டும் என்ற அரசியல் நெறிகளைக் கடைப்பிடிக்பவன் நான். அதன் காரணமாகத்தான் புரட்சித்தலைவர் அவர்கள் அ.தி.மு.க. என்பதை அனைத்திந்திய அ.தி.மு.க. என்று பெயர் மாற்றம் செய்த போதும், கட்சிக்காரர்களெல்லாம் பச்சை குத்திக் கொள்ள வேண்டும் என்று சொன்ன போதும் அவற்றை ஏற்க முடியாமல் டாக்டர் ஹண்டே, கோவை செழியன் போன்றவர்கள் எதிர்த்துக் கூறிய போதுகூட, அவர்களையும் அரவணைத்துக் கொண்டு போக வேண்டுமென்று புரட்சித் தலைவரிடம் நான் எடுத்துச் சொன்னேன். இப்படிப்பட்ட நான் எப்படிப் புதிய கட்சியை ஆரம்பிப்பேன்?

**கேள்வி:** அ. தி. மு. க. (எம். ஜி. ஆர்.) என்ற கட்சி புதிய கட்சி அல்லாமல் வேறு என்ன?

**ஆர். எம். வீ:** ஓர் அணை உடைந்து போகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள்… அப்போது வெளியேறிய தண்ணீர் போக மீதி எஞ்சியிருக்குமே தண்ணீர்… அது போன்றவர்கள் நாங்கள். இன்னும் சொல்லப் போனால் அ.தி.மு.க. என்ற மரத்தின் கிளைகளெல்லாம் வெட்டப்பட்ட நிலையில் எஞ்சியிருக்கும் அடிமரம் நாங்கள். இந்த

# “இனியும் சில விஷயங்களை மறைத்துப் பயனில்லை!”

அடிமரம் துளிர்க்கலாம்; வளரலாம்; அல்லது ஒன்றுமே ஆகாமல் அப்படியே ஓர் அடையாளச் சின்னம் போலவும் இருக்கலாம். ஆனாலும் எஞ்சியிருக்கும் நாங்கள் தான் அடிமரம். ஆக, புதிய கட்சி ஆரம்பித்திருப்பது மற்றவர்களே தவிர, நாங்கள் அல்ல.

கேள்வி: எந்த ஜானகி அம்மாளை நீங்கள் கடந்த ஓராண்டு காலமாகத் தலைவராக ஏற்றுக் கொண்டிருந்தீர்களோ, அந்த ஜானகி அம்மாவே, ஜெயலலிதா அணியோடு தமது அணியை இணைத்து விட்ட பிறகு, நீங்கள் இணையாமல் இருப்பதன் அவசியம் என்ன?

ஆர். எம். வீ.: புரட்சித் தலைவர் அவர்கள் உயிரோடு இருந்த போதே, எந்தச் சதிகாரக் கும்பல் ஆட்சியைப் பிடிக்கத் திட்டமிட்டதோ, — புரட்சித் தலைவர் மறைந்த செய்தி கேட்டவுடனேயே டாக்டர் நாவலரை ஒரு கருவியாகப் பயன்படுத்தி எந்தச் சதிகாரக் கும்பல் ஆட்சியைப் பிடிக்கத் திட்டமிட்டுக் கட்சியைப் பிளவுபடுத்தியதோ, அந்தக் கும்பலோடு இப்போது நானும் என் போன்றவர்களும் எப்படிப் போய் இணைய முடியும்? அதுவும் அவர்கள் கடந்த தேர்தலில் அதிகமான இடங்களைப் பெற்றிருக்கும் ஒரு நிலையில், அவர்களோடு போய் இணைவதென்பதே வசதியைத் தேடிப் போய் ஒட்டிக் கொள்ளும் அசிங்கமல்லவா! அதனால்தான் நாங்கள் புரட்சித் தலைவரின் கடைசித் தொண்டர்களாக எஞ்சி நிற்கிறோம்; தனித்து நிற்கிறோம். இனியும் சில விஷயங்களை மறைத்துப் பயனில்லை என்பதால் வெளிப்படையாகச் சொல்கிறேன்... ஜானகியம்மாள் ஒரு முதலமைச்சராக அரசியலில் நுழைந்தார்; அதன் பிறகு நடந்த தேர்தலில்தாமே மீண்டும் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்படுவோம் என்று நம்பினார்; அது நடக்கவில்லை. அதனால் அந்தத் துரோகக் கூட்டத்தோடு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இணைந்து விட்டார். இந்த இணைப்பின் மூலம், தாம் ஒரு லட்சியத்தோடு அரசியலுக்கு வந்து தொண்டர்களை வழிநடத்திச் செல்பவர் அல்ல என்பதை நிரூபித்து விட்டார். அதுதான் உண்மை.

கேள்வி: ஜானகியம்மாளை அரசியலுக்குக் கொண்டு வந்ததே நீங்கள்தான்; அவரை முன்னுக்கு நிறுத்திச் செயல்பட்டதெல்லாம் நீங்கள்தான் என்றல்லவா சொல்லப்பட்டது!

ஆர். எம். வீ: இந்தியா முழுவதிலும் அப்படியோர் எண்ணம் இருந்தது உண்மை. ஆனால் நிஜம் மாறானது. ஜானகியம்மாள் அணியில் நான் மிகவும் அலட்சியப்படுத்தப்பட்டேன்; அவமானப்படுத்தப்பட்டேன். இருப்பினும் அதையெல்லாம் தாங்கிக் கொண்டேன். ஜானகியம்மாளை நான்தான் ஆட்டுவிக்கிறேன் என்ற பழியைக் கூடச் சுமந்து கொண்டேன். காரணம், அதையெல்லாம் நான் பெரிதுபடுத்தினால் எங்கே கட்சி மீண்டும் பிளவுபட்டுப் போய் விடுமோ என்கிற அச்சம்தான். ஜானகியம்மாள் அணி பிளவுபட்டால், முதல் பிளவுக்குக் காரணமான துரோகக் கும்பலுக்கு நமது குழப்பங்கள் சாதகமாகிவிடுமே என்று பயந்தேன். அதனால்தான் நான் பேசாமல் இருந்தேன்.

கேள்வி: பிறகு, ஜானகியம்மாளை அரசியலுக்குக் கொண்டு வந்ததுதான் யார்?

ஆர். எம். வீ: புரட்சித் தலைவர் அமெரிக்காவிலிருந்த போது நடந்த பொதுத் தேர்தலில் கட்சியிலிருந்த அனைவரையும் ஒன்றிணைத்துச் செயல்படும் பணியில் இருந்தேன். அது வெளிப்படையாகத் தெரிய வந்த போது, புரட்சித் தலைவருக்கு அடுத்து, ஆர். எம். வீரப்பன்தான் என்கிற எண்ணம் பரவ

லாக வளர ஆரம்பித்தது. எனவேதான் அவருடைய மறைவுக்குப் பிறகு, எங்கே நான் வந்து விடுவேனோ என்கிற பயத்தில் ஒரு துரோகக் கும்பல் கட்சியைப் பிளந்தது. அவர்கள் வெளியேறிய பிறகு, எஞ்சியிருந்தவர்களும் வீரப்பன் வந்துவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தனர். அவர்கள்தான் ஜானகியம்மாளை முன்னிறுத்தினார்கள். அப்படி அவர்கள் முன்னிறுத்திய போது ஜானகியம்மாள் உடன்பட்டதற்குக் காரணம், அவருக்குள்ளேயே தாம் முதலமைச்சராக வேண்டும் என்ற எண்ணம் இருந்திருக்க வேண்டும் என்றுதான் கருதுகிறேன். எப்படியோ, ஜானகியம்மாளை முன்னிறுத்தியதுமே நான் இரண்டாவது கருத்துக்கே இடம் வைக்காமல் ஏற்றுக் கொண்டேன்.

கேள்வி: இரண்டாவது இடம் உங்களுக்குத்தான் — எம். ஜி. ஆருக்குப் பிறகு நீங்கள்தான் வருவீர்கள் என்று பலரும் எண்ணியிருந்தது நடக்காமல் போனது உங்களைப் பொறுத்தவரை எப்படியிருந்தது?

ஆர். எம். வீ.: அப்படியொரு எண்ணம் மற்றவர்களுக்கு இருந்தால் கூட நான் முதல்வராகவரவேண்டுமென்றுஒருபோதும்நினைத்ததேயில்லை. இது சத்தியம். அப்படியோர் எண்ணம் இருந்திருந்தால், வெறும் முப்பத்திரண்டு எம். எல். ஏக்களை வைத்துக் கொண்டே ஒரு துரோகக் கூட்டம் கட்சியைப் பிளந்தது என்னும் நிலையில் — நான் என்ன சொன்னாலும் கேட்பதற்குத் தயாராக இருந்த அறுபத்தைந்து எம். எல். ஏக்களை வைத்துக் கொண்டு நான் பதவிக்கு வந்திருக்க முடியாதா? அந்த ஆசை மட்டும் எனக்கிருந்திருந்தால் அப்போது வேறொன்றும் செய்யத் தேவையில்லை; ஒரு சைகை — ஒரு கண் ஜாடை காங்கிரஸுக்குக் காட்டியிருந்தால் அவர்களின் உதவியோடு நான் முதல்வராகியிருக்க முடியும். ஆனால், நான் செய்யவில்லையே! இருந்த போதிலும் ஜானகியம்மாள் என்னை நம்பவில்லை. மற்றவர்களின் போதனையில், அவர் என்னைக் கட்சிக்குள் நெருங்கி வரவே விடவில்லை.

கேள்வி: எம். ஜி. ஆரின் நம்பிக்கையைப் பெற்றிருந்த உங்களை — அந்தக் குடும்பத்தோடு பல ஆண்டுகளாக நெருங்கியிருந்த உங்களை ஜானகியம்மாள் நம்பவில்லை என்பது ஆச்சரியமாக இருக்கிறது!

ஆர். எம். வீ.: ஆச்சரியம் மட்டுமல்ல; அதிசயம் என்று கூடச் சொல்லலாம். காரணம், வீரப்பனுக்கு முக்கியத்துவம் கொடுத்தால் வீரப்பன் வளர்ந்து விடுவான் என்று அவருக்குப் போதித்துக் கடைசியில் அவருக்கு வரவேண்டிய புகழையும் பெருமையையும் கூடக் கெடுத்து விட்டார்கள்.

கேள்வி: எப்படியிருந்தாலும் ஜானகியம்மாள் தம்மிச்சைப்படி செயல்படவில்லை என்கிறீர்களா?

ஆர். எம். வீ.: ஆம்; அவரைச் சுற்றியிருந்த மாதவன், ராகவானந்தம், முத்துசாமி போன்றவர்கள்தான் அவரைத் தங்களிஷ்டத்திற்கு இயக்கினார்கள். உண்மையைச் சொன்னால், தேர்தல் நடப்பதற்கு முன்பே, ஜானகியம்மாளை முதல்வர் என்றும் தாங்களெல்லாம் இன்னின்ன துறைக்கு அமைச்சர்கள் என்றும் கூட ஒரு கற்பனை அமைச்சரவையை உருவாக்கி, அந்தக் கனவிலேயே அந்தம்மாளையும் வாழச் செய்து தாங்களும் வாழ்ந்தார்கள். ஆனால், தேர்தலைச் சந்திப்பதற்கான ஆயத்தங்களைக் கட்சி ரீதியாகச் செய்யவேயில்லை. என்னையும் ஒதுக்கி வைத்து அவமானப்படுத்தியதால் நானும் கட்சிக்குள் செயலாற்ற முடியாமல் போய் விட்டது. அந்தச் சூழ்நிலைகளால் நான் தேர்தலில் நிற்கக் கூட விரும்பாமல்தான் இருந்தேன். அப்படிப் போட்டியிடாமல் போனாலும் எங்கே நான் தி. மு. க. வோடு ரகசியத் தொடர்பு வைத்துக் கொண்டிருப்பதால்தான் தேர்தலில் போட்டியிடாமல் இருக்கிறேன் என்ற குற்றச்சாட்டு எழுந்து விடுமோ என்கிற பயம் காரணமாகத்தான், எங்கள் கட்சி தோல்வியடைவதைத் தவிர்க்க முடியாது என்ற சூழ்நிலையிலும் நான் போட்டியிட்டேன்.

கேள்வி: தோல்வி என்பது நீங்கள் எதிர்பார்த்த ஒன்றுதானா?

ஆர். எம். வீ.: தோல்வியை எதிர்பார்த்தேன். ஆயினும் இப்படியொரு படுதோல்வியை நான் எதிர்பார்க்கவில்லை. நான் பெருமைக்காகச் சொல்லவில்லை — அகம்பாவத்தோடு சொல்லவில்லை — என்னை அவர்கள் நம்பிச் செயல்பட விட்டிருந்தால், எங்கள் கட்சி ஆட்சியைப் பிடிக்க முடிகிற அளவுக்கு வெற்றி பெறச் செய்ய முடியாமல் போயிருந்தாலும் கூட நிச்சயம் எதிர்க்கட்சி என்ற அந்தஸ்திலாவது வெற்றி பெற்றிருப்போம். ஆனால், அவர்கள் என்னை நம்பவில்லையே... என்ன செய்வது?

கேள்வி: கடந்த தேர்தலில் உங்களைப் போன்ற தலைவர்களெல்லாம் உங்கள் கட்சிக்காக எல்லாத் தொகுதிகளுக்கும் சென்று பிரசாரம் செய்யாததும் இந்தப் படுதோல்விக்கு ஒரு காரணமில்லையா?

ஆர். எம். வீ.: அதேதான். அதற்குக் காரணம், கட்சி ஒரு கட்சியைப் போல் செயல்படவில்லை என்பதுதான் — அவர்கள் அனைவரும் ஒரு கற்பனை அமைச்சரவையை அமைத்துக் கொண்டு வாழ்ந்ததுதான். இந்த நிலையில் ஜெயலலிதா பக்கத்தில், நாளொரு அறிக்கை விட்டுக் கொண்டிருந்தார்கள். அதற்கு இங்கே பதில் சொல்லக் கூட ஆள் இல்லாத நிலை. ஜெயலலிதாவுக்கு எப்போதுமே தான்தான் பெரியவர் என்ற எண்ணம் உண்டு. தமது நடவடிக்கைகளின் மூலம் தம்மையொரு மிகப் பெரிய சக்தியாக மற்றவர்கள் கருதும்படியானதொரு பிரமையை உருவாக்கிக் கொண்டிருந்தார். அதனால்தான் அவரை வைத்து ஏமாற்றலாம் என்று கணக்குப் போட்டுக் கொண்டு சென்றவர்களெல்லாம்


உங்கள் குழந்தைக்கு ஊட்டுங்கள் காய்கறிகளின் சிறந்த சத்தூட்டத்தை!
ஃபாரெக்ஸ்®-வெஜ்
6 மாதம் முதல்
புதிய ஃபாரெக்ஸ்-வெஜ். இது, வைட்டமின் வளம் செறிந்த காய்கறிகளான காரட், தக்காளி மற்றும் பச்சைப் பயற்றின் இயற்கையான ஊட்டச்சத்துக்களைக் கொண்டதாகும்.
இது, நன்றாக, முன்பே - பக்குவப்படுத்தப்பட்டது. ஆகவே இது, குழந்தையின் மென்மையான வயிற்றின் ஜீரண சக்திக்கு ஏற்றதாகும்.
ஃபாரெக்ஸ்—சுவையுடன் வளரும் வழி
Farex-veg
INFANT CEREAL, VEGETABLES, DAL AND MILK
இதோ ஃபாரெக்ஸ் வளர்ச்சி வழி: 1. பால் சேர்ந்த ஃபாரெக்ஸ் சீரியல் 2. ஃபாரெக்ஸ்-வெஜ் 3. ஃபாரெக்ஸ்-ஸ்
GX/31/203 TML




# அண்ணாமலை
# பைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 252, மேட்டுப்பாளையம் ரோடு,
கோயமுத்தூர்-641 043 போன்: 42224 தந்தி: "ராஜதூத்"
டெலக்ஸ்: 0855-399



**"புதிய கலர் டி வி"**



— கல்லூரி மாணவி




**"புதிய ஸ்கூட்டர்"**



— அலுவலக பணியாளர்



**"புதிய பிரிட்ஜ்"**



— இல்லத்தரசி

ஆம்! இவையெல்லாம் நனவாக
அண்ணாமலை பைனான்ஸ்
பண உதவி புரிகிறது.
சுலபத் தவணைகளில்
பணத்தைச் செலுத்தலாம்.

விவரங்களுக்கு அணுகவும்:
**அண்ணாமலை பைனான்ஸ் லிமிடெட்**

கிளைகள்: "மனீஷ் டவர்ஸ்," 4 வது மாடி, 84, ஜே. சி. ரோடு, பெங்களூர் – 560 002. போன்: 221213. * TBS பிஸினஸ் சர்வீஸ் சென்டர், கேபின், G1, மேக்கர் சேம்பர்ஸ் V, 221, நரிமன் பாயின்ட், பம்பாய் – 400 021. போன்: 2046105. * பி. எஸ். கே. பில்டிங்ஸ், 35/815, சித்தூர் ரோடு, எர்ணாகுளம், கொச்சின் – 682 011. போன்: 360423. * எஸ். ஆர். எம். பில்டிங்ஸ், மேட்டூர் ரோடு, ஈரோடு – 638 011. போன்: 70470. * 70, சேலம் மெயின் ரோடு, கள்ளக்குறிச்சி – 606 202. 1) "காண்டினென்டல் பிளாசா" 705, அண்ணா சாலை, சென்னை – 600 006. போன்: 863228, 862430, 861228. 2) டபிள்யூ – 101, முதல் மாடி, இரண்டாவது அவென்யூ, (ரவுண்டானா பஸ் ஸ்டாப் அருகில்) அண்ணா நகர், சென்னை – 600 040. போன்: 610403. 3) "அருணோதயா பில்டிங்ஸ்," 26/27, பூந்தமல்லி ஹை ரோடு, சென்னை – 600 003. போன்: 31788/38606. 4) 75, ரங்கநாதன் தெரு, உஸ்மான் ரோடு ஜங்ஷன், தி. நகர், சென்னை – 600 017. * 63, நாயக்கர் புது வீதி, மதுரை – 625 001. போன்: 34430. * 7, கோமஸ்வரி பில்டிங், காமராஜ் சாலை, பாண்டிச்சேரி – 605 011. போன்: 28207. * ராகவேந்திரா காம்ப்ளக்ஸ், 67, முதல் மாடி, முதல் அக்ரஹாரம், சேலம் – 636 001. போன்: 66889/66896/67000. * 225, மைசூர் மெயின் ரோடு, சத்தியமங்கலம் – 638 401. போன்: 420. * 25/பி-1, "சக்தி காம்ப்ளக்ஸ்," எஸ். என். ஹை ரோடு, திருநெல்வேலி – 627 001. போன்: 23144/26307. * 4-ஏ, போர்ட்டல் ரோடு, திருச்சி – 620 001. போன்: 40222-4. * 61-ஏ, ஆற்காடு ரோடு, வேலூர் – 632 012. போன்: 22320/24300.

அவரிடமிருந்து கதறியடித்துக் கொண்டு வெளியே ஓடி வர நேரிட்டது. இந்தச் சூழ்நிலைகள்தான் இப்படியொரு கேவலமான தோல்வியைச் சந்திக்கும்படி செய்து விட்டன.

**கேள்வி:** ஜானகி அணியில் ஒரேயொருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்னும் நிலையில் — ஜெ. அணி இன்று எதிர்க்கட்சி அந்தஸ்தில் வெற்றி பெற்றிருக்கிறது என்னும் சூழ்நிலையில் ஜெ. அணிதான் உண்மையான அ. தி. மு. க. என்று ஆகிவிட்டதே?

**ஆர். எம். வீ:** அப்படி நினைக்கும் அளவுக்கு ஆகி விட்டதை ஒப்புக் கொள்கிறேன். அதற்கு ஜெயலலிதா அணியின் பலம் காரணமாயிருந்தது என்பதை விட எங்கள் பக்கமிருந்த பலவீனம்தான் காரணம் என்பதே சரியான விளக்கம். எப்படியிருந்தாலும் காலமாவதற்கு ஒரு வார காலம் முன்பு வரை கூட எல்லா அமைச்சர்களிடமும் ஜெயலலிதாவைப் புறக்கணிக்கும்படிதான் புரட்சித் தலைவர் சொன்னார். எம். எல். ஏக்களிடமும் அப்படித்தான் சொன்னார். சொல்லப் போனால், எங்கே தமக்குப் பின்னால் ஜெயலலிதா வாரிசாக வந்து விடுவாரோ என்று புரட்சித் தலைவரே பயந்தார். இந்தச் சூழ்நிலையில் புரட்சித் தலைவரின் எண்ணத்திற்கு எதிராக இப்போது ஜெயலலிதாவிடம் போய்ச் சரணடைவது புரட்சித் தலைவருக்கே செய்யும் துரோகம் இல்லையா? யார் இப்படிப்பட்ட துரோகத்தைச் செய்தாலும் என்னால் ஒருபோதும் அது முடியாது.

**கேள்வி:** எம்.ஜி.ஆர். தமது கடைசிக் காலத்தில் ஜெயலலிதாவைப் புறக்கணிக்கும்படி சொல்லாமல் இருந்திருந்தால் என்ன செய்வீர்கள்?

**ஆர்.எம்.வீ.:** அப்போதும் ஜெயலலிதாவைத் தலைவராக என்னால் ஒப்புக் கொள்ள முடியாது. அவருடைய குணாதிசயங்களை நான் பல ஆண்டுகளாகக் கணித்தவன். அந்த வகையில் அவர் தலைவராக விளங்க ஒரு குணாதிசயத்தைக் கூடப் பெற்றவரில்லை என்பதை நான் உறுதியாக அறிந்திருக்கிறேன்.

**கேள்வி:** நீங்கள் ஓரிடத்தில் தி. மு. க.வை ஆதரிப்பது அப்படியொன்றும் பாவமான காரியம் அல்ல என்று சொல்லியிருக்கிறீர்கள். எந்த அர்த்தத்தில் அப்படிச் சொன்னீர்கள்?

**ஆர். எம். வீ.:** அன்றைக்குப் புரட்சித் தலைவ்ரா? கலைஞரா? என்ற கேள்வி எழுந்த போது புரட்சித் தலைவர்தான் என்று சொன்னோம். இன்று புரட்சித் தலைவர் இல்லை என்ற சூழ்நிலையில் தி. மு. க.வை ஆதரிப்பது பாவம் இல்லை என்ற அர்த்தத்தில்தான் சொன்னேன். ஒருபுறம் பார்த்தால் ஜானகியம்மாள் அரசியலுக்குள் நுழைந்ததென்பது நல்லதாகத்தான் போய் விட்டது. இல்லையென்றால் தமிழ் நாட்டுக்கு ஒரு கௌரவமான தலைமை வந்திருக்காது என்பதுதான் எனது கருத்து.

**கேள்வி:** நீங்கள் கருணாநிதி ஆட்சிக்கு வந்திருப்பதைச் சொல்கிறீர்களா?

**ஆர்.எம்.வீ.:** இல்லை. ஜெயலலிதா ஆட்சிக்கு வராமல் போனதைச் சொல்கிறேன்.

**கேள்வி:** எப்படிச் சிலர் நீங்கள் வந்து விடக் கூடாது என்பதில் குறியாக இருந்தார்கள் என்று குற்றம் சாட்டுகிறீர்களோ, அதே போல் நீங்களும் ஜெயலலிதா வந்து விடக் கூடாது என்பதில்தானே குறியாக இருந்திருக்கிறீர்கள்?

**ஆர்.எம்.வீ.:** புரட்சித் தலைவரின் கடைசி ஆசையாக இருந்ததே ஜெயலலிதாவைப் புறக்கணிக்க வேண்டும் என்பது தானே! அதன் வழிதான் நான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

பேட்டி: **இளங்கோவன்**
படம்: **யோகா**


---

**அடுத்த இதழில்**

# “அம்மா என்னை ஏன் வெறுக்கிறாய்?”

— பெண் குழந்தைகளை வெறுக்கும் பெற்றோர்கள் பற்றிப் புள்ளி விவரங்களுடன் ஒரு கட்டுரை.




இந்தாங்க மிஸ்ரா தக்கர் ரிப்போர்ட்!
ஜெ.சிங்
657 பக்கம்
அவர் கிடக்கிறார்.. நீ நல்லா சாப்பிடு!
பூடாசிங்
சிதம்பரம்
மத்திய அரசு
7343 பக்கம்
தக்கர் ரிப்போர்ட்
ஐயோ! என்னைப் பழி வாங்கறார்!
திருநாவுக் அரசு
ஊழல் பற்றிய உண்மைகள்
தேர்தல்
ஆஹா! வெயிலுக்கு நிழல்! குளு குளுன்னு..
தமிழக இ.காங்கிரஸ்
புடவை பிடியப் போக பாம்பு கடித்தது—
செய்தி



கல்கி

1989 ஏப்ரல் 16
மலர் 47 இதழ் 37
சுக்ல சித்திரை 3



# பிரதான எதிர்க்கட்சி, பரிதாப எதிர்க்கட்சியாகிறது!

தி. மு. க. அரசுக்கு முதலில் ஏற்பட்ட ஒரு தடுமாற்றம்; அப்புறம் உண்டான ஒரு தலைகுனிவு, இவை காரணமாக, ஆட்சிக்கு வந்த இரண்டு மாத காலத்துக்குள் அந்த அரசு செய்துள்ள பல நல்ல காரியங்களை நாம் கவனிக்காமல் இருந்துவிடக் கூடாது.

மலைபோல் தேங்கிக் கிடந்த கோப்புக்கள் கரைந்து போயின. ஃபைல், முதல்வரைத் துரத்துவதற்குப் பதில், ஃபைலை இப்போது முதல்வர் துரத்துகிறார்!

தொழிலதிபர்களின் கூட்டம் ஒன்றை நடத்தி, ஆலோசனைகளைக் கேட்டறிந்தார். மாநில திட்டக்குழுவைத் திருத்தி அமைத்து, அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கிறார் முதல்வர்.

ஆலயங்களைச் சிறப்பாகப் பராமரிக்கவும் ஆலயங்களின் சொத்துக்களைப் பாதுகாக்கவும் என்ன செய்யலாம் என்பதற்கு ஒரு மாநாட்டினை அரசே முன்னின்று நடத்தியிருக்கிறது. சீரிய யோசனைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க, ஒரு குழு நிறுவப்பட்டுள்ளது.

மின்வாரியத்தில் ஏற்பட்டு வந்த மகத்தான நஷ்டத்தை ஓரளவேனும் சரிக்கட்ட மின் கட்டணங்கள் சீரமைக்கப்பட்டுள்ளன. (குடிசை வாழ்வோருக்கும் விவசாயிகளுக்கும் தரப்பட்டுள்ள அபரிமித சலுகைகள் குறைக்கப்படவில்லை. இதனால் மின் வாரியத்துக்கு ஏற்படும் நஷ்டத்தை அரசு மான்யம் ஈடுகட்டுகிறது என்றாலும் அந்த மான்யமும் மக்களின் வரிப்பணமே என்பதை மறப்பதற்கில்லை.)

ரேஷன் கடைகளிலும் மருத்துவமனைகளிலும் பள்ளிகளில் மதிய உணவு வழங்குதலிலும் அமைச்சர்களின் திடீர் விஜயங்களினால் ஓரளவுக்கேனும் பொறுப்புணர்வு அதிகரித்திருக்கிறது. மதிய உணவின் போது பள்ளிக் குழந்தைகளுக்கு முட்டை வழங்குவது என்ற முடிவு போற்றுதலுக்கு உரிய ஒரு விஷயம். பருப்பு காய்கறி முதலியவற்றை உணவில் சேர்ப்பதாக பாவனை பண்ணிவிட்டுக் கணக்கெழுதி மோசடி செய்வது போல் முட்டையில் நிச்சயம் செய்ய இயலாது. முட்டை குறித்த நாளில் தரப்படவில்லையானால் புகார் கிளம்பும். மேலும் முட்டையில் உள்ளது போல் ஊட்டச்சத்து வேறு எதிலுமே கிடையாது. சைவ உணவுக்காரர்களுக்குக் கூட காந்தியடிகளே சிபாரிசு செய்த உணவு கருவடையா முட்டை. புதிய ஏற்பாட்டினால் கோழிப் பண்ணைகளின் முக்கியத்துவம் அதிகரித்து அவை சிறப்படையும்.

பட்ஜெட்டில் விதிக்கப்பட்டுள்ள சில புதிய வரிகள் மக்களைத் தாக்கும் என்றாலும் காலியான கஜானாவை எண்ணிப் பார்க்கையில் இது மிதமான வரி விதிப்பே! பற்றாக்குறை அதிகமில்லை என்பதுடன் உள்ள பற்றாக்குறையும் திறமைமிக்க வரி வசூலிப்பினால் மிகவும் குறைந்து போகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வறட்சி நிவாரணப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது இடைத்தரகர்களின் பாக்கெட்டுகளைத் தஞ்சமடையாமல் போய்ச் சேர வேண்டியவர்களை முறையாகச் சென்றடையும் என்று நம்புகிறோம்.

செய்ய வேண்டியன இன்னும் எவ்வளவோ இருக்கிறது என்றாலும் ஆரம்பம் நல்ல விதமாக உள்ளது என்பதையும் இன்றுள்ள நிதி நிலைமையில் இதைவிட அதிகமாக எதிர்பார்க்க முடியாது என்பதையும் மறுப்பதற்கில்லை.

இந்த நற்பணிகளையெல்லாம் விடச் சிறந்த நற்பணி, கடந்த கால ஆட்சியின் தவறுகளையும் குற்றங்களையும் முதல்வர் பிட்டுப் பிட்டு வைத்துக் கொண்டிருப்பதுடன், முடிந்த மட்டில் தவறுகளைத் திருத்திச் செப்பனிட்டுக் கொண்டும் இருப்பதுதான். சாராய சாம்ராஜ்ய ஊழல்கள்; என். ஆர். ஐ. ஊழல்கள்; பல மாடிக் கட்டட ஊழல்கள் முதலியன இதில் அடங்கும். அ. தி. மு. க. தலைமை இதனால் கோபமடைவதும், 'எம். ஜி. ஆர். இமேஜைக் கருணாநிதி பாழ்படுத்துகிறார்' என்று புரளி கிளப்புவதும், முதல்வரின் சொல்லிலும் செயலிலும் உண்மை இருப்பதையே உணர்த்தும். ஃபைல்களும் சாட்சியம் கூறுகின்றன. தம்முடைய தகிடுதத்தங்கள் அம்பலமாவதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தவிக்கிறார் திருநாவுக்கரசு. இந்தத் தவிப்பு, கோபமாகவும், சட்டசபை நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையாகவும், நாளுக்கு நாலு தடவை நடக்கும் வெளிநடப்பு நாடகமாகவும், 'ராஜினாமா செய்' என்ற அபத்த கோஷமாகவும் உருவெடுக்கிறது.

எண்ணிக்கை காரணமாக அ. தி. மு. க. பிரதான எதிர்க்கட்சியாக இருக்கலாம்; செயல்திறனை நோக்க அது பரிதாப எதிர்க்கட்சியாக விளங்குகிறது!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

தேர்தலுக்கு முன்னர் பிஸியாக இருந்த தலைவர்கள் இப்போது என்ன செய்கிறார்கள்?



# ஜானகி; சிவாஜி; உதயமூர்த்தி...

## சொத்துக்களைப் பிரிக்கிறார்

தேர்தல் முடிவுகள் வெளிவந்த போது சிவாஜி, சூரக்கோட்டை பண்ணையில் தங்கி இருந்தார். முடிவுகள் அவருக்கு படு விரக்தியை ஏற்படுத்தின என்றாலும் பின்னர் சமாளித்துக் கொண்டார். சென்னையிலிருந்து கலைஞர் போன் செய்து "கவலைப்படாதீங்க... பார்த்துக்கலாம்"என்று ஆறுதல் கூறினார்!

சகோதரர்கள் தங்கவேலு, சண்முகம், ஆகியோர் மறைந்தவுடன் குடும்பத்தின் நில புலன்களையும், சொத்துக்களையும் கவனிக்க வேண்டிய பொறுப்பு சிவாஜி மேல் விழுந்தது. சிவாஜி தற்போது மிகவும் பிஸியாக இருப்பது, அவர் குடும்பத்துச் சொத்துக்களைப் பிரிப்பதில்தான். அதனால் சூரக்கோட்டைக்கும், தஞ்சைக்கும், சென்னைக்கும் இடையே, அலைந்து கொண்டிருக்கிறார்.

பாலாஜி, எஸ். எஸ். கருப்பசாமி போன்ற பட அதிபர்கள், நடிக்கும்படி சிவாஜியைக் கூப்பிட்டும் அவர் வேண்டாம் என்று கூறி விட்டார். "பையன் நடிக்க வந்துட்டான். நான் ஏன் நடிக்கணும்?" என்று கேட்கிறார். தேர்தலுக்கு அப்புறம் ஒருநாள் கூட படப்பிடிப்பில் கலந்து கொள்ளவில்லை.

சென்னையிலிருக்கும் போது காலையிலும், மாலையிலும், இரண்டு மணி நேரம் கட்சி அலுவலகத்துக்குச் செல்கிறார். இனி கூட்டு கலைஞருடன்தானாம்.



## அமெரிக்காவிலிருந்து ஆலோசனை

'மக்கள் சக்தி இயக்கம்' தலைவர் எம். எஸ். உதயமூர்த்தி தேர்தலுக்கப்புறமும் பல கூட்டங்களில் கலந்து கொண்டு பேசியிருக்கிறார். ஆளும் கட்சி, எதிர்க் கட்சி தவிர, மூன்றாவது சக்தியாக மக்கள் சக்தி இயக்கம் செயல்படும் என்று கூறியிருக்கிறார் உதயமூர்த்தி.

இயக்கம் ஆரம்பிப்பது சம்பந்தமாக ஒன்றரை வருடத்துக்கு முன் சென்னைக்கு வந்த உதயமூர்த்தி, பிப்ரவரி மாதம், அமெரிக்காவுக்குத் தம் குடும்பத்தினரைப் பார்க்கச் சென்றார். தற்போது அவர் அமெரிக்காவில் இருந்தாலும், இயக்கப் பொறுப்பாளர்களுக்கு அடிக்கடி அங்கிருந்து ஆலோசனைகள் வருகின்றன.

## தோட்டத்தில் எம். ஜி. ஆர். ஆலயம்

கட்சிப் பிரமுகர்களைச் சந்திப்பதைக் கூடியவரை தவிர்க்கிறார் ஜானகி அம்மாள். தப்பித் தவறி யாராவது வந்து விட்டால் மரியாதைக்காகச் சில நிமிஷங்கள் பேசுகிறார். ஆனால் இப்போதும் தினசரி காலையில் வெளியூரிலிருந்து வரும் எம்.ஜி.ஆர். தொண்டர்களை மகிழ்ச்சியோடு சந்திக்கிறார். தற்போது ஜானகியுடன் அதிக நேரம் செலவழிப்பது கலோசனா சம்பத், முன்னாள் அமைச்சர் பாவலர் முத்துசாமியின் மனைவி சண்முக வள்ளி, முன்னாள் நடிகை எம். வி. ராஜம்மா ஆகியோர் தான். இவர்கள் தவிர, வேறு யாரிடமும் ஜானகி அரசியல் பேசுவதில்லை. அவ்வப்போது சகோதரர் வீட்டுக்கும், வளர்ப்பு மகன் அப்பு வீட்டுக்கும் சென்று வருகிறார். வீட்டில் இருக்கும் சமயங்களில் எம்.ஜி.ஆர். படங்களை வீடியோவில் போட்டுப் பார்க்கிறார். உடலை செக்—அப் செய்து கொள்வதற்காக, வரும் ஜூன், ஜூலை மாதங்களில் அமெரிக்கா செல்ல இருக்கிறார். தோட்டத்திலேயே எம்.ஜி.ஆருக்கெனக் கட்டியுள்ள ஆலயத்தில் பிரார்த்தனை செய்வது ஜானகி அம்மாளின் தினசரிக் கடமைகளில் ஒன்று.

— கௌசல்யா.

# என் உயிர்த் தோழன்

பாரதிராஜா

**ப**தினாறு வயதிலேயே எழுத வேண்டும் என்று நினைத்து, பல்வேறு காரணங்களால் திசை திருப்பப்பட்டுத் திரை உலகில் நுழைந்த பள்ளி மாணவன் சின்னச்சாமிக்கு மறு பிறவி கொடுத்திருக்கும் 'கல்கி'க்கு நன்றி கலந்த வணக்கம்.

பாரதிராஜா என்று பலராலும் அழைக்கப்படும் இந்த மனிதனின் அடிமன ஆழத்தில் இன்னும் ஒளிந்து கொண்டிருக்கிறான் சின்னச்சாமி.

ஒரு காலத்தில் அரை அணா ஒர் அணாவுக்கு நான் வாங்கிப் படித்த 'அணில்,' 'டமாரம்,' போன்ற பாக்கெட் பதிப்புகள் என் நினைவிற்கு வருகின்றன. கூடவே அன்றைய கால கட்டங்களில் இளம் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட கறுப்புக் கண்ணாடி தமிழ்வாணனின் சங்கர்லாலும், மாதுவும், மாணிக்கம் கத்தரிக்காயும் என் நினைவிற்கு வந்து போகிறார்கள். கொஞ்சம் விவரம் தெரிந்த காலத்தில் என்னோடு கண்ணாமூச்சி விளையாடி என் நெஞ்சிலே கால் பதித்துச் சென்ற அகிலன், பார்த்தசாரதி போன்றோரின் பாதச் சுவடுகள் இன்னும் மறையாமலேயே என்னுடன் தங்கி நிற்கின்றன. தமிழ் இலக்கியத்தில் ஒரு கர்ஜனை புரிந்த ஜெயகாந்தனின் சுவாசத்தில் குளிர் காய்ந்த இதமான வெப்பம் இன்றும் என்னைப் பல நேரங்களில் திரை உலகில் இனம் காட்டிக் கொண்டிருக்கிறது.

ஒரு கால கட்டத்தில் அல்லி நகரம் என்ற அந்தக் கிராமத்தின் ஒரு மூலையில் ஒரு சின்னக் குடிசையில் காடா விளக்கின் வெளிச்சத்தில் குப்புறப் படுத்துக் கொண்டு கல்கியின், 'பொன்னியின் செல்வன்,' 'பார்த்திபன் கனவு' என்ற இலக்கிய சாகர 'சங்கமங்களில் மூழ்கித் திளைத்து மூச்சுத் திணறி இன்னும் அந்தப் பிரமையிலிருந்து விடுபட முடியாத அன்றைய சின்னச்சாமியை இன்றைய பாரதிராஜா நினைத்தால் ஒரு கணம் இந்தப் பேனா வெட்கித் தலைகுனிய வேண்டும்.

தலைமுறை மாற்றங்களை — காலத்தை வென்று நிற்கும் — தமிழ் இலக்கியம் கண்டெடுத்த சாகா வரம் படைத்த "கல்கி" அவர்கள் எழுதிய 'கல்கி'யில் பாரதிராஜாவா ......!

என் மரியாதைக்குரிய இன்றைய எழுத்துலக பிரம்மாக்களே...! கல்கியின் நேசத்துக்குரிய வாசகர்களே... உங்கள் வீட்டு முற்றத்தில் ஓடி விளையாடும் உங்களின் கடைக்குட்டிச் சிறுவன் தாழ்வாரத்தில் தடுக்கி விழுந்தாலும் கூட தாவி எடுத்து அணைத்துக் கொள்வதில்லையா...? உற்சாகம் கொடுத்து ஓடி விளையாட அனுமதிப்பதில்லையா? அந்தச் சிறுவன் பின்னைக் கிறுக்கல்களாகக் கிறுக்கி வைத்த காகிதம் கூட வண்ண ஓவியங்களாகத் தெரிவதில்லையா? அதுபோல் நான் எழுதப் போகும் இந்தத் தொடர் கதையையும் நீங்கள் அன்புடனும் பாசத்துடனும் அணுகுங்கள்.

ஏன் இத்தனை பூர்வ பீடிகை என்கிறீர்களா?

எண்ண ஓட்டங்களை, மனோவேகத்தை — கற்பனையை நொடிப் பொழுதில் திரைக்குக் கொண்டு வரக் கூடிய ஆற்றல் கொண்ட திரைப்படத் துறை கையில் இருக்கிறது. அதை விஞ்ஞானம் எளிமையாக்கியும் இருக்கிறது.

ஆனால் எழுத்து அப்படியல்ல. அது ஒரு 'தவம்'. அதற்கென்று ஒரு தனி ஆற்றல் வேண்டும். ஞானம் வேண்டும். அது எனக்கு இருக்கிறதோ இல்லையோ என் அன்புக்குரிய 'கல்கி,' ஆசிரியர் திரு. கி. ராஜேந்திரன் அவர்கள் என் மீது வைத்த நம்பிக்கையில் என்னை நானே உரசிப் பார்த்துக் கொள்கிறேன். அதன் விளைவுதான்,

— 'என் உயிர்த் தோழன்.'

திரைப்படத்திற்காக என் அன்புத் தோழர், கதாசிரியர் கலைமணி அவர்களின் மூலக் கருத்தியைத்தான் என் கைகள் வாசிக்கின்றன... எப்படி?

இசையின் இலக்கணம் தெரியாத மாட்டிடையன் புல்லாங்குழல் வாசிப்பது போல — திரையில் நான் சொல்லுவதற்கும் பத்திரிகை எழுத்திற்கும் சில மாற்றங்கள் இருக்கலாம் —

ஆனால் கருதி ஒன்றாகத்தான் இருக்கும். உங்களை நம்பித் தொடருகிறேன். உயிர்த் தோழர்களே கொஞ்சம் வழி விடுங்கள்.

அன்புடன்,
பாரதிராஜா



அத்தியாயம் 1

## குயில் கூவும் நேரத்தில் ஒரு கூக்குரல்!

குப்புறப்படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த தமிழகத்தின் தலைநகரம் மெல்லத் தன் இரவுப் போர்வையை விலக்கி உடம்பை அசைக்க முயன்று கொண்டிருந்தது.

அந்த அசைவில் —

சூரியன் தலை காட்டும் முன்பே பல மனித் தலைகள் கடற்கரைக் கருக்கல் வானத்தில் நிழற்படம் போல் தாவித் தாவிக் குதித்துக் கொண்டிருந்தன. பகல் பொழுதில் உட்கார்ந்தே நாற்காலியைத் தேய்த்தவர்கள் — மேட்டுக் குடியினர் — சூரியனைச் சோம்பேறி என்று காட்டுவது போல — கடற்கரைக் காற்றில் உற்சாகத்தைப் பேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

நாற்பது, ஐம்பதைத் தாண்டியவர்கள், அதிகாரிகள், அலுவலர்கள், வியாபாரிகள், தொழில் மேதைகள் கடந்து போன வாலிபத்தைத் திரும்பப் பெற போராடிக் கொண்டிருந்தார்கள்.

கனத்த சரீரம் கரையாதா?

காதல் இளமை திரும்பாதா?

முடிவுக் கோட்டில் நின்று கொண்டு — உடற்பயிற்சியில் போனஸாக ஒன்றிரண்டு வருடம் தேறாதா? இப்படி பல்வேறு மனித் தலைகள் ஓட்டமும் நடையுமாகக் கால்களையும், கைகளையும் ஆட்டிக் கொண்



டும், உடற்பயிற்சி செய்து கொண்டும் —

அந்த மெரீனா கடற்கரையில் நிழற் பிம்பங்களாக நடமாடிக் கொண்டிருந்தன.

நிழற் பிம்பங்கள் நடமாடிக் கொண்டிருந்த அதே வேளையில் — தலைநகரத்தின் நிஜங்களும் தூக்கம் கலைக்க முயற்சி செய்து கொண்டிருந்தன. குறிப்பாக நம் "குயில் குப்பத்தில்."

குயில் குப்பத்தின் அழகைப் பார்க்க வேண்டுமானால் ஆண்டர்ஸன் ரோடும், பாந்தியன் ரோடும்... காலேஜ் ரோடும் சந்திக்கின்ற பாலத்தில் நின்று பார்க்க வேண்டும்.



மேலட்டையில்......




பாரதிராஜாவின் புதிய கதாநாயகி

பாரதிராஜா, 'என் உயிர்த் தோழன்' படத்தில் அறிமுகம் செய்யும் கதாநாயகி பெயர் ரமா. இயற்பெயர் சாந்தி. 'R' ராசி காரணமாய், ரமா வாகியிருக்கிறார்! ''எந்தவித சினிமாத்தனமும் துளியுமில்லாத இவரை எப்படித் தேர்ந்தெடுத்தீர்கள்?'' என பாரதிராஜாவிடம் கேட்டால், ''காரணம் கேட்கும் நீங்களேதான் காரணத்தையும்சொல்லிவிட்டீர்களே'' என்று கூறிச் சிரிக்கிறார். ''ஒரு சிற்பி களிமண்ணைச் சிற்பமாக்குவது போல் நடிப்பில் முன் அனுபவம் இல்லாதவரை நடிகராக உருவாக்குவதுதான் என் வேலை'' என்கிறார்.

இவரை பாரதிராஜா தேர்ந்தெடுத்த விதமும் மிக வித்தியாசமானதுதான். ஆம், தங்கைக்கு சினிமா சான்ஸ் கேட்க, ரமா அழைத்து வந்தபோது, தங்கையின் சான்ஸ், இவருக்குக் கிடைத்துவிட்டது!

இன்னொரு சுவாரசியமான விஷயம், ரமா வாகிவிட்ட சாந்தி, மாநில அளவில் ஆடிய, வாலிபால் சாம்ப்! திரையுலகில் நுழைந்துள்ள முதல் விளையாட்டு வீராங்கனை!

தகவல்: மௌஷ்மி.

எதிரே ஓடுகின்ற கூவத்தில், இடப்புறத்தே உள்ள பல அடுக்கு மாடிக் கட்டடங்களின் அழகு பிரதிபலிக்கும். தெளிவில்லாத அந்தச் சாக்கடையின் மேற்பரப்பில் தெளிவான ஒரு வரைபடம் போல், திரைப்படம் போல் தெரியும். அதன் வலப்புறத்தில் கூனிக் குறுகி அடக்கமாகவும் ஒடுக்கமாகவும் காணப்படுவதுதான் குயில் குப்பம். தங்கள் சக்திக்கு ஏற்பத் தென்னை ஓலைகளாலும் — தகரங்களாலும் — தாதிக்காய்ப் பெட்டிகளாலும் — கிழிந்த சினிமா பேனர்களாலும் குடிசைகளை அமைத்துக் கொண்டுள்ள மக்கள். பூமியில்தான் குடியிருக்கிறோம் என்பதை மறந்து விடக் கூடாது என்பதற்காகவே ஆகாயம் தெரிந்தும் தெரியாமலும் கூரை வேய்ந்து கொண்ட அவர்களுடைய முன்யோசனை! அவர்களுடைய நாற்றுக்கணக்கான குடிசைகள்.

பட்டா இல்லாமல் ''ப'', வடிவில் அமைக்கப்பட்ட பல்வேறு குடிசைகளுக்கு மத்தியில் நமது ஜனநாயகத்தைப் பறை சாற்றப் பறக்க விடப் பட்டிருக்கும் அனைத்துக் கட்சிகளின் கொடிகளும் காலைக் காற்றில் மெல்லத் தலையாட்டிக் கொண்டிருந்தன. பல்வேறு வண்ணங்களில் சொறி நாய்களும் அவற்றைச் சுற்றி சக்களும், தேங்கிய சாக்கடையில் இனப்பெருக்கம் செய்து கொண்டிருந்த கொசுக்களும், அருகே ஓடும் கூவத்தை எங்கே சுத்தப்படுத்தித் தங்களை அப்புறப் படுத்தி விடுவார்களோ என்ற பயத்துடன் குடிசை வாசிகளுக்குக் காவலாக விழிப் புணர்ச்சியுடன் நடமாடிக் கொண்டிருந்தன.

பகலில் மானத்தைக் காக்க இடுப்பைச் சுற்றி நின்று, இரவில் படுக்கையாகவும் அதுவே போர்வையாகவும், பயன்படும் லுங்கிகளுக்குள் தங்களை முடக்கிக் கொண்டிருக்கும் சைக்கிள் கடை 'பட்டு' சேகர், கட்டட வேலை செய்யும் ''ஆடு'', லாரி கிளீனர் பலவேசம், யாராயிருந்தாலும் சரி, குயில் குப்பத்திற்குப் பொதுவான 'சுப்ர பாதம்' கேட்காமல் எழுவே முடியாது...

''மணி ஆவுது இன்னும் இன்னாயா தூக்கம்... கர்மம் கண்டதை ஊத்திக்கினு வந்து... சனியன் ராவுலே உசிரை வாங்கறது... அப்பறம் கர்மாந்தரம் விடிய விடியத் தூங்கறது... த்தூ... ஏந்திரிய்யா...''

ஓலைக் குடிசையில் இது ஒலித்தால் தகரக் கொட்டகையில்?

''யோவ் இன்னைக்கி ராவுக்கு ஊத்திக்கினு வா நீ, தெரியும் சேதி... ரோட்டாண்ட படுக்க வுடறேன், ராவுலே பொராண்டுவே இல்லே? இன்னிக்கி ராவுலேந்து யாரைப் பொராண்டுறேன்னு பார்ப்போம்... எந்திரியான்னா...''

''தே.. சர்தான் போமே... இவ பெரிய சினிமா ஷ்டாரு... ராவுலே இவளை நெனச்சுக்கினு தூங்காம புரளுறோமாக்கும்... த்தூ...'' என்று ஆரம்பித்து எழுதக் கூசும் ஏக வசனத்தில் ஆராதித்துக் கொண்டிருக்கும் குரல்கள்.

கடைசியாக 'குயில்' குப்பமும், விழிக்க ஆரம்பித்தது.

வீட்டு முன் நின்று சிறுநீர் கழித்துக் கொண்டிருந்த ஒரு சிறுவன், கமல் ஏதோ ஒரு ஹிந்தி படத்தில் பாடிய, 'ஓ.. மாரியா ஓ... மாரியா'' என்ற பாடலை... 'சோமாரியா சோமாரியா' என்று 'தமிழ்படுத்திப் பாடிக் கொண்டே திரும்பத் திடுக்கிட்டான்...

''யம்மா, பால் வண்டி வருதும்மா! பால் வண்டி வருதும்மா'' என்று கத்தியவாறே டிரவுசரை இறுக்கிப் பிடித்துக் கொண்டு வீட்டினுள் ஓடி மறைய —

அந்தப் பால் வண்டி, சேரியில் தேங்கிக் கிடந்த சாக்கடையைத் தன் ரப்பர் சக்கரங்களால், அசுர வேகத்தில் அள்ளி வீசித் தெளித்த வண்ணம் ராட்சசனாகக் குப்பத்துக்குள் நுழைந்து நின்றது...

பால் வண்டியா அது?

பாழாய்ப் போன வண்டி...

குயில் குப்பம் கூவத் தொடங்கிய நேரத்தில் அதைக் கூக்குரலிட வைத்த வண்டி...!

(தொடரும்)

DISCOVER TAMILNADU

# காரைக்குடி — தெரிந்து கொள்வீர்


சென்னை இராமேஸ்வரம் நெடுஞ் சாலையிலும், இரயில்வேயிலும் அமைந் துள்ளது. காரைக்குடியில் தங்கி அருகி லுள்ள கோவில்களில் தரிசனம் செய்வீர்.

★ பிள்ளையார்பட்டி — கற்பக விநாயகர் — 7 கி.மீ.
★ குன்றக்குடி — முருகன் ஆலயம் — 5 கி.மீ.
★ ஆவுடையார்கோவில் — உலகப்பிரசித்தி பெற்ற சிற்ப வேலைப்பாடுள்ள சிவன் ஆலயம் — 22 கி.மீ.
★ திருமயம் — தமிழ்நாட்டிலேயே பெரிய பள்ளி கொண்ட பெருமாள் — 15 கி.மீ.
★ சித்தன்னவாசல் — பண்டைய ஓவியக்கலைக்கூடம் — 40 கி.மீ.
★ இராமேஸ்வரம் — 120 கி.மீ.
★ நாட்டுக்கோட்டை நகரத்தார் உருவாக்கிய பிரம்மாண்ட மான சிவன்கோயில்கள் பல — ஊரைச்சுற்றிலும்.
★ வள்ளல் அழகப்பரின் கல்விக்கோவில்கள் — அழகப்பா பல்கலைக்கழகம்.
★ உருவாகிவரும் தமிழ்த்தாய் கோவில்.
★ தங்குவதற்கு ஸ்டார் ஓட்டல் — ஓட்டல் மலர்.

ஓட்டல் மலர்

102, மதுரை மெயின்ரோடு, காரைக்குடி - 1
போன்: 2077 - 3076

A/C டீலக்ஸ் ரூம்கள்.
சைவ உணவகம் A/C.
சைனீஸ் உணவகம் A/C.
பெர்மிட் ரூம் A/C.
மொத்த தேவைக்கும் ஜெனரேட்டர்.
24 மணி நேரம் வெந்நீர்.
கான்ப்ரன்ஸ் ஹால்.



# தர்மதேவன்



**ரசிக மன்றக்** கண்ணோட்டத்தை விட்டு விட்டு, சராசரி சினிமா ரசிகனின் கண்ணாடியை மாட்டிக் கொண்டு பார்த்தால் —

எம்.ஜி.ஆர். பாராட்டுக்குரியவர்தான். அதில் எவருக்கும் இரண்டு விதக் கருத்து இருக்க முடியாது; உண்மை. அதற்காகப் பகவானே அவரிடம் பாடம் கற்றுக் கொள்ள வேண்டிய அளவில் மேலூரார் தரத்தைத் தாழ்த்தி... வேண்டாம். அந்தத் திசையிலே போனால் அமரராகி விட்ட எம்.ஜி.ஆரை அவமதித்து விட்டதாய் அபாண்டம் வந்து சேரும். கடவுளரை வேண்டுமானால் அவமதிக்கலாமே தவிர... விடுங்கள்...

நிழல்கள் ரவி அசத்துகிற அளவில், அடையாளம் கண்டுகொள்ளவே சிரமப்படுத்தி ஒரு வித்தியாசமான காரெக்டர் காட்டியிருக்கிறார். யாரோ ஒரு வட்டிக்காரரர் சார்பில் தண்டல் நடத்தி வரும் சண்டியராய் அவர் உதார் காட்டுவது தூள். அதிலும் கோர்ட் விசாரணையில் வக்கீலைப் பார்த்து, 'நீங்கள்ளாம் புஸ்தகத்துலே கை வைச்சுச் சத்தியம் பண்றதில்லே. அதான் 'பொய் பொய்யாக் கூசாமப் பேசறீங்க', என்று எடுத்தெறிந்து பேசி 'கண்டெம்ட் ஆஃப் கோர்ட்'டுக்கு ஆளாவது படு அழுத்தம்.

எமதர்ம வினு சக்ரவர்த்தியிடம் தெரியாத்தனமாய் பூலோகத்தில் ஒரு தர்மாத்வான புண்ணியவானைக் காட்டுவதாகச் சவால் விட்டாலும் விட்டார், நாரத மலேஷியா வாசுதேவன். மேக மண்டலங்களிடையே புகுந்து புறப்பட்டுப் பூலோகமடைந்து படும் அவஸ்தை பரிதாபம். தாங்கொணாத்தாக விடாயில் தள்ளாடும் அவர் கண்ணில் 'தவிச்ச வாய்க்குத் தண்ணி' என்று பீச்சாங் கரையில் தண்ணீர் வியாபாரம் நடத்திக் கொண்டிருந்தவர் பட, அங்கு சென்று குடக் கணக்கில் வாங்கி பருந்தி விட்டு, அப்புறம் வியாபாரி கேட்கும் காசோ, துட்டோ இன்னதென்று தெரியாமல் விழிக்க, கடைக்காரர் தரும் செமை அடி உதைக்கு ஆளாகி அலறுவது ஐயோ பாவம்.

தர்மராஜா வினுச் சக்ரவர்த்தி தன் சகாக்கள் சார்லி, சின்னி ஜெயந்த், குண்டு கல்யாணம் ஆகிய கிங்கரப் பரிவாரங்களுடன் மண்ணுலகுக்கு வந்த பிறகு ஏக அமளி. மோத வரும் லாரியை முறைத்துக் கொண்டு வினு நிற்க, அது பாட்டுக்கு அவரை மோதி மிதித்து விட்டுப் போக, சுற்றி நின்ற கூட்டம் திகைத்து அவரைச் சூழ்ந்து அதிர்ந்து நிற்க, வினு கொட்டக் கொட்ட முழித்துக் கொண்டு எழுந்து நிற்பதும், இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மூர்த்தி பாய், அவர்களைச் சரிக்கட்டி மாஜிக் ஷோ நடத்துவதும் விட்டலாச்சாரியாவின் இரவல் சரக்கு என்றாலும் விலாப் புடைக்கச் சிரிக்க வைக்கும் கூத்துக்கள்.

மனோரமாவை ஆசையோடு தொட முடியாமல் சித்ரகுப்த மனச்சாட்சி அடிக்கடி மிரட்டுவது பொறுக்காமல் சந்திரன் பிரியாவிடை பெறுமுன் 'உனக்கு ஏதாவது ஆபத்துன்னா என்னை நினைச்சுக்க. நான் உனக்குள்ளே வந்து பூந்துக்குவேன்', என்று வரமளித்து மறைய, அதே போல் தனக்குத் தெரிந்த காதல் ஜோடிகளை ரௌடிகளிடமிருந்து காப்பாற்ற வேண்டிய கட்டத்தில் மனோரமா சந்திரனை நினைத்துக் கொண்டதும் அவருக்குள் எழுந்த சக்தியில் சந்திரன் குரலிலேயே பேசிச் சும்மா பாய்ந்து பறந்து சண்டியர் கும்பலைச் செண்டாடுகிறாரே அந்த வேடிக்கை எப்படி?

சமூக சேவகி என்ற பெயரில் அந்தக் காலத்து சரோஜா தேவி ஏறக்குறைய அன்றைய மேக்கப்பிலேயே வந்து தன் புதுமுக மகளையும் எம்.ஜி.ஆர். உதவியால் படித்துப் பட்டம் பெற்ற அனாதை முரளியையும் சேர்த்து வைத்து, தன்னால் முடிந்த அளவுக்குத் தலைவர் எம். ஜி. ஆர். — அன்னை ஜானகி புகழ் பாடியிருக்கிறார்.

அந்த அந்திமக் காட்சியில் கவிதை காட்ட முனைந்திருந்தாலும், ரொம்பத்தான் உயர்த்தி விட்டதால் விழுகிற சத்தம் கேட்கிறது. அந்தக் கட்டத்தில் தலைவரின் இரவல் குரல் சூப்பர்.

தலைவர் மறைந்த போது தலைமாட்டிலேயே பிடிவாதமாய் நின்று விலகாதிருந்த அந்தத் தலை — தர்மதேவன் போஸ்டர்களில் மட்டும் முகம் காட்டும் அந்தத் தலை — படத்தில் எங்கும் தலை காட்டாதிருக்கும்படி அத்தனை எச்சரிக்கையோடு பார்த்துக் கொண்டிருக்கிறார்களே, இதற்கு யார் பொறுப்பு? பைனான்ஷியரா?

— பி. எஸ். எஸ்.

# அமரர் கல்கி

## நினைவுச் சிறுகதைப் போட்டி-1989



| | | |
|---|---|---|
| முதல் பரிசு | ரூ. | 1500 |
| இரண்டாவது பரிசு | ரூ. | 750 |
| மூன்றாவது பரிசு (இரு கதைகளுக்குத் தலா ரூ. 375 வீதம் | ரூ. | 750 |

ஆக மொத்தம் ரூ. 3000 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 125 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

- கதைகள் சொந்தக் கற்பனை என்றும், இதற்கு முன் வேறு எந்த உருவிலும்பிரசுரமானதில்லைஎன்றும்உறுதி மொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும்வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தர வேண்டும்.
- நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

**கதைகளை அனுப்ப வேண்டிய கடைசித் தேதி: ஜூன் 15.**

- உறையின் மேல் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால்தலைஒட்டிய சுயவிலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் கல்கி ஆகஸ்டு 6 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.
- எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

**ஆசிரியர், கல்கி, சென்னை — 600 032.**

# இந்து சிட்பண்ட்ஸ்

(மதுரை) பிரைவேட் லிமிடெட்

நிர்வாக மற்றும் மத்திய அலுவலகம்

## இந்தியாவில் அதிக செலுத்தப்பட்ட மூலதனம் உடைய மகத்தான சீட்டு நிதி நிறுவனம்

இந்தப் புத்தாண்டுப் புனித நாளில் எங்கள் சீட்டு குருப்புகளில் உறுப்பினராகச் சேருங்கள். உடனே கவர்ச்சியான சிறப்புப் பரிசுகளைத் தட்டிச் செல்லுங்கள். நினைவிருக்கட்டும்! இந்த விசேஷ சலுகை புத்தாண்டு நாளில் மட்டுமே. பதிநான்கு ஆண்டு காலமாக அன்பார்ந்த சந்தாதாரர்களின் பேருக்கத்தால் வெற்றி நடை போட்டுவரும் இந்தத் தலையாய சீட்டுக் கம்பெனியில் நீங்கள் சிறுகச் சிறுகச் சேமிக்கும் பணம் பெருகிப் பெருகி வளர்வதைக் காண்பீர்கள்! உங்கள் பணத்திற்கு முழுப் பாதுகாப்பும், உத்தரவாதமும் அளிப்பதே எங்கள் குறிக்கோள். உங்கள் சேமிப்பு பெருகட்டும்; உங்கள் வருங்காலம் வளமையுடன் வளரட்டும்! எனவே தாமதிக்காதீர்கள்! இன்றே இந்துவில் சேருங்கள்... இலாபகரமான வளமை காணுங்கள்.



Prof. S. சுப்பராயன், M.A.
நிர்வாக இயக்குனர்

**இந்து இன்வெஸ்ட்மெண்ட்ஸ்**

பிக்ஸட் டெபாசிட்டுகள் ஏற்கப்படுகின்றன.

பின் தேதியிட்ட வட்டிக் காசோலைகள் வேண்டுகோளுக்கிணங்க கொடுக்கப்படும்.

**6 மாதங்கள் — 14% வட்டி**

ஒரு வருடம் அதற்கு மேலும் உள்ள டெபாசிட்டுகளுக்கு கவர்ச்சிகரமான பரிசுகள் மற்றும் வட்டி கொடுக்கப்படும்.

Deposits will be accepted upto a limited numbers only.

ரெஸிடெண்ட் மேனேஜர்கள்

நெய்வேலி : திரு. G. இளங்குமரன், D-22, மாணிக்கவாசகர் ரோடு, ப்ளாக்-2. கடலூர் : D. ஷண்முகம், M/s. மீனா ஜுவல்லர்ஸ், 2, லாரன்ஸ் ரோடு, போன் : 744. சிதம்பரம் : திருமதி.V. விசாலம், 4,பேராசிரியர்களின் தற்காலிக குடியிருப்புகள், அண்ணாமலை நகர். மயிலாடுதுறை : திரு. J. சந்திர சேகரன், 73, செட்டித் தெரு. திருவாரூர் : திருமதி. T. சாந்தி, 16, ஐயனார் கோயில் தெரு. கும்பகோணம் : திரு. T. ஸ்வாமிநாதன், 8, ஹெட் போஸ்ட் ஆபீஸ் ரோடு, போன் : 21789. விழுப்புரம் : திரு. ஹாசன் பெய்க், V.V.A. பில்டிங்ஸ், ஹிந்துஸ்தான் டயர்ஸ், திருச்சி ட்ரங்க் ரோடு. திருச்சி : திரு. S. ராஜசேகரன், A.K.C. இல்லம்,

TAS

**GROW RICH WITH INDU**

# 14வது வருடம்

## புத்தாண்டில் ஒரு புதுமை!
## சுலபமான சேமிப்புகள்! சுவாரசியமான பரிசுகள்!

வழங்குவோர்

# இந்து சிட்பண்ட்ஸ்



| சீட்டின் மதிப்பு ரூ. | மாதச் சந்தா ரூ. | | மாதங்கள் | சீட்டுப் பதிவாளரின் P.S. எண் | இலவசப் பரிசுகள் |
|---|---|---|---|---|---|
| 1 லட்சம் | 2500 | x | 40 | 82 / 89 | வாட்டர் பில்டர் அல்லது அரிஸ்டோகிராட் பிரீஃப்கேஸ் |
| 50,000 | 1000 | x | 50 | 78 / 89 | வாட்டர் கூலர் அல்லது |
| 50,000 | 2000 | x | 25 | 84 / 89 | டபுள் ப்ளாஸ்க் |
| 25,000 | 625 | x | 40 | 87 / 89 | சாஸ் பான் |
| 20,000 | 800 | x | 25 | 86 / 89 | |
| 15,000 | 500 | x | 30 | 85 / 89 | ப்ளாஸ்க் |
| 10,000 | 250 | x | 40 | 89 / 89 | உணவு தட்டு |

# INDIA'S LARGEST PAID-UP CAPITAL CHIT COMPANY

155, வடக்கு உஸ்மான் ரோடு, தி.நகர், சென்னை - 600 017. போன் : 445529 டெலக்ஸ் : 8858 TANX IN


கிளைகள் :
154, வடக்கு உஸ்மான் ரோடு, தி.நகர், சென்னை - 600 017. போன் : 447888 & 447333;
220, N.S.C. போஸ் ரோடு, 2-வது மாடி, ஜார்ஜ் டவுன், சென்னை - 600 001.
போன் : 585901 & 585178.
586, விஜயா காம்ப்ளக்ஸ், ஒப்பணக்காரத் தெரு, கோயம்புத்தூர் - 641 001.
194, வக்கீல் புதுத்தெரு, மதுரை - 625 001. போன் : 34940 & 31351
22, வணிகர் தெரு, காஞ்சீபுரம் - 631 501. போன் : 3048.
106, பெரிய தெரு, திருவண்ணாமலை - 606 601. போன் : 2881.

மாடியில், (சரஸ்வதி நர்சிங் ஹோம் எதிரில்), சாலை ரோடு, திருச்சி-18, போன் : 31716, திரு. T.S. அனந்த கிருஷ்ணன், 178, கணபதி காலனி, T.V. கோவில், திருச்சி-5, திருப்பூர் : திரு. R. முரளி, 16, துரைசாமிபுரம், முதல் தெரு, நாகர்கோவில் : திரு. N.S. சுரேந்திரன், 'பங்கஜ் இல்லம்', வெள்ளாளத் தெரு, இடலாக்குடி, போன் : 3370, பொள்ளாச்சி : திரு. V.R. விஸ்வநாதன், 493, Dr. அன்சாரி தெரு, போன் : 4488, குன்னூர் : திரு. K.K. லிங்கம், 21, குவைல் ஹில், நீலகிரிஸ், போன் : 7054, ராணிப்பேட்டை : திருமதி. R. வசந்தி, 'ராம்நிவாஸ்', பாரதி நகர், சிப்காட்.

TAS 202 T

**GROW RICH WITH INDU**

# திரையும் இசையும்...



ஒரு 'மகிழ்ச்சி தரக் கூடிய' செய்தி. விரைவில், செமை சுவாரஸ்யமான பதின்மூன்று வாரத் தொடர் டி. வி. யில் ஆரம்பமாகப் போகிறது. பெயர் 'திரையும் இசையும்'. வழங்கவிருப்பவர் யார் தெரியுமா? மெல்லிசை மன்னர் எம். எஸ். விஸ்வநாதன்.

ஒவ்வொரு பகுதியிலும், பல பிரபலங்கள் பங்கேற்கவிருப்பதுதான் இதன் சிறப்பு. எம். எஸ். வி. இந்நிகழ்ச்சியைப் பற்றி, "நான் ஒன்பது வயதில் திரையுலகில் நுழைந்தேன். பலவிதப் பணிகளாற்றிவிட்டு, இசையமைப்பாளராகிய பின், கடந்த சுமார் நாற்பதாண்டுகளில் நான் கற்றுக் கொண்டவை, அனுபவித்தவை மற்றும் என் திரையுலக சகாக்கள்... என்று பலவிதமான விஷயங்களை இத்தொடரில் சொல்லியிருக்கிறேன். ஆனாலும் இது என் சுயபுராணம் இல்லை; திரையுலகில், திரையிசை பற்றிய ஒரு சரித்திர சாசனம் என்று இதைச் சொல்லலாம்" என்று குறிப்பிட்டார்.

'துக்காராம்' திரைப் படத்தில் முசிறி சுப்பிரமணியம் பாடும் காட்சி இடம் பெறும். அப்போது கடைப்பிடிக்கப்பட்ட முறையே வித்தியாசமானது. இப்போதுள்ளது போல, ரீ–ரிக்கார்டிங் வசதியெல்லாம் அப்போது கிடையாது. எனவே, மரத்தடியில் முசிறியார் பாடினார் என்றால், காமிரா பகுதியில் இல்லாமல், தள்ளி அமர்ந்து கூடவே கலைஞர்கள், பலவித இசைக் கருவிகளையும் இசைத்துக் கொண்டிருப்பார்கள். சமயத்தில், கவனக்குறைவு காரணமாய் இசைக் கருவி இசைப்பது கூட ஷாட்டில் இடம் பெறும். (துக்காராம் படத்தில் இதைக் காணலாம்) இன்றைக்கு ரீ–ரிக்கார்டிங் மற்றும் பாட்டு ரிக்கார்டிங்கில் எத்தனை முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பது இத்தொடரில் விளக்கப்படுகிறது.

பாடலாசிரியர்களும், இசையமைப்பாளர்களும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு, இணைந்து பணியாற்ற வேண்டியதை வலியுறுத்திச் சில காட்சிகள் இடம் பெறுகின்றன. டி.எம்.எஸ்., பி. சுசீலா, பி. பி. ஸ்ரீனிவாஸ், யேசுதாஸ், ஜானகி, எல். ஆர். ஈஸ்வரி, வாணி ஜெயராம் மற்றும் எஸ்.பி.பி. ஆகியோரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, எம்.எஸ்.வி.யுடன் உரையாடி, தங்களின் அந்த நாள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறார்கள். பானுமதி, ஸ்ரீதர், பாலசந்தர், பாக்யராஜ், டி. ராஜேந்தர் போன்ற இயக்குனர்கள் இடம் பெறும் காட்சிகளும், கருத்துக்களும், தொடரில் வரவிருக்கின்றது. இசையமைப்பாளர்கள் வரிசையில் கே. வி. மகாதேவன், (விஸ்வநாதன்) ராமமூர்த்தி, இளையராஜா, நௌஷத் போன்றவர்கள் பற்றியும் அவர்களுடைய இசையமைப்புப் பாணி பற்றிய காட்சிகளும் இடம் பெறுகின்றன.

எம்.எஸ்.வி.க்கு, அத்தனை இசைக் கலைஞர்களையும் சுற்றி வைத்துக் கொண்டு, பாடகரையும் உட்கார்த்தி வைத்து, ஆர்மோனியத்தில் கை வைத்தால், டியூன் போட மூடு வந்து விடுமாம். சிறுகச் சிறுக டெவலப் செய்து, பாடல் டியூன் முழுமையடையுமாம். இளையராஜாவின் பாணி வித்தியாசமானது. மனத்திலேயே, இசையை உணர்ந்து, அதை நோட்டுப் புத்தகத்தில் முதலில் 'மியூஸிகல் நோட்'களாய்க் குறித்துக் கொண்டு விடுவார். மற்றவர்கள் அதைப் பிரதியெடுத்துக் கொண்டு பணிபுரிவார்களாம். இன்னும் சிலர் தனியாய் அமர்ந்து வீட்டிலேயே டியூன் போட்டு எடுத்துக் கொண்டு வருவார்களாம்.

தொடரில், பல சுவையான சம்பவங்கள் நினைவு கூறப்படுகின்றன. உதாரணத்துக்கு ஒன்று. தங்கை படத்துக்காக, கவியரசு கண்ணதாசன் ஐந்து பாடல்களை எழுதித் தர, அவற்றுக்கு ஐந்து டியூன்களைப் போட்டாராம் எம்.எஸ்.வி. அவற்றைக் கவியரசு கண்ணதாசன், கே. பாலாஜி, டைரக்டர் ஏ. சி. திரிலோகச்சந்தர் ஆகியோருக்குப் போட்டுக் காட்ட, ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாடலை நன்றாக இருக்கிறது என்றார்களாம். ஆனால் செலக்ட் செய்ய வேண்டியதோ ஒரேயொரு பாட்டுத்தான். எதைத் தேர்ந்தெடுப்பது என்று அனைவரும் குழம்பிக் கொண்டிருந்த போது, திரிலோகச்சந்தர், அப்போது தபால் கொடுக்க வந்த தபால்காரரைக் கூப்பிட்டு, ஐந்து பாடல்



* விஸ்வநாதன் — ராமமூர்த்தி....



* நிகழ்ச்சித் தயாரிப்பின் போது...

களையும் போட்டுக் காட்டி, ஒன்றைத் தேர்ந்தெடுக்கச் சொல்ல, அவர் தேர்ந்தெடுத்ததுதான் 'கேட்டவரெல்லாம் பாடலாம்' பாடல். அதன்பின் கவிஞர், இது போன்ற சூழ்நிலை என்றால், தமாஷாக, 'யாராவது தபால்காரர் கண்ணில் படுறாரா பார்!' என்று கூறுவதுண்டாம்.

இசையமைப்பில், கம்ப்யூட்டர் உட்பட அத்தனை இசைக் கருவிகளின் பங்கு பற்றியும் அலசுகையில், நூற்றைம்பது வயலின்கள் பயன்படுத்தப்பட்ட 'எங்கே நிம்மதி?' பாடல் பற்றியும், மூன்றே மூன்று இசைக் கருவிகள் பயன்படுத்தப்பட்ட 'தாழையாம் பூ முடிச்சு' பற்றியும் குறிப்பிடப்படுகிறது. அதே போல, டியூனுக்குப் பாட்டு எழுதுவது, பாடலுக்கு மெட்டு அமைப்பது முதலியவற்றையும் உதாரணங்களுடன் எம்.எஸ்.வி. சொல்லுகிறார்.

நாட்டுப் பாடல் மெட்டுகளைத் திரையில் பயன்படுத்துவது நெடுநாளைய வழக்கம் தானாம். நினைத்தாலே இனிக்கும் படத்தின் 'எங்கேயும் எப்போதும்...' பாடல், 'கத்தாழை காட்டுக்குள்ளே...' என்ற நாட்டுப் பாடலின் திரைப்பதிப்புத்தானாம். அதே போல மேற்கத்திய இசை, கர்நாடக இசை இவையும் திரையிசையில் பயன்படுத்தப்பட்டுள்ளதையும் விளக்குகிறார் எம். எஸ். விஸ்வநாதன்.

நெஞ்சம் மறப்பதில்லை படத்துக்கான பாடல்களை இசையமைக்க 45 நாட்கள் ஆனதாம். ஆனால், நெஞ்சில் ஓர் ஆலயம் படத்தின் ஏழு பாடல் பணியும் ஒரே நாளில் ஓவராகி விட்டதாம்! இப்படிப்பட்ட தகவல்களும் இடம்பெறுகின்றன.

தொடரில் சம்பந்தப்பட்ட சில பாடல் காட்சிகளும் இடம்பெறுகின்றன. இது பற்றிக் குறிப்பிடுகையில், "ஒளியும்—ஒலியும் போல இல்லாமல், விஷயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துத் தேவையான இடங்களில் மட்டும், பாடலின் முழுக் காட்சியையும் ஒளிபரப்பாமல், தேவையான அளவுக்கு மட்டும் பயன்படுத்தியுள்ளோம்" என்று குறிப்பிட்டார் தயாரிப்பு மேற்பார்வையாளர் குப்புசாமி. இதை இயக்குபவர் எம். எஸ். வி. யின் மகன் கோபி கிருஷ்ணா.

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி.**
வண்ணப்படங்களும், படங்களும்:
**யோகா**

---

## செயற்கை மரம் ஜி. ஆர். ஜி.



வீடு கட்டும் செலவைக் கணிசமாகக் குறைக்கக் கூடிய ஒரு புதிய பொருளை கல்கத்தா Central Glass and Ceramic Research Institute விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். Glass Reinforced Gypsum என்ற இதனைச் சுருக்கமாக ஜி. ஆர். ஜி. என்று அழைக்கின்றனர். மரத்தைப் போலவே உறுதியான இப்பொருள், தீ பிடிக்காது.
கரையான்களை ஈர்க்காது. தட்ப, வெப்ப நிலைகளால் பாதிக்கப்படாது...
தேவையான அகல, நீள கன பரிமாணங்களிலே இதனைத் தயாரித்துக் கொள்ளலாம். மரத்தை அறுப்பதிலும் இழைப்பதிலும் நேரும் சேதாரமும் நேர விரயமும் மிச்சப்படும்.
மரத்தைக் குடைந்து, ஆணி அடித்து வேலை செய்வது போல் ஜி. ஆர். ஜி.யிலும் செய்யலாம். விலை? நல்ல தேக்கைக் காட்டிலும் ஐம்பது சதவிகிதமும் சாதாரண மரத்தைக் காட்டிலும் இருபத்தைந்து சதவிகிதமும் மலிவு.
மரத்துக்கு அடிப்பது போல் பெயின்டோ வார்னிஷோ அடித்து வைத்தால் ஜி. ஆர். ஜி. அழகிலும் ஒன்றும் சோடை போகாது என்கிறார்கள்.

நன்றி: இந்தியன் எக்ஸ்பிரஸ்.

---

தயாரிப்பாளர் (கவலையுடன்): 'படுவேகமாக வந்த லாரியில் அடிபட்டும் ஹீரோ பிழைச்சது எப்படி'ன்னு பத்திரிகைகளில் எழுதியிருக்காங்களே. இப்ப என்ன செய்யறது?

டைரக்டர்: ஒண்ணும் கவலைப்படாதீங்க! அந்த ஸீனை ஸ்லோமோஷனாக மாத்திட்டால் போதும்! அப்புறம் எவன் கேள்வி எழுப்புவான் பார்த்துடலாம்!

— ரா. ரகோத்தமன்.



# மல்லிகைப் பூ

## காலம் இது

மல்லிகைப் பூ புனிதத் தன்மை தந்து சமநிலையும் அளிக்கும் நறுமணத்தை முகர்வது அவசியம். இதனால் பூமியில் மறைந்து உள்ள அதன் சாரம் இரகசிய உண்மை நாம் கிரகித்துக் கொள்ள முடிகிறது.

—சிவமஹா புராணம்

---

மல்லிகைப் பூவினால் அர்ச்சனை செய்தால் எல்லா பாவங்களிலிருந்தும் விடுபடுவான்.

மலர்களை மாலைகளாக தொடுத்து பகவானுக்கு அர்ப்பணம் செய்வது மலர்களால் அர்ச்சிப்பதைவிட எண்ணற்ற மடங்கு பலன் தரும். ஒருவன் தன் சொந்த தோட்டத்திலிருந்து மலர்களை வந்து பகவானுக்கு அர்ப்பணித்தால் அடையும் பலன்களைவிட காட்டிலிருந்து சேகரித்த பூக்களால் அர்ச்சிப்பது மும்மடங்கு பலனைக் காட்டும்.

அக்னிப் புராணம்

**அத்துடன் கிராண்ட் ஸ்வீட்ஸ் வாங்கி நல்லோருக்கு விநியோகம் செய்யவும்.**



திருமண வைபவங்களுக்கு : சீர் முறுக்கு, சீர்முள்ளுத் தேன்குழல், தேன்குழல், சீர் அதிரசம், அப்பம், திரட்டுப்பால், பருப்புத்தேங்காய் வகைகள் முதலியவை செய்துத் தரப்படும்.

**தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்**

24, 2.வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு
சென்னை-20
போன் : 412557.

### இதுவரை படிக்காதவர்களுக்கு...

அப்பா, அம்மா, தங்கை ஆகியோரைப் பிரிந்து மதுரையிலிருந்து சென்னைக்கு வேலை தேடி வருகிறான் கிருஷ்ணமூர்த்தி. சென்னையிலுள்ள உறவுக்கார மாமாவான தெய்வநாயகத்தின் உதவியாளராகச் சேருகிறான். தெய்வநாயகம் ஆளுங்கட்சி அரசியல்வாதிகளில் ஒரு முக்கியப் புள்ளி. முதல்வருக்கும் நெருக்கமானவர். மனைவியைப் பிரிந்த அவர், கோகிலா என்ற நடிகையோடு தொடர்பு கொண்டிருப்பவர். கிருஷ்ணமூர்த்தியையும் கோகிலாவையும் பினாமிகளாகப் பயன்படுத்தி, லட்சக்கணக்கில் பணம் பண்ணுகிறார் தெய்வநாயகம்.

கிருஷ்ணமூர்த்தி பற்றிக் கேள்விப்பட்ட முதல்வர், அவனை அழைத்துவரச் சொல்லிச் சந்திக்கிறார். தமது அரசியல் சதுரங்கத்தில் தெய்வநாயகத்தின் இடத்தில் இனி கிருஷ்ணமூர்த்தியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய நிலையையும் உணர்கிறார் முதல்வர். அவனுக்கு ஓர் அரசியல் தேர்வாக, மத்திய அரசை எதிர்த்துத் தமது கட்சி நடத்தும் விலைவாசி உயர்வுப் போராட்டத்தின் முழுப் பொறுப்பையும் கிருஷ்ணமூர்த்திவிடம் ஒப்படைக்கிறார். போராட்டச் செலவுக்கான பணத்திற்கும் முதல்வரே ஏற்பாடு செய்து, துணைக்கு ராமசாமி என்பவரையும் அவனோடு அனுப்பி வைக்கிறார்.

போராட்டத்தின் ஆரம்ப வேலைகளை முடுக்கிவிட, ராமசாமியின் வழிகாட்டலில் நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் அறையெடுத்துக் கட்சிக்காரர்களைச் சந்திக்கிறான் கிருஷ்ணமூர்த்தி. அங்கே பிரவாகமாகப் பெருக்கெடுத்து ஓடும் மதுவிலும், மங்கையிலும் முதன் முதலாகச் சறுக்கி விழுகிறான் கிருஷ்ணமூர்த்தி. கோகிலாவின் மகள் விநோதினிக்கும் கிருஷ்ணமூர்த்திக்கும் நிகழ்ந்த சந்திப்புகள் காதலாக மலரும் தருணத்தில் இந்தச் சறுக்கல் நிகழ்கிறது!

விநோதினி தன் தாயின் நடவடிக்கைகளையே விமர்சனம் செய்பவள். தாயின் செயல்கள் பிடிக்காமல் வீட்டை விட்டே வெளியில் வருகிறாள். கிருஷ்ணமூர்த்தியைச் சந்தித்துத் தன் தாயைப் பிரிந்து வந்ததைக் கூறுகிறாள். கிருஷ்ணமூர்த்தி எங்கே அவள் தன்னையும் பிரிந்து விடுவாளோ என்று பயப்படுகிறான். குற்ற உணர்வு உந்த, ஹோட்டலில் நடந்ததை அவளிடம் கூறுகிறான். விநோதினி மனமுடைகிறாள்...

# சுக போகத் தீவுகள்

**இதுதான்** காதலா?

நடுத் தெருவில் யாரோ புறங்கழுத்தில் தாக்கியது போலத் திடுக்கிட, திகைத்து நிற்க வைக்கிற இந்த உணர்ச்சிக்குப் பெயர்தான் காதலா? முதிர்ந்த பக்தன் கனவிலும் நினைவிலும் இறைவனையே நினைத்துக் கொண்டிருப்பது போல, தான் விரும்பும் அந்த ஜீவனையே நினைத்துக் கரைவதுதான் காதலா? நினைவையும் ஒழித்து, அந்த இன்னொரு ஜீவனே தானாக உருமாறிக் கொள்ளும் சித்து வேலைக்குப் பெயர்தான் காதல். அது ஓர் ஆக்ரமிப்பு. பலாத்காரம் இல்லாத ஆக்ரமிப்பு. எந்த விதிகளும் எழுதப்படாது மனமுவந்து செய்து கொள்ளும் சரணாகதி.

இன்னும் விநோதினி, மடக்கிய தன் கால்களின் மேல் முகத்தை வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தாள். ஒரு வழியாக அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

'கிருஷ்ணமூர்த்தி! இப்போது நீங்கள்



செய்து கொண்டிருக்கும் காரியங்களைக் காட்டிலும், மேலான நல்ல காரியங்களை நீங்கள் செய்ய முடியும். செய்ய வேண்டும் என்பது என் ஆசை. முதன் முதலில் உங்களைப் பார்த்த போது, நீங்கள் உங்கள் மாமாவுடன் இருந்தீர்கள். எனக்கு அவரைப் பிடிக்காது. ஆகவே, உங்களையும் நான் அலட்சியப்படுத்தவே நினைத்தேன். ஆனால், நினைத்ததை ஏனோ என்னால் செயல்படுத்த முடியவில்லை. என்னையும் மீறி உங்கள் மேல் எனக்கு ஈடுபாடு ஏற்பட்டது. உங்களைப் பற்றி நினைப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. உங்களை யாராவது பாராட்டினால், பாராட்டியவரை எனக்குப் பிடித்தது. உங்கள் விரோதியை நர்ன் பகைத்தேன். ஏன் இப்படி? என்னை நான் எப்போதும் இழப்பதில்லை, கிருஷ்ண மூர்த்தி. எனக்குப் பிடிக்கவில்லை என்றால், என் அம்மாவைக்கூட நான் பகைத்துக்

## பிரபஞ்சன்

கொள்பவள். அப்படிப்பட்ட நான், சிந்தனையால், உங்களிடம் ஈர்க்கப்பட்டேன். எப்போதும் உங்களுடன் இருக்க வேண்டும் என்றே என் மனம் விரும்புகிறது. இரண்டு நாள் கூட உங்களைப் பார்க்காமல், உங்கள் குரலைக் கேட்காமல் என்னால் இருக்க முடியவில்லை. உங்களைப் பார்க்காமல், கேட்காமல் இருக்கையில், உங்களை நான் இழப்பது மாதிரி எனக்குப் படுகிறது. அம்மா சொன்னாள், 'எது செய்தாலும் யோசித்து முடிவெடு' என்று. தனியாக என்ன யோசிப்பது. எப்போதும் உங்களைத்தானே நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். ஓர் அழகிய பாட்டைக் கேட்டால், என்னுடன் இருந்து அதை ரசிக்க நீங்கள் இல்லையே என்று இருக்கிறது. நல்ல சுவையான உணவு



கிடைக்கும் போது, கூட இருந்து உண்ண நீங்கள் இல்லையே என்று படுகிறது. நல்ல கருத்துக்களைப் படிக்க நேரும் போது, அதைப் பகிர்ந்து கொள்ள நீங்கள் இல்லையே என்று தோன்றுகிறது. நல்ல ஆடையை, புதுசு கட்டிக் கொண்டால், அதை நீங்கள் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது. உங்கள் கைகளோடு என் கைகளைப் பிணைத்துக் கொண்டு, அதிகாலைகளில், முன்னிரவுகளில் கடற்கரையில் நடக்க வேண்டும் போல் தோன்றுகிறது. கடற்கரை மணலில் அமர்ந்து, ஆள் அரவமற்ற நள்ளிரவில் உங்களுடன் பேசிக் கொண்டிருக்க வேண்டும் என்று மனசு ஆசைப்படுகிறது. இதெல்லாம் ஏன், ஏன் என்று மனம் குடைந்து கொள்கிறது. இதன் வேரைத் தோண்டிக் கண்டுபிடிக்க வேண்டும் என்று இருந்தது. கண்டுபிடித்து விட்டேன். அது நீங்கள்தான்.''

பரவச மழையில் நனைந்தபடி அமர்ந்திருந்தான் கிருஷ்ணமூர்த்தி.

ஆனந்தம் என்பது இதுதானே! தான் நேசிக்கப்படுகிறோம் என்று அறிகையில் ஏற்படுகிற இன்பத்தை நிகர்த்த வேறு இன்பம் எது?

கிருஷ்ணமூர்த்தி சொன்னான்.

''விநோதினி, நானும் இதுபோன்ற அவஸ்தையைத்தான் பட்டுக் கொண்டிருக்கிறேன். உங்களால் மிக அழகாக அதைச் சொல்லி விட முடிகிறது. என்னால் முடியவில்லை. ஆனால், நாம் இருவருமே நம்மைப் பற்றியே, ஒருவரை ஒருவர் நினைத்துக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறோம்'' என்றவன் சில கணங்கள் கழித்துச் சொன்னான்.

''நானும் உங்களை நேசிக்கிறேன், விநோதினி. மிக ஆழமாகவே நேசிக்கிறேன். இது சுமுகமாக நடந்து முடிய வேண்டும்..''

''முடியும், கிருஷ்ணமூர்த்தி. ஆனால்..''

''என்ன ஆனால்...

''எனக்கு உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டியிருக்கிறது. இப்போது நீங்கள் செய்து கொண்டிருக்கும் வேலை எனக்கு அறவே பிடிக்கவில்லை.''

''அரசியலைச் சொல்கிறீர்களா?''

''நீங்களும் உங்கள் மாமாவும் செய்வது அரசியல்தானா? அரசியல் என்றால் நல்லது தானே. மக்களுக்குப் பொருளாதார, சமூக உத்தரவாதம் தருகிற பெரிய கலை அல்லவா, அரசியல். இப்போது அதுவா நடக்கிறது? முதல் போடாத தொழிலாக அல்லவா இங்கு அரசியல் நடக்கிறது. இருக்கிற ஐந்தாண்டுகளில் எவ்வளவு சுருட்டலாம் என்பது அல்லவா உங்கள் கவலை? திருடர்கள் கூட ஒளிந்தும், இருட்டிலும் சஞ்சரிக்கிறார்கள். திருடர்கள், திருடர்களாக மட்டும்தான் இருக்கிறார்கள். அரசியல் பண்ணுவதில்லை. இந்த அரசியல்வாதிகள், ஒரு பக்கம் திருடிக் கொண்டும், மறுபக்கம் அதிகாரத்தில் அமர்ந்து கொண்டும் எப்படி இரட்டை வேடம் ஏற்கிறார்கள்? அதாவது, குற்றவாளிகளே நீதிபதிகளாக எப்படி இருக்க முடிகிறது? ஆகவே, கிருஷ்ணமூர்த்தி, ஒன்று உண்மை அரசியல்வாதியாக இருங்கள். அல்லது பகிரங்கமாகத் திருடுங்கள். என் துணைவர் ஓர் அரசியல்வாதியாக இருக்கலாம். அதில் தப்பில்லை. அவர் ஒரே சமயம் அரசியலும் பண்ணிக் கொண்டு, திருடனாகவும் இருக்க முடியாது.''

''என்னைத் திருடனாகவா நினைக்கிறீர்கள்?''

''பின், நீங்கள் என்னவென்று உங்களை நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் எம்.ஏ. படித்த திருடன். இங்கிலீஷ் பேசுகிற, காந்தீயம், திராவிடம், கம்யூனிசம், சோஷலிஸம் பேசுகிற திருடன். ஒன்றுமறியா விவசாயிகளை ஏமாற்றி அவர்கள் நிலத்தைப் பறித்து, அந்நிய தேசக் கம்பெனிக்கு விற்கிற தேசத்துரோகி. சே, ஏன் உங்களுக்கு வெட்கமே வருவதில்லை?''

கிருஷ்ணமூர்த்திக்குக் கோபம் கிளர்ந்தது. அவன் அவளைப் புண்படுத்த வேண்டும் என்று நினைத்தான்.

''விநோதினி, நானும் மாமாவும் திருடர்கள் என்றே வைத்துக் கொள்ளுங்கள். தேசத் துரோகியாகவே நாங்கள் இருக்கிறோம். பரவாயில்லை. உங்கள் அம்மா யார்? கோகிலாவை இதே பெயரிட்டு அவர் முன் அழைப்பீர்களா? அந்தத் தேசத் துரோகி சம்பாதிக்கிற பணத்தைக் கொண்டு போய், ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் உணவு சாப்பிடுகிற நீங்கள், இப்படி விமர்சனம் செய்கிற யோக்யதையை இழந்து விட்டீர்கள்.''

விநோதினி அவன் கண்களை உற்றுப் பார்த்தாள். பிறகு சிரித்தாள்.

''நீங்கள் என்னைக் கோபப்படுத்த எண்ணுகிறீர்கள், கிருஷ்ணமூர்த்தி. உங்கள் முயற்சியில் நீங்கள் தோற்றுத்தான் போவீர்கள். எனக்குக் கோபம் வராது. ஏனெனில் என் அம்மாவின் பொய்களை அவள் முகத்துக்கு எதிரே விமர்சிக்கிற முதல் பெண் நான்தான். அதனால்தான் அவரைப் பிரிந்து வந்திருக்கிறேன்.''

''சாரி, விநோதினி.''

அவர்கள் எழுந்து நடந்தார்கள். பெரிய ஆரஞ்சுப் பழம் மாதிரி விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. அந்த ஒளியில் அவள் முகத்தைப் பார்த்தான் கிருஷ்ணமூர்த்தி.

அவள் எதையோ தீவிரமாகச் சிந்திப்பது மாதிரி தோன்றியது.

''என்ன யோசிக்கிறீர்கள்?''

''மீண்டும் நாம் எப்போது சந்திக்கப் போகிறோம் என்று எனக்குத் தோன்றியது!''

''என்ன சொல்கிறீர்கள்?''

''இன்னும் சரியாகப் பதினைந்து நாட்களில் நான் டில்லிக்குப் பயணமாக இருக்கிறேன். அங்கு என் தோழி ஒருத்தி இருக்கிறாள். அவளுடன் தங்கியிருந்து கொண்டு வேலைக்கு முயற்சி செய்யப் போகிறேன். ஏதாவது ஒரு போதிக்கும் வேலை. எம்.பில். ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. எப்படியும் ஒரு வேலை செய்ய வேண்டும்தானே.''

''அதை இங்கு செய்யலாம்தானே...''

''செய்யலாம்தான். இங்கிருந்தால் மீண்டும் மீண்டும் என் அம்மாவை, அல்லது உங்களைச் சந்திக்க வேண்டி வரும். உங்கள் இருவரையும் சந்திக்க நான் தவிர்த்தாலும், உங்களைப் பற்றிய செய்திகள் எனக்கு வந்து என்னைச் சிரமப்படுத்தும்.''

''ஆக, சுத்தமாக எங்களை வெறுத்து விட்டுச் செல்கிறீர்கள் என்று சொல்லுங்கள்.''

''செல்கிறேன். 'வெறுத்து விட்டு' என்பதை மறுக்கிறேன்.''

''நீங்கள் கோபப்படுகிறீர்கள்.''

''எனக்கு உங்கள் மேல் கோபம் இல்லை. ஆனாலும், நீங்கள் உங்கள் இப்போதைய வேலைகளை மாற்றிக் கொள்ளாத பட்சம் நாம் என்றும் சேர்ந்து வாழும் நிலைமை வராது, கிருஷ்ணமூர்த்தி.''

ஓர் ஆட்டோவை நிறுத்தினாள் விநோதினி.

''நான் விடைபெறுகிறேன். சந்திப்போம். கடிதம் எழுதுவேன். எப்போது உங்கள் கறையை நீங்கள் கழுவிக் கொள்ள முன் வருகிறீர்களோ, அப்போது எழுதுங்கள். நான் வந்து விடுவேன்.''

அவள் ஆட்டோவுக்குள் ஏறி அமர்ந்தாள்.


அவளைப் பார்த்து இரு கைகளையும் கூப்பி, ''வணக்கம்'' என்றான்.

ஆட்டோ கண்ணுக்கு மறையும் வரை அதையே பார்த்தவாறு விக்கித்து நின்றான் கிருஷ்ணமூர்த்தி.

**ந**ந்தன், கடைசி ரயிலில் வந்து தோளில் மாட்டி இருந்த ஜோல்னா பை சகிதம் இறங்கினார். ஸ்டேஷன் கழுவித் துடைத்து வைத்த தட்டு மாதிரி, ஆள் அரவம் அற்று சுத்தமாக இருந்தது.

ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தார். வழக்கமாக, மூக்கையன் டீக்கடையில், படு ஸ்ட்ராங்காக, சர்க்கரை இல்லாத டீ, அந்த நேரத்தில் குடிக்க வேண்டும் அவருக்கு. நந்தனைப் பார்த்தவுடன் மூக்கையன் டீயைப் போட்டுக் கொண்டு அவரிடம் நீட்டினான். ஒரு ஸ்டூலில் அமர்ந்து நிதானமாக டீயை அருந்தினார் அவர். பக்கத்துப் பெட்டிக் கடையில் மாலைப் பத்திரிகைப் போஸ்டர்கள் தொங்கின. ஆளுங்கட்சிப் பத்திரிகை போஸ்டர் தவிர மற்றவற்றில், 'முதல்வர் நில பேர ஊழல்' என்ற வாசகமும், 'மாவட்டச் செயலாளர் தெய்வநாயகம் கைது' என்ற வாசகமும் பெரிய எழுத்தில் இருந்தன. சுமார் ஆறு மாத கால உழைப்பின் பலன் அன்று வெளிவந்ததைக் குறித்து மனத்துக்குள் மகிழ்ந்தார். பெட்டிக் கடையில் ஒரு பாக்கெட் சிகரெட் வாங்கிக் கொண்டு நடந்தார்.

காற்று சில்லென்று வீசிக் கொண்டிருந்தது. முரட்டுக் கதர் ஜிப்பாவையும் ஊடுருவிக் காற்று தாக்கியது. குளிரைச் சமாளித்துக் கொண்டு நடந்தார்.



''எங்கம்மாவை உடனே புறப்பட்டு வரும்படி தந்தி அடிக்கச் சொல்றியே, ஏனாம்?''

''பாவம் அவங்க. கிராமத்தில் கஷ்டப் பட வேண்டாமே. இங்கே வந்தா நாமும் தண்ணீர் கொண்டுவர ஆள் தேட வேண்டாமேன்னுதான்...''

— பொடுசி.

கரும் போர்வை மாதிரி இருந்தது அந்தத் தார் ரோடு. ரயில் கேட்டைக் கடந்து, மார்க்கெட்டைக் கடந்து, ஏரிப் பள்ளத்தைக் கடந்து, மேடேறி இறங்கினால் கலிங்கா காலனி வரும். அங்குதான் இருந்தது அவர் வீடு.

அன்றுதான், அந்த ஊழல் அச்சேறுகிறது என்று தெரிந்து கொண்டு, அரசு, போலீஸ் தரப்பில் இருந்து எத்தனை மிரட்டல்கள் தான் அவருக்கு வந்தன. ஆசிரியர் உறுதியானவராய் இருந்ததால் அவர் உழைப்பு அரங்கேறியது. நாட்டுக்கு ஒரு பெரிய பணியைச் செய்த நிம்மதி அவருக்கு ஏற்பட்டது. அந்த மகிழ்ச்சியில் நின்று, பையிலிருந்து சிகரெட் பாக்கெட்டை எடுத்து ஒன்றை எடுத்துப் பொருத்திக் கொண்டு, நெருப்புக் குச்சியைக் கிழித்தார்.

பற்ற வைத்துக் கொண்டு நிமிர்கையில், பத்தடி தூரத்தில் நான்கு பேர் நிற்பது தெரிந்தது. அவர்களின் தோற்றம் சட்டென ஓர் அச்சத்தை அவரிடம் ஏற்படுத்தியது. சுற்றிலும் மனித நடமாட்டமே இல்லாதது, அவர் நினைவுக்கு வந்தது. அவர் ஏரிப் பள்ளத்தில் நின்று கொண்டிருந்தார். மனைவி அடிக்கடி சொல்வது நினைவுக்கு வந்தது. 'நடு ராத்திரியில் வர்றீங்க. ஊரை எல்லாம் திட்டி எழுதிப் பகையைச் சம்பாதிச்சுட்டீங்க. எனக்கு என்னமோ பயமா இருக்குங்க...'

மனைவியும், கல்யாணத்துக்கு நிற்கிற இரண்டு பெண்களும் நினைவுக்கு வந்தார்கள்.

அந்த நான்கு பேரும் அவரை நெருங்கி வந்தார்கள்.

ஒருவன் தடியாக இருந்த உருட்டுக் கட்டையை ஓங்கி அவர் தலையில் அடித்தான். அடித்துக் கொண்டே இருந்தான்.

சிகரெட் பல அடி தூரத்திலிருந்து புகைந்து கொண்டே இருந்தது.

ஆறாவது நிமிடம் நந்தன் பிணமானார்.

(தொடரும்)

# சௌதாமினி படித்த பள்ளி

**அழகிய மணவாளன்** கிராமத்துக்கு வந்ததை முதலில் பார்த்தவர் ஆராவமுது தான். ஆற்றில் அவர் குளித்து விட்டுப் படியேறும் போது, அழகிய மணவாளனின் கார் புழுதியைக் கிளப்பி விட்டுப் பறந்தது. பார்த்தார். அதே முகம். அதே மூக்கு. நரை விழுந்திருந்த தலை.

அவர் போய் இன்னும் அழகிய மணவாளனைப் பார்க்கவில்லை. பெரியய்யா வீட்டில்தான் தங்கியிருப்பான்.

வடக்கேயும் கடல் தாண்டியும் ஓஹோ வென்று பணம் பண்ணி விட்டு ஊர் வந்திருக்கிறவனைப் பார்க்க — பார்க்க என்ன பார்க்க — அவனைப் பரந்து கவிந்து மூடி மறைத்துக் கொள்ள நூறு ஜனம் போகும்.

பணக்காரனில்லையா?

அவன் வெற்றி வெளிச்சத்தைக் கொண்டாடும் மேல் வெள்ளம் அடங்கட்டும்.

'என்ன வேலையோ என்னமோ, ராத்திரிக்கு இருப்பானோ புறப்பட்டு விடுவானோ, இப்போ விட்டால் மறுபடியும் பார்க்கிற ஆளா அவன்...' என்று மனசில்





ஒரு பக்கம் அடித்துக் கொண்டது.

அவன் கார் கிளப்பி விட்ட நினைவுப் புழுதி இன்னும் அடங்கவில்லை.

காலையில் குளித்து விட்டு வந்து, பிள்ளையார் கழுவிப் பூஜை முடித்து, அடுப்பு மூட்டிக் கொஞ்சம் காப்பி போட்டுப் படுக்கையில் படுத்திருந்த அலமேலுவுக்குக் கொடுத்துத் தானும் குடித்து கையோடு ஏற்றி வைத்த உலையில் அவளுக்குக் கஞ்சி போட்டு இறக்கி விட்டு, அவளுக்கு ஊசி போடக் கம்பவுண்டரை அழைத்து வரத் தெருவில் இறங்குகிற வரையும் அந்த நினைவுப் புழுதி அடங்கவில்லை.

''கதவை வெளியே தாழ்ப்பாள் போட்டுடறேன் அலமேலு.''

''நீங்க ஒண்ணுமே சாப்பிடலியா?'' என்று ஈனசுரத்தில் கேட்டாள் அலமேலு.

''கம்பவுண்டரை அழைச்சுட்டு வந்து ஊசி போட்டப்பறம் டவுனுக்குப் போகணும். இன்னிக்குப் பென்ஷன் தேதி. அங்கே ஏதாவது பலகாரம் சாப்பிட்டுக்கறேன்.''

''பென்ஷன் கைக்கு வர ரெண்டு ரெண்டரை ஆயிடுமே.''

''ஆகாது. இப்ப டிரஷரியிலே புதுசா வந்திருக்கிற குமாஸ்தா என் பழைய மாணவன். வாத்தியாரைக் காக்க வைக்க மாட்டேன் சார்னு போன மாசமே சொன்னான்னு சொல்லலே...''

அலமேலுவுக்கு அடிக்கடி ஞாபகம் தப்பி விடுகிறது. அதிலும் எத்தனையோ மாணவர்கள் பெருமைகளை இவர் சொல்வதில் எது நினைவில் நிற்கப் போகிறது?

''அத்தோட விடுங்கோ! அவனண்டையும் பள்ளிக் கூடக் கட்டடம் இடிஞ்சிருக்கேப்பான்னு ஆரம்பிச்சுடாதீங்கோ.''

கதவைச் சாத்து முன் நமட்டுப் புன்முறுவலோடு நடைக்கு நேரே பெஞ்சில் படுத்திருந்தவளைப் பார்த்தார் ஆராவமுது.

நோய்ப் படுக்கையில் நலிந்திருந்த முகத்தில் ஒரு சிடுசிடுப்பான பச்சாத்தாபம் அவருக்காகக் காத்திருந்தது.

'ஒங்களுக்கு எந்த ஜன்மத்திலே புத்தி வரப் போறதோ?' என்று தலையில் அடித்துக் கொள்ள வழியற்ற பச்சாத்தாபம் அது.

'இதான் அலமேலு!'

மனகள் சொல்லிக் கொண்டே அவர் கதவைச் சாத்தினார்.

தெருவில் இறங்கி நடக்க நடக்க வணக்கம் சொன்ன கைகளும், எழுந்து நின்ற கால்களும், பார்த்தும் பாராமல் திரும்பிக் கொண்ட முகங்களும் அலமேலு மட்டுமில்லை; இதுதான் ஊர், இது மாதிரியே தான் உலகம் என்று சொல்லுகிறாற் போல் பட்டது.

கம்பவுண்டர் வீட்டுக்குப் போகிற வழியில்தான் பள்ளிக்கூடம்.

ஆராவமுதின் கால்கள் சற்று நின்றன.

கட்டடம் ஆங்காங்கே விரிசலாகி நின்றது. சில இடங்களில் ஓடுகள் இடம் பெயர்ந்து விளிம்பு வரை பிதுங்கி நின்றன.

நினைவுப் புழுதி மீண்டும் கிளம்பிற்று.

அந்தக் கட்டடம் பழைய ஜில்லா போர்டுக் கட்டடம். வெள்ளைக்கார கலெக்டர் காலத்தில் கட்டியது. அதுதான் இன்னமும் விழாமல் நின்று கொண்டிருக்கிறது.

அதோ அங்கே காக்கை உட்கார்ந்து கத்



வையவன்




— அரகண்டநல்லூர் சாதிக்பாஷா.

இக் கொண்டிருக்கிற சட்டத்துக் கீழே ஐந்தாவது வகுப்பு. முதல் பெஞ்சு. டெஸ்க் இருந்த காலம். பெஞ்சுக் கோடியில் ஜன்னலோரம் அழகிய மணவாளன் உட்கார்ந்திருப்பான். பக்கத்தில் அவர்; ஆராவமுது.

இவர்கள் வரிசை வலது வரிசை.

இடது வரிசையில் பெண்கள். வலது வரிசையை அடுத்த பெஞ்சுக் கோடியில் செளதாமினி. பெரியய்யா வீட்டுப் பெண். ஒரு நாளைக்கு அவள் வகுப்புக்கு வராவிட்டால் வகுப்பில் ஏதோ விளக்கு அணைந்த இருட்டு மாதிரி ஒரு சூன்யம். ஆராவமுதுக்கு மட்டுமில்லை, அழகிய மணவாளனுக்கும்தான்.

எல்லாம் எப்போதைய சங்கதியோ!

வருஷக் கணக்குப் போட்டால் ஐம்பதை எட்டும். எத்தனையோ நடந்து முடிந்து விட்டது. வகுப்பறைக்குள் கூட தரை கூளமாகிச் சுவர்களின் மேல்பூச்சு பாளம் பாளமாக உதிர்ந்து விட்டது.

அழகிய மணவாளன் பின்னைவாள் ஆகி ஜயன்ட் காண்ட்ராக்டரானான்.

ஆராவமுது அதே பள்ளிக் கூடத்தில் ஆசிரியராகி ரிடையருமானார்.

செளதாமினிக்குப் பதினாறு வயசில் கல்யாணமாகி, பதினெட்டு வயசில் அவள் விதவையாகி இருபத்தைந்து வயசில் ஆற்றில் புது வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போகப்பட்டாள். தற்கொலை என்றார்கள்.

கட்டடம் இறவாத ஞாபகங்களோடு இன்னும் உயிர்மூச்சு விட்டுக் கொண்டு நிற்கிறது.

எது நிலைக்கிறது?

மனசில் ஒரு பெருமூச்சு சமாதியாக, ஆராவமுது நடையை எட்டிப் போட்டார்.

'ஞாபகம் நிலைக்கிறது.' ஜன்னலுக்குள் எட்டிப் பார்த்துக் கூவும் விஷமக்காரப் பையன் போல் ஓர் எண்ணம் எக்களித்தது.

'ம்க்கும்... புத்தி சுவாதீனம் உள்ளவரை' என்று தம்மைத் தாமே மடக்கினார்.

'அட, அதுவரைக்குமாவது நிலைக்கிறதா இல்லையா?' மனசு எதிர்மடக்குப் போட்டது.

வாஸ்தவம். செளதாமினி விவரம் தெரியாத கள்ளமறியாத பால்ய காலத்தில், இன்னதென அறியாத குதூகலங்களுக்கும் மனசில் சுழியிட்ட கற்பனைகளுக்கும் ஒரு தீப வெளிச்சம்.

பெரியய்யா உயிரோடு இருந்திருந்தால் அவள் ஞாபகத்திற்காகவே கட்டடத்தைச் சரிசெய்து கட்டிக் கொடுத்திருப்பார்.

நிறையப் பேர் அப்புறமும் படித்தார்கள். பெரிய மனிதர்களானார்கள். எலக்ஷனில் நின்றார்கள். எம்.எல்.ஏ.வாகக் கூட வந்தார்கள்.

ஆலந்துறைப் பள்ளிக்கு விமோசனம் வந்தபாடில்லை.

மரத்தடியிலும் மைதானத்திலும் கீற்றுக் கொட்டகையிலும் படித்துத் தலைமுறைகள் கடந்து சென்றன.

எப்போதுமே அரசாங்கத்துக்கு நிதி நெருக்கடியாம்.

''இது செவுருமெண்டு விஷயமில்லே'' என்று ஒவ்வொருவரும் எடுத்துக் கட்டு வதைத் தட்டிக் கழித்தார்கள்.

தாம் படித்த பள்ளி, தாம் பணியாற்றிய பள்ளி, தாம் கத்திக் கத்தித் தொண்டைத் தண்ணீர் வற்றிய பின் ஒரு ரோஜா மாலையும் இரண்டு ஆப்பிளுமாகத் தம்மை வழியனுப்பிய பள்ளி.

இந்தப் பற்றுக்கு இன்னும் வெட்கம் விட்டபாடில்லை.

எந்தப் பெரிய மனிதனைப் பார்த்தாலும் இரண்டு கையெடுத்து ஒரு யாசகச் சிரிப்போடு போய் நிற்க வைத்து விடுகிறது.

''ஓமக்கென்ன வாத்தியாரே! நீர்தான் ரிட்டயராச்சே. இருக்கறவங்க பார்த்துக்கு வாங்க. ஹாய்யா திண்ணையிலே படுத்துக் கெடக்கறதை விட்டுட்டு எதுக்கு இப்படி அலைச்சல்?''

பொதுவாய் இப்போது அபிப்பிராயம் இப்படித்தான் வருகிறது.

கம்பவுண்டர் எதிரில் வந்து கொண்டிருந்தார், சைக்கிளைத் தள்ளியவாறு.

''ஒங்களைத்தான் பார்க்க வந்துக்கிட்டிருக்கேன்.''

''என்னையா? நான்தான் சார் ஊசி போட ஒங்களை வீட்டுக்கு அழைச்சுப் போக வந்தேன்.''

''ஊசிதானே... போட்டுடுவம் வாங்க.''

சைக்கிளை உருட்டிக் கொண்டே சம வேகத்துக்கு நடந்தார் கம்பவுண்டர்.

''ராத்திரி இருமல் இருந்ததா?''

''முன்னேரத்திலே இல்லே. விடியற சமயம் எழுந்து உட்கார்ந்துட்டா. ஓயாத இருமல்.''

''இன்னிக்குக் கொஞ்சம் மருந்தை மாத்தறேன். அப்புறம் நான் ஒங்களைத் தேடி வந்த விவரத்தை நீங்க விசாரிக்கலியே.''

''சொல்லுங்க.''

# உங்கள் குழந்தைக்கு
# அளியுங்கள் ஸெரிலாக் அனுகூலம்



## திட உணவின் தொடக்கத்திலிருந்தே

உங்கள் குழந்தைக்கு நான்காம் மாதத்திலிருந்தே பாலோடு திட உணவும் தேவை. அப்போது ஸெரிலாக் அனுகூலம் அளியுங்கள்.

**போஷாக்கு அனுகூலம்:** ஒவ்வொரு முறை ஸெரிலாக் மட்டும் போதும். புரதச்சத்து, கார்போஹைட்ரேட், கொழுப்பு, வைட்டமின், மற்றும் தாதுப் பொருட்கள் ஆகிய எல்லா போஷாக்குச் சத்துக்களும் சரியான விகிதத்தில் உங்கள் குழந்தைக்குக் கிடைக்கிறது.

**சுவை அனுகூலம்:** ஸெரிலாக் சுவையில் குழந்தைகளுக்குக் கொள்ளை ஆசை.

**தயாரிப்பதில் அனுகூலம்:** ஸெரிலாக் ஏற்கனவே பதமாக்கப்பட்டது; பாலும் சர்க்கரையும் கலந்தது. காய்ச்சி ஆறிய நீரில் கலந்தாலே போதும்.

**தேர்ந்தெடுக்க அனுகூலம்:** இப்போது ஸெரிலாக், மூன்று வெவ்வேறு வகைகளில்!

*சுகாதாரமான முறையில் தயாரிக்கவும், சரியான விகிதத்தில் போஷாக்கு கிடைக்கவும் டின்னில் தரப்பட்டுள்ள குறிப்புகளை தயவு செய்து பின்பற்றுங்கள்.*




6 மாதங்களிலிருந்து

4 மாதங்களிலிருந்து

6 மாதங்களிலிருந்து

இலவசம்
ஸெரிலாக் பேபி கேர் புத்தகம்
எழுதுங்கள்: ஸெரிலாக்,
தபால் பெட்டி எண். 3
புது தில்லி-110008

Nestlé

**ஸெரிலாக் பராமரிப்பு: முழுமையான போஷாக்கு, சிறப்பான சுவை**

RK SWAMY/FSL/5112/TAM

"ஒங்க பால்ய நண்பர் வந்திருக்காரே."
"யாரு மணவாளன்தானே.
"ஆமாம். பார்க்கப் போயிருந்தேன். ஒங்களைப் பத்தி விசாரிச்சாரு. கையோட கூட்டியாரச் சொன்னாரு."
"சொன்னானா?"
"ஆமா சார்."

தாடையைச் சொறிந்து கொண்டே கம்பவுண்டர் முகத்தில் உண்மையைத் தேடினார் ஆராவமுது.

"நெஜந்தான் சார்!"
"அப்ப வாங்க ஊசி போட்டதும் போய் வருவோம்!"

**அ**லமேலுவுக்கு ஊசி போட்டு முடித்ததும் சைக்கிளில் அவரை டபிள்ஸ் ஏற்றிக் கொண்டு கம்பவுண்டர் பெரியய்யா வீட்டுக்கு மிதித்தார்.

வீட்டுக்குள்ளே ஈஸிசேரில் அழகிய மணவாளன் படுத்திருந்தார். முப்பது வருஷத்துக்கு மேலாகப் பணம் புழங்கிய பெருமிதத்தில் வந்திருந்த ஒரு மேனி வளப்பம். ஒரு தெம்பான தன் நிச்சயம். கண் அசைவில் ஆளை எடை போடுகிற மிடுக்கு.

இவன் யாரோ அந்நியன் போல் உணர்ந்தார் ஆராவமுது.

"வாடா ஆராவமுது" என்று ஈஸிசேரை விட்டு எழுந்து வந்து கட்டிப் பிடித்த போது, பழைய மணவாளன் புனர் ஜன்மம் எடுத்தது போல் ஆராவமுதுக்குப் பட்டது.

"உட்கார்... உட்கார்" என்று சோபாவுக்கு அழைத்துப் போய்ப் பக்கத்தில் உட்கார்த்தி வைத்துக் கொண்டார் அழகிய மணவாளன்.

அவர் பெரும்போக்கில் தான் இன்னும் சிறுத்து விட்டதாகக் குறுகினார் ஆராவமுது.

"என்ன பண்ணிட்டிருக்கே?"
"ரிட்டயராய்ட்டேன்."
"அப்படியா எப்ப?"
"ரெண்டு வருஷமாச்சு."

எவ்வளவோ பேச வேண்டியிருந்தது. அன்றைக்குப் பென்ஷன் என்பதும் நடுவில் ஞாபகத்துக்கு வந்தது.

"இன்னிக்குப் பென்ஷன் தேதிப்பா!"
"ட்ரஷரிக்குப் போகணுமோ?"
"போய்ட்டு வந்துடறேனே..."
"டவுன்ல எனக்கும் வேலையிருக்கு! என்னோட வண்டியிலே வாயேன். பேசிட்டே போவோம்."

ஆராவமுது தயங்கினார்.

"அட ஆர்றாவன்! நீயும் வண்டியிலே வர்றே... ஏழுமலை வண்டியை எடு."

உத்தரவுதான்! ஆராவமுதுக்கு இசைவது தவிர வழியில்லை.

காரில் உட்கார்ந்ததும் கதவை அடித்துச் சாத்தி விட்டு "ஏழுமலை மெதுவாவே போ!" என்றார் அழகிய மணவாளன்.

கார் பள்ளிக்கூடத்தைத் தாண்ட வேண்டியிருந்தது.

"நிறுத்துப்பா!" என்று உத்தரவிட்டார் அழகிய மணவாளன். கார் நின்றது.

"என்ன ஆராவமுது, நம்ம ஸ்கூல் இந்தக் கதியாயிருக்கு."

இதுதான் சந்தர்ப்பம் என்று ஆராவமுதின் உள்ளத்தில் எதுவோ கூவியது.

"எடுத்துக் கட்டித் தர ஆளில்லே."

அதைக் காதில் வாங்கிக் கொள்ளாதது போல் அழகிய மணவாளன் கட்டடத்தைப் பார்த்தார்.

"அதானப்பா நம்ம க்ளாஸ்!" அவர் விரல் நீண்டது.

"ஆமாம்."
"ஜன்னலோரமா நான் ஒக்காருவேன். ஒரு சமயம் கொட்டாப்புளி வாத்தியார் ராத்திரி லாந்தர் வெளக்கிலே ட்யூஷன் சொல்லித் தருவாரே ஞாபகமிருக்கா?"
"இருக்கே. ஏழெட்டுப் பேர் வருவோம். அப்ப அவரு இங்கேயே தங்கியிருப்பார்."
"ஜன்னல் வழியா வெளியே தூங்கு மூஞ்சி மரத்திலே ஒவ்வொரு கௌையிலும் ஒரு மின்மினி மினுக்கும். நீ பார்த்திருக்கியா ராத்திரிலே."
"பார்த்திருக்கேன்."
"சௌதாமினி கூட நம்பளோட படிச்சால்லே."

'இந்த ஞாபகங்களுக்காக நீ இதை எடுத்துக் கட்டி விடு மணவாளா...' ஆராவமுது மனகள் இறைஞ்சினார்.

"டிரைவர் வண்டியெடுப்பா!"
"நீ இதை எடுத்துக் கட்டறதுக்காக எங்கெங்கியோ அலையறேன்னு கேள்விப் பட்டேன். ரொம்ப டச்சிங்கா இருந்தது! இந்தக் காலத்திலே எவன் இப்படி நெனைக்கிறான் சொல்லு..."

ஆராவமுது ஆ வ லோ டு, ஒரு வெட வெடப்போடு, தன் முடிவை அவர் வெளியிடப் போகிற குதூகலத் தவிப்பைத் தாள முடியாத தவிப்போடு எதிர்பார்த்தார்.

"நீ அந்தப் பேப்பரெல்லாம் எடுத்து எங்கிட்டக் குடு. நான் செக்ரட்டரியேட்ல போய் மூவ் பண்ணிப் பார்க்கறேன். இதெல்லாம் கவர்ன்மெண்ட் செய்ய வேண்டிய வேலைப்பா!"

ஆகாய வெளியிலிருந்து தரையில் வந்து விழுந்த மாதிரி உணர்ந்தார் ஆராவமுது.

---

"இதென்ன அநியாயமா இருக்கு... சீர் வரிசையோட மாப்பிள்ளைக்கு ஏன் பழைய ஸ்கூட்டர் ஒண்ணு, புது ஸ்கூட்டர் ஒண்ணு கேக்கிறாங்க...?"
"பழசு, ஓட்டக் கத்துக்கவாம்... புதுசு கத்துக்கிட்டப்புறம் ஓட்டவாம்..."


— எஸ். நாகராஜன்.



# தங்க கவரிங் நகைகளுக்கு
# தன்னிகரற்ற பெயர் ''மேரி''


கண்ணைக் கவரும், அழகும், பொலிவும், தரமும் உத்திரவாதமும் உடைய உலகப் புகழ்பெற்ற 22ct ''மேரி'' தங்க கவரிங் நகைகளை வாங்கி அணிந்து மகிழுங்கள்!

நகைகளின் நம்பர்களைக் குறிப்பிட்டு எழுதினால் வி.பி.பி. மூலம் நகைகள் அனுப்பப்படும். வி.பி.பி. சார்ஜ் தனி. இலவச கேட்லாக்கைப் பெற எழுதுங்கள்!




## மேரி கோல்டு கவரிங் ஒர்க்ஸ்

தபால்பெட்டி : 1405, 14, ரங்கநாதன் தெரு,
தி. நகர், சென்னை-600017.




# பூர்வகதை

இன்றைக்குச் சுமார் ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்பு விஜயாலய சோழன் இரண்டாவது சோழ சாம்ராஜ்யத்துக்கு அடிகோலினான். சோழ நாட்டின் சேனா வீரர்கள் நாலு திசைகளிலும் படை எடுத்துச் சென்று வெற்றிக்கு மேல் வெற்றி அடைந்து சோழ சாம்ராஜ்யத்தின் எல்லையை விசாலப்படுத்தி வந்தார்கள். சுந்தர சோழ சக்கரவர்த்தியின் காலத்தில் மதுரைப் பாண்டிய குலத்தின் கடைசிப் பிரதிநிதியான வீர பாண்டியன் கொல்லப்பட்டான். பாண்டிய நாடு சோழ சாம்ராஜ்யத்தில் முற்றிலும் ஐக்யம் அடைந்தது.

சுந்தர சோழ சக்கரவர்த்தியின் மூத்த புதல்வனும் வீர பாண்டியனுடைய தலை கொண்டவனுமான ஆதித்த கரிகாலன் சோழ சாம்ராஜ்யத்தின் பட்டத்து இளவரசனாக முடி சூட்டப் பெற்றான். வட திசைச் சைன்யத்துக்கு மாதண்ட நாயகனாகிக் காஞ்சியைத் தன் இருப்பிடமாகக் கொண்டான். காஞ்சியில் புதிதாகப் பொன் மாளிகை கட்டித் தன் தந்தையை அங்கு வந்து இருக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டு, பழைய வாணர் குடியில் பிறந்த வந்தியத்தேவன் என்னும் வீரனிடம் ஓலை கொடுத்து அனுப்பினான்.

சுந்தர சோழ சக்கரவர்த்தி அரண்மனையில் பாரிச வாயுவினால் பீடிக்கப்பட்டு நடமாட்டமின்றிப் படுத்த படுக்கையாக இருந்தார். உடல் நோயைக் காட்டிலும் அதிகமாக மன நோயினால் சுந்தர சோழர் பீடிக்கப்பட்டிருந்தார்.

இளம் பிராயத்தில் ஈழ நாட்டை அடுத்திருந்த ஒரு சிறு தீவில் சுந்தர சோழர் தங்கியிருக்க நேர்ந்த போது கரையர் குலத்தைச் சேர்ந்த ஊமைப் பெண் ஒருத்தியினால் கரடியின் வாயிலிருந்து காப்பாற்றப்பட்டார். அந்தப் பெண்ணிடம் காதல் கொண்டார். சில காலம் இருவரும் அத் தீவில் ஆனந்த வாழ்க்கை நடத்தினார்கள்.

அப்போது சுந்தர சோழர் தாம் ஒரு காலத்தில் சக்கரவர்த்தியாகக் கூடும் என்று எதிர்பார்க்கவில்லை; அவர் பாட்டனாரான புகழ் பெற்ற பராந்தக சக்கரவர்த்தி அனுப்பிய வீரர்கள் அவரைத் தேடிப் பிடித்து அழைத்துப் போனார்கள்.

பராந்தக சக்கரவர்த்தியின் மூத்த புதல்வர் இராஜாதித்தர் தக்கோலத்தில் இரட்டை மண்டலச் சைன்யத்துடன் நடந்த பெரும் போரில் வீர சொர்க்கம் அடைந்தார். அவருக்கு அடுத்த கண்டராதித்தருக்கு அச்சமயம் மக்கள் இல்லை. அவருக்கு இளையவரான அரிஞ்சய சோழர் வைதும்பராயன் மகளாகிய அழகிற் சிறந்த கலியாணியை மணம் செய்து கொண்டிருந்தார். அவர்களுடைய ஏக புதல்வர் சுந்தர சோழர். பராந்தக சக்கரவர்த்தி மரணத் தறுவாயில் தமக்குப் பின் கண்டராதித்தரும் அவருக்குப் பிறகு சுந்தர சோழரும் சிம்மாதனம் ஏற வேண்டுமென்று திட்டமிட்டுக் காலமானார்.

சிவ நேசச் செல்வரான கண்டராதித்தர் பட்டத்துக்கு வந்த பிறகு செம்பியன் மாதேவி என்று சரித்திரப் புகழ் பெற்ற மழவரையர் மகளை மணந்தார். அவர்களுக்கு மதுராந்தகன் என்னும் மகன் பிறந்தான். ஆயினும் கண்டராதித்தருக்குப் பின்னர், அவருடைய சகோதரர் அரிஞ்சய சோழர்

ஒரு வருஷம் ஆட்சி புரிந்து இறந்த பிறகு, சுந்தர சோழர் சிம்மாதனம் ஏறினார்.

பாட்டனாரின் விருப்பத்தின்படியும் மற்றும் இராஜ குடும்பத்தினர் அனைவருடைய சம்மதத்தின் பேரிலும் சுந்தர சோழர் சக்கரவர்த்தியானார். அவர் திருக்கோவலூர் மலையமான் மகளை மணந்தார். அவர்களுக்கு இரு வீரப் புதல்வர்களும் ஓர் அருமை மகளும் பிறந்தார்கள். சுந்தர சோழரின் சாம்ராஜ்யம் விரிந்தது போலவே அவருடைய புகழும் நாலா திசையிலும் பரவியது. ஆனாலும் அவர் மனத்திற்குள் மதுராந்தகனுக்குப் பட்டமில்லாமல் செய்த குற்றம் உறுத்திக் கொண்டிருந்தது. நோய்வாய்ப்பட்டுப் படுத்த பிறகு அவருடைய மனசாட்சி அவரை அதிகமாகத் தொந்தரவு செய்தது. இது போதாது என்று, ஈழத் தீவைச் சேர்ந்த ஊமைப் பெண் ஆவி வடிவத்தில் வந்து அவரைத் துன்புறுத்தியதாக எண்ணிப் பிரமை கொண்டிருந்தார். இந்தக் காரணங்களினால் அவர் தமது குமாரர்களாகிய ஆதித்த கரிகாலனுக்கும் அருள்மொழிவர்மனுக்கும் சமாதானம் கூறிவிட்டு மதுராந்தகனுக்கே தமக்குப் பின்னால் பட்டம் கட்டி விட்டால் நல்லது என்று கருதத் தொடங்கினார்.

**வி**ஜயாலய சோழர் காலத்திலிருந்து சோழ சாம்ராஜ்யத்தில் பழுவேட்டரையர் வம்சத்தினர் மிகச் செல்வாக்குப் பெற்று விளங்கி வந்தனர். சுந்தர சோழரின் காலத்தில் பெரிய பழுவேட்டரையர் சோழ நாட்டின் தனாதிகாரியாகவும் சின்னப் பழுவேட்டரையர் தஞ்சைக் கோட்டையின் தளபதியாகவும் பதவி வகித்து வந்தார்கள்.

அவர்களிடம் சுந்தர சோழர் பரிபூரண நம்பிக்கை வைத்திருந்தார். அவர்களுடைய விருப்பத்துக்கு மாறாக எதுவும் செய்ய அவர் விரும்பவில்லை.

பழுவேட்டரையர்களும், மற்றும் சோழ நாட்டுச் சிற்றரசர்கள் பலரும், முரட்டுச் சுபாவம் கொண்டவனாகிய ஆதித்த கரிகாலனை வெறுத்தார்கள்.

கரிகாலனுடைய சகோதரி குந்தவைப் பிராட்டியும் சகோதரன் அருள்மொழிவர்மனும் சோழ நாட்டு மக்களின் அன்பைப் பூரணமாகக் கவர்ந்திருந்தார்கள்.

இதனால் அவர்கள் பேரிலும் சிற்றரசர்கள் அசூயை கொண்டிருந்தார்கள். இக்காரணங்களினால் சிற்றரசர்கள் குலமுறைச் சட்டத்தை அனுசரித்து மதுராந்தகத் தேவனைச் சிம்மாதனத்தில் ஏற்ற விரும்பினார்கள். கொள்ளிடத்தின் வட கரையில் உள்ள கடம்பூர் சம்புவரையர் அரண்மனையில் அந்தரங்கக் கூட்டம் நடத்தி அவ்விதம் தீர்மானம் செய்தார்கள். இந்த அந்தரங்கக் கூட்டத்தின் நடவடிக்கைகளை வாணர் குலத்தைச் சேர்ந்த வந்தியத் தேவன் என்னும் வீரன் தெரிந்து கொள்ளும்படி நேர்ந்தது.

**சு**ந்தர சோழ சக்கரவர்த்தியிடம் வந்தியத்தேவன் கரிகாலருடைய ஓலையைச் சேர்ப்பித்து விட்டுப் பழையாறையில் இளையபிராட்டி குந்தவையைச் சந்தித்தான். முற்பிறவியின் தொந்தத்தினால் அவர்களுடைய உள்ளங்கள் ஒத்து ஒன்றாயின. குந்தவையின் விருப்பத்தின்படி அவளுடைய தம்பி அருள்மொழிவர்மனை அழைத்து வர வந்தியத்தேவன் இலங்கை சென்றான். பூங்குழலி என்னும் ஓடக்காரப் பெண் அவனைப் படகிலேற்றிக் கொண்டு போய் ஈழ நாட்டில் சேர்த்தாள். இலங்கையில் அநுராதபுரத்துக்கு அப்பால் வந்தியத்தேவன் அருள்மொழிவர்மனைச் சந்தித்துக் குந்தவையின் ஓலையைக் கொடுத்தான். அதில் ''பொன்னியின் செல்வ! இராஜ்யத்துக்கு அபாயம் நேர்ந்திருக்கிறது. உடனே திரும்பி வரவும்'' என்று எழுதியிருந்தது.

**அ**ருள்மொழிவர்மன் குழந்தைப் பிராயத்தில் காவேரி நதியில் தாய் தந்தையருடன் உல்லாசப் படகிலே சென்று கொண்டிருந்த போது தவறி நதியின் வெள்ளத்தில் விழுந்து விட்டான். விழுந்த சமயத்தில் அதைப் படகில் இருந்தவர்கள் யாரும் கவனிக்கவில்லை. கரையிலேயிருந்த பெண் ஒருத்தி நதி வெள்ளத்தில் பாய்ந்து குழந்தையைக் காப்பாற்றிப் படகிலிருந்தவர்களிடம் கொடுத்து விட்டு உடனே மறைந்து விட்டாள். காவேரி அன்னைதான் அவ்வாறு இளவரசனைக் காப்பாற்றி மறைந்தாள் என்று பலரும் கருதினார்கள். இதன் காரணமாக, அருள்மொழிவர்மனுக்குப் 'பொன்னியின் செல்வன்' என்ற பட்டப் பெயர் ஏற்பட்டது.

பிற்காலத்தில் இராஜ ராஜ சோழன் என்று சரித்திரப் பிரசித்தி அடைவதற்கிருந்த பொன்னியின் செல்வன் அப்போது ஈழத்துப் போரில் ஈடுபட்டிருந்தான். மகிந்தன் என்னும் இலங்கை மன்னன் போரிலே தோற்று ஓடி மலைப் பிராந்தியத்தில் ஒளிந்து கொண்டான். புத்த பிக்ஷுக்களில் ஒரு பகுதியார் அருள்மொழிவர்மனை இலங்கை அரசனாக மணி மகுடம் சூட்டிக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டார்கள். பொன்னியின் செல்வன் அதை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டான்.

அருள்மொழிவர்மன் ஈழநாட்டிலிருந்த போது, காடுகளில் பிச்சியைப் போல் திரிந்து கொண்டிருந்த ஊமைச் செவிட்டு ஸ்திரீ ஒருத்தியைப் பார்த்தான். அவள் இளவரசனைச் சில அபாயங்களிலிருந்து காப்பாற்றினாள். அவளே தன்னைப் பொன்னி நதியின் வெள்ளத்திலிருந்து காப்பாற்றியவள் என்றும் அறிந்து கொண்டான். அவள் சித்திரங்களின் மூலம் தன்னுடைய பழைய வரலாற்றைத் தெரிவித்தாள். அதிலிருந்து மந்தாகினிக்கும் சுந்தர

அமரர் கல்கி



சோழருக்கும் இளம் பிராயத்தில் ஏற்பட்டிருந்த இணையில்லாத அன்பைக் குறித்து இளவரசன் அறிந்து கொண்டான்.

இப்போது வந்தியத்தேவனும் அந்த ஸ்திரீயை ஈழ நாட்டில் பார்க்க நேர்ந்தது. அவனுக்கும் பெரிய பழுவேட்டரையரின் இளைய ராணி நந்தினிக்கும் உருவப் பொலிவில் இருந்த ஒற்றுமையைக் கண்டு அவன் வியந்தான். அதைப் பொன்னியின் செல்வரிடமும் தெரியப்படுத்தினான்.

நந்தினி என்பவள் குழந்தைப் பிராயத்தில் பழையாறையில் ஆலய பட்டர் வீட்டில் வளர்ந்தாள். அவளிடம் ஆதித்த கரிகாலன் பிரியம் கொண்டான். குந்தவையோ அவளுடைய அழகைக் கண்டு அசூயை கொண்டாள். செம்பியன் மாதேவியின் கட்டளையினால் நந்தினி குழந்தைப் பருவத்திலேயே பாண்டிய நாட்டுக்கு அனுப்பப் பட்டாள்.

ஆதித்த கரிகாலன் இறுதியான பாண்டியர் யுத்தத்தில் வீரபாண்டியனைத் தேடிச் சென்று வைகை நதிக்கரையில் நந்தினி வாழ்ந்த சிறிய குடிசையில் கண்டுபிடித்தான். நந்தினி வீரபாண்டியன் உயிரைக் காப்பாற்றும்படி இரந்து மன்றாடினாள். கரிகாலன் அதைக் கேளாமல் வீரபாண்டியனுடைய தலையை வெட்டிக் கொன்றான்.

பின்னர், நந்தினி வயது முதிர்ந்த பெரிய பழுவேட்டரையரை மணம் புரிந்து கொண்டாள். வீரபாண்டியனுடைய ஆபத்துதவிப் படையைச் சேர்ந்த ரவிதாஸன், ரேவதாஸன், சோமன் சாம்பவன், கிரமவித்தன் முதலிய சதிகாரர்கள் வீர பாண்டியனுடைய மரணத்துக்குப் பழி வாங்கும் பொருட்டுச் சுந்தர சோழரின் குலத்தை அடியோடு கருவறுப்பதாகச் சபதம் செய்திருந்தார்கள். அவர்களுக்குப் பழுவேட்டரையரின் இளைய ராணியாகிய நந்தினி இரகசியமாக உதவி புரிந்து வந்தாள்.

கொள்ளிடக் கரைக் காட்டில் சதிகாரர்கள் கடைசி முறை இரகசியமாகக் கூடிப் பாண்டிய குலத்துச் சிறுவன் ஒருவனுக்குப் பட்டமும் கட்டினார்கள். ஆதித்த கரிகாலனைக் கொல்லும் பொறுப்பை நந்தினியே ஏற்றுக் கொண்டாள். அதே சமயத்தில் சுந்தர சோழரையும் பொன்னியின் செல்வனையும் கொன்று விட வேண்டும் என்றும் சதிகாரர்கள் முடிவு செய்தார்கள்.

பொன்னியின் செல்வன் ஈழ நாட்டிலிருந்து கோடிக்கரைக்குப் பிரயாணமாகி வந்த போது நடுக் கடலில் கப்பல் சுழிக் காற்றில் அகப்பட்டு முழுகியது. அருள்மொழியும் வந்தியத் தேவனும் பூங்குழலியினால் உயிர் தப்பிக் கரை ஏறினார்கள். ஆனால் ஈழ நாட்டில் அப்போது பரவியிருந்த கொடிய தொற்று சுரம் பொன்னியின் செல்வனைப் பற்றிக் கொண்டிருந்தது. கரை ஏறும் போது அவன் பிரக்ஞை அற்றிருந்தான். அவனைப் பூங்குழலியும் அவளுடைய இன்னொரு அத்தை மகனாகிய சேந்தன் அமுதனும் படகில் ஏற்றி நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்தில் கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

குந்தவைப் பிராட்டியும் கொடும்பாளூர் இளவரசி வானதியும் நாகைப்பட்டினத்துக்கு வந்து சூடாமணி விஹாரத்துக்கு அருகில் கால்வாய்க் கரையில் இருந்த நந்தி மண்டபத்தில் அருள்மொழியைச் சந்தித்தார்கள். சோழ நாடெங்கும் சதியும் குழப்பமுமாக இருப்பதால் இன்னும் சில நாள் சூடாமணி விஹாரத்திலேயே தங்கிப் பூரண உடல் வலிவு பெறும்படி குந்தவை அருள் மொழியைக் கேட்டுக் கொண்டாள். சகோதரியிடம் எல்லையற்ற மரியாதை வைத்திருந்த பொன்னியின் செல்வன் அதற்கு இணங்கினான்.

ஊமை ஸ்திரீ மந்தாகினி உயிரோடிருப்பதை அறிந்த குந்தவை அவளை எப்படியாவது சுந்தர சோழரிடம் சேர்ப்பிக்க விரும்பினாள். மந்தாகினி பொன்னியின் செல்வனைப் பார்ப்பதற்காகக் கோடிக்கரை வந்தாள். முதன் மந்திரி அநிருத்தரின் கட்டளைப்படி அவளைப் பலவந்தமாகக் கைப்பற்றித் தஞ்சைக்கு அழைத்துச் சென்றார்கள். தஞ்சைக்கு அருகில் அவள் தப்பி ஓடி விட்டாள். சதிகாரர்களான ரவிதாஸனும் சோமன் சாம்பவனும் பழுவூர் அரண்மனையில் புகுவதைப் பார்த்து மந்தாகினி அவர்களைப் பின் தொடர்ந்தாள். பொக்கிஷ நிலவறை வழியாகச் சுந்தர சோழர் அரண்மனையை அடைந்தாள். அவர் தூங்குகிறார் என்று எண்ணி அருகில் நெருங்கினாள். சுந்தர சோழர் அவளை மந்தாகினியின் ஆவி உருவம் என்று எண்ணி விளக்கை எடுத்து அவள் மீது எறிந்தார். குந்தவையும் மற்றவர்களும் ஓடி வந்து அவருக்கு உண்மையைத் தெரிவித்தார்கள். சுந்தர சோழர் அவள் மீண்டும் தம் வாழ்க்கையில் வந்ததை விரும்பவில்லை.

# அத்தியாயம் 35
# சக்கரவர்த்தியின் கோபம்

மந்தாகினியை மற்ற அரண்மனைப் பெண்டிர் சிற்ப மண்டபத்தில் கண்டுபிடித்த சமயத்தில் சக்கரவர்த்திக்கும் முதன் மந்திரிக்கும் கடுமையான வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது.

மலையமான் மகள் அங்கிருந்து சென்றவுடனேயே முதன் மந்திரி அநிருத்தர் "மன்னர் பெரும! பெண்மணிகள் இருக்கும்போது சில விஷயங்கள் சொல்லக் கூடாது என்றிருந்தேன். இப்போது அவற்றைச் சொல்லித் தீர வேண்டியதாயிருக்கிறது. வீர பாண்டியனுடைய ஆபத்துதவிகள் இன்னமும் இந்த நாட்டில் மறைந்து திரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கொடுமையான சபதத்தை நிறைவேற்றுவதற்குத் தக்க சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்" என்றார்.

"இது ஒன்றும் புதிதில்லையே? எனக்குத் தெரிந்த செய்திதானே? பழுவேட்டரையர்கள் அந்தக் காரணத்தைக் கொண்டே எனக்கு இத்தனை பலமான பாதுகாப்பு ஏற்படுத்தியிருக்கிறார்கள் அல்லவா?" என்று சக்கரவர்த்தி ஏளனச் சிரிப்புடன் கூறினார்.

"ஆபத்துதவிகளின் விஷயம் தங்களுக்குத் தெரிந்ததுதான். ஆனால் அந்தச் சதிகாரர்களுக்குச் சோழ சாம்ராஜ்யத்தின் பொக்கிஷத்திலிருந்தே பொருள் உதவி கிடைத்து வருகிறது என்பது தங்களுக்குத் தெரிந்திருக்க முடியாது!" என்றார் முதன் மந்திரி.

"ஆகா! இது என்ன கட்டுக் கதை!" என்றார் சுந்தர சோழர்.

"இதைக் காட்டிலும் பிரமிப்பான கட்டுக் கதைகள் சிலவற்றையும் தங்களுக்கு நான் சொல்ல வேண்டியிருக்கிறது. பெரிய பழுவேட்டரையரின் பொக்கிஷ நிலவறையிலிருந்து புதிய பொற்காசுகள் ஆபத்துதவிகள் கூட்டத்தின் மத்தியில் குவியலாகக் கொட்டப்பட்டிருந்தன. கண்ணால் பார்த்தவனாகிய என் சீடன் திருமலை இதோ இருக்கிறான். தாங்கள் பணித்தால் அதைப் பற்றி விவரமாகச் சொல்லுவான்...."

"வேண்டியதில்லை. தலைமுறை தலைமுறையாகச் சோழ குலத்துக்காக உயிரைக் கொடுத்து இரத்தம் சிந்தி வந்தவர்கள் பழுவேட்டரையர்கள். அவர்கள் என்னைக் கொல்லுவதற்காகச் சதி செய்யும் கூட்டத்திற்கு என் பொக்கிஷத்திலிருந்து பொற்காசு கொடுக்கிறார்கள் என்று அரிச்சந்திரனே வந்து சொன்னாலும் நான் நம்ப மாட்டேன்."

"மன்னிக்க வேண்டும். பழுவேட்டரையர்கள் மீது அத்தகைய துரோகக் குற்றத்தை நான் சுமத்தவில்லை. அவர்களுக்குத் தெரியாமலே சதிகாரர்களுக்கு நம் பொக்கிஷத்திலிருந்து பொற்காசுகள் போகலாம் அல்லவா?"

"அது எப்படி முடியும்? யமன் அறியாமல் உயிர் போகக் கூடுமா, என்ன?"

"யமன் ஒருவேளை கிழப் பருவத்தில் இளமங்கை ஒருத்தியை மணம் செய்து கொண்டிருந்தால் அதுவும் சாத்தியமாகலாம், அரசே!"

"பெரிய பழுவேட்டரையர் இந்தப் பிராயத்தில் கலியாணம் செய்து கொண்டது எனக்கும் பிடிக்கவில்லைதான். அதை அவரிடமே சொல்லியிருக்கிறேன். அதற்காக இம்மாதிரியெல்லாம் அவர் மீது துரோகக் குற்றம் சுமத்துவதை என்னால் சகிக்க முடியாது."

"சக்கரவர்த்தி! பழுவேட்டரையர் மீது நான் துரோகக் குற்றம் சுமத்தவில்லை. அவர் மணந்து கொண்ட இளையராணி மீதுதான் சுமத்துகிறேன்."

"ஆண் பிள்ளைகள் மீது குற்றம் சுமத்துவதையாவது பொறுத்துக் கொள்ளலாம். துர்ப்பாக்கியவதி

யான அபலைப் பெண் ஒருத்தியின் மீது நீர் குற்றம் சுமத்துவது எனக்கு நாராசமாயிருக்கிறது.''

''எவ்வளவு நாராசமாக இருந்தாலும் பழுவூர் இளைய ராணியைப் பற்றிய சில உண்மைகளைத் தங்களுக்கு நான் சொல்லியே தீர வேண்டும். ஒரு தடவை தங்களுக்கு நான் ஓர் உண்மையைச் சரியான சமயத்தில் சொல்லாதது பற்றி எவ்வளவோ வருத்தப்பட நேர்ந்தது. சற்று முன் தாங்களும் கோபித்துக் கொண்டீர்கள். ஆகையால் சிறிது பொறுமையாகக் கேட்க வேண்டும்.''

முதன் மந்திரியின் இந்தச் சாமர்த்தியமான வார்த்தைகளைக் கேட்டுச் சக்கரவர்த்தி புன்னகை புரிந்தார். ''என் வார்த்தையைக் கொண்டே என்னை மடக்குகிறீர்கள். அது என் சொந்தக் காரியம். அதற்கும் இதற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. ஆயினும் சொல்லுங்கள், கேட்கிறேன்'' என்றார்.

''பழுவூர் பெரிய அரண்மனைக்கு மூன்று வருஷங்களுக்கு முன்னால் இளையராணி நந்தினி தேவி வந்து சேர்ந்தாள். அது முதல் பழுவூர் அரண்மனைக்குச் சில மந்திரவாதிகள் அடிக்கடி வந்து போகிறார்கள். இது சின்னப் பழுவேட்டரையருக்கும் தெரியும். அவருக்கும் மந்திரவாதிகள் வருவது பிடிக்கவில்லை. ஆனாலும் தமையனை எதிர்த்துப் பேசத் தைரியமில்லாமல் சும்மா இருந்து வருகிறார்.''

''சகோதரர்கள் என்றால், இப்படியல்லவா இருக்க வேண்டும்?''

''சகோதர விசுவாசத்தினால் இராஜ்யத்துக்குக் கேடு வரக் கூடாதல்லவா?''

''இப்போது இராஜ்யத்துக்கு என்ன கேடு வந்து விட்டது? ஒரு பேதைப் பெண் யாரோ மந்திரவாதிகளைக் கூப்பிட்டு மந்திரம் போடச் சொல்வதினால் இராஜ்யம் கெட்டுப் போய் விடுமா? பழுவூர் இளைய ராணி மந்திரம் போட்டுத்தான் எனக்கு நோய் வந்து விட்டதென்று சொல்லுகிறீர்களா?''

''சக்கரவர்த்தி! பழுவூர் இளைய ராணியைப் பார்க்க வருகிறவர்கள் உண்மையில் மந்திரவாதிகள் அல்ல. மந்திரவாதிகள் என்று சொல்லிக் கொண்டு வரும் சதிகாரர்கள் என்று சந்தேகிக்கிறேன். அவர்கள் மூலமாக நம் பொக்கிஷத்திலிருந்து பொருள் போய்க் கொண்டிருக்கிறதென்றும் சந்தேகிக்கிறேன்....''

''எதைப் பற்றி வேணுமானாலும் யாரைப் பற்றி வேணுமானாலும் சந்தேகிக்கலாம். ருசு ஏதேனும் உண்டா?''

''மன்னர் மன்ன! இன்றைய தினம் பெரிய பழுவேட்டரையரின் அரண்மனையையும் பொக்கிஷ நிலவறையையும் சோதனை போட்டால் ஒரு வேளை ருசுக் கிடைக்கலாம்.''

''இதைக் காட்டிலும் எனக்குப் பிரியமில்லாத காரியத்தை இதுவரை யாரும் சொன்னது கிடையாது. அநிருத்தரே! நீர் எனக்கு மட்டும் நண்பர். பழுவேட்டரையர் எனக்கு முன் மூன்று தலைமுறையைச் சேர்ந்த சோழ சக்கரவர்த்திகளுக்கு உயிருக்குயிரான நண்பர். சோழ குலத்துக்கு இரும்புக் கவசம் போன்றவர். சோழர்களின் பகைவர்களுக்கு இந்திரனுடைய வஜ்ராயுதம் போன்றவர். அப்படிப்பட்டவருடைய மாளிகையை அவர் இல்லாத போது சோதனை போடுவதா? பழுவேட்டரையர் தம் அரண்மனையில் சதிகாரர்களுக்கு இடங் கொடுக்கிறார் என்று நம்புவதைக் காட்டிலும், மலையமான் மகள் மருந்து என்று சொல்லி எனக்கு நஞ்சைக் கொடுக்கிறாள் என்று நம்புவேன்...''

''சக்கரவர்த்தி! பழுவேட்டரையருக்குத் தெரிந்து இது நடைபெறவில்லை. மோகத்தினால் கண்ணிழந்திருக்கும் பழுவேட்டரையருக்குத் தம் எதிரில் நடப்பதும் தெரியவில்லை. அவர் அறியாமலே அவருடைய மாளிகை சதிகாரர்களின் தலைமை ஸ்தலமாக இருந்து வருகிறது. பழுவூர் இளைய ராணியே சதிகாரர்களோடு சேர்ந்தவள் என்று நம்புவதற்கு இடமிருக்கிறது.''

''அந்தப் பேதைப் பெண்ணைக் குறித்து இன்னும் என்ன அவதூறு சொல்லப் போகிறீர்கள்?''

''சில நாளைக்கு முன்பு திருப்புறம் பயம் காட்டில் பிருதிவீபதியின் பள்ளிப் படைக்கு அருகில் நள்ளிரவு வேளையில் மகுடாபிஷேக வைபவம் ஒன்று நடந்தது. ஒரு ஐந்து வயதுப் பிள்ளையைச் சிங்காதனத்தில் உட்கார வைத்துப் பாண்டிய மன்னன் என்றும் சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி என்றும் பட்டம் சூட்டினார்கள். இந்த மகுடாபிஷேக வைபவத்தில் கலந்து கொண்டவர்கள் சோழ குலத்தை அடியோடு நிர்மூலம் செய்வதாகவும் சபதம் எடுத்துக் கொண்டார்கள்.....''

''முதன் மந்திரி! இந்தச் செய்தியைச் சொல்லி என்னைப் பயப்படுத்தலாம் என்று உத்தேசமா? என் கை கால்கள் நடுங்குமென்று எதிர்பார்த்தீரா?''

''இல்லை, சக்கரவர்த்தி, இல்லை! அந்தக் கேலிக் கூத்தை நான் ஒரு பொருட்டாக எண்ணவில்லை. அப்படிச் சபதம் எடுத்துக் கொண்ட சதிகாரர் கூட்டத்தில் பழுவூர் இளைய ராணியும் இருந்தாள் என்பதைத் தங்களிடம் சொல்ல விரும்பினேன்.''

''அதையெல்லாம் அருகில் இருந்து பார்த்து விட்டு வந்து தங்களுக்குத் தெரிவித்த புத்திசாலி ஒற்றன் யார்? அதோ நிற்கிறானே, தங்களுடைய அருமைச் சீடன், அவன்தானே?''

''எல்லாம் நடந்து முடிந்த பிறகு இவன் அங்கே போய்ச் சேர்ந்தான். நேரில் பார்த்தவன் வாணர் குலத்து வந்தியத்தேவன்....''

''இங்கே ஒரு தடவை வந்து விட்டுத் தப்பி ஓடிப் போனானே, அந்த ஒற்றனையா சொல்லுகிறீர்?''

''அவன் ஒற்றன் அல்ல, பிரபு! தங்கள் திருக்குமாரர் ஆதித்த கரிகாலரின் அந்தரங்கத்துக்குரிய நண்பன்.''

''கரிகாலனுக்கு இப்படிப்பட்ட அந்தரங்க நண்பர்கள் எத்தனையோ பேர். ஒருவர் சொன்னது போல் இன்னொருவர் சொல்ல மாட்டார்கள். அவன் கூறியது உண்மையாகவே இருக்கட்டும். அதற்காக இப்போது செய்யக் கூடியது ஒன்றுமில்லை. பெரிய பழுவேட்டரையரும் இங்கே இல்லை; அவருடைய இளையராணியும் இல்லை. அவர்கள் திரும்பி வந்த பிறகு விசாரித்துக் கொள்ளலாம். முதன் மந்திரி! பழுவூர் இளைய ராணியைப் பற்றி நீங்கள் சொல்லச் சொல்ல, அத்தகைய அதிசயமான பெண்ணைப் பார்க்க வேண்டும் என்று எனக்கே ஆர்வமுண்டாகி விட்டது. பழுவேட்டரையர் கலியாணம் செய்து கொண்டு வந்த போது எனக்கு ஏற்பட்ட அருவருப்பினால் அந்தப் பெண்ணை என் முன்னால் அழைத்து வர வேண்டாம் என்று சொல்லியிருந்தேன். அதனாலேயே அவளுக்கு ஒருவேளை என் பேரில் கோபம் உண்டாகி விட்டதோ என்னமோ தெரியவில்லை. பெரிய பழுவேட்டரையர் இம்முறை திரும்பி வந்ததும் அவருடைய இளைய ராணியை அழைத்து வரச் செய்து அவளுடைய கோபத்தைத் தீர்க்கப் போகிறேன்....''


''சக்கரவர்த்தி! நான் விரும்புவதும் அதுதான். நந்தினி தேவியின் கோபத்தைத் தணிப்பதற்கு இன்னும் முக்கியமான காரணங்களும் இருக்கின்றன. நந்தினி வந்து சேரும் வரையில் ஈழத்து அரசி நமது அரண்மனையிலே இருப்பதற்கு அனுமதி தர வேண்டும்...''

''ஆகா! அவளை ஈழத்து அரசியாக முடிசூட்டி விட்டீர்கள் அல்லவா? போகட்டும்; அவளுக்கும் பழூவூர் ராணிக்கும் என்ன சம்பந்தம்?''

''அதைத்தான் கண்டுபிடிக்க வேண்டும், பிரபு! இருவரும் நேருக்கு நேர் சந்தித்தால் ஒருவேளை அந்தச் சம்பந்தம் தெரிய வரலாம். நந்தினி தேவி சோழ குலத்தின் மீது கொண்டிருக்கும் பகையும் ஒருவேளை மாறலாம்.....''


''மந்திரி! ஒரு பெண்ணின் பகையைக் குறித்து நீங்கள் இவ்வளவு கவலைப்படுவது ஆச்சரியமாயிருக்கிறது.....''

''நந்தினி தேவியின் பகையைக் குறித்துக் கவலைப்படக் காரணம் இருக்கிறது. அதை நான் சொல்வது உசிதமாயிருக்குமா என்று அஞ்சு



ஓல்டு ஸ்பைஸ் பாடி டால்க்-ஆண்மகனுக்கானது

ஓல்டு ஸ்பைஸ்
ஆண்மகனின் அடையாளம்



து. காந்தமென கவர்ந்திழுக்கும் தன்மையது.





கிறேன்...''

''தாங்கள் சொல்லத் தயங்குவதை வேறு யார் என்னிடம் சொல்ல முடியும்? மிச்சம்வைக்காமல் சொல்லி விடுங்கள்'' என்றார் சக்கரவர்த்தி.

முதன் மந்திரி சிறிது யோசனை செய்து விட்டுக் கூறினார்:—

''மன்னர் பெருமானே! இப்போது நான் கூறப் போவது மிகச் சிக்கலான விஷயம். தங்களுக்கு அது உகந்ததாயிருக்க முடியாது. ஆயினும் பொறுமையுடன் கேட்க வேண்டும். நந்தினி தேவியையும் மந்தாகினி தேவியையும் பார்த்தவர்கள் அனைவரும் அவர்களுடைய தோற்றத்தின் ஒற்றுமையைக் குறித்து அதிசயிக்கிறார்கள்....''

''உலகத்தில் இப்படி எத்தனையோ அதிசயங்கள் இருக்கின்றன. ஒரு மரத்தைப் போலவே இன்னொரு மரம் இருக்கிறது. ஒரு பைத்தியத்தைப் போல் இன்னொரு பைத்தியம் இருக்கிறது....''

''ஆனால் ஒரு மரம் இன்னொரு மரத்தைப் போல வேஷம் போட்டு நடிப்பதில்லை. ஒரு பைத்தியம் இன்னொரு பைத்தியத்தின் ஆவியைப் போல வந்து சக்கரவர்த்தியை இம்சிப்பதில்லை....''

''என்ன சொல்கிறீர், முதன் மந்திரி?''

''மந்தாகினி தேவியின் ஆவி தங்களை இரவு நேரங்களில் வந்து இம்சிப்பதாக எண்ணித் தாங்கள் வேத

னைப்பட்டு வந்தீர்கள்....''

''அவளுடைய ஆவி வரவில்லை, அவளே வந்தாள் என்று சொல்லுகிறீரா?''

''இல்லை, இல்லை. பழுவூர் இளையராணி மந்தாகினியின் ஆவியாக நடித்துத் தங்களை இம்சித்திருக்க வேண்டும் என்று சொல்கிறேன்.''

சுந்தர சோழர் சிறிது நிமிர்ந்து உட்கார்ந்து, கோபவெறி பொங்க, ''நீங்கள் இப்போது சொல்வது மட்டும் உண்மை என்று ஏற்பட்டால், அந்த ராட்சஸியை என் கையினாலேயே கழுத்தை நெரித்து..'' என்று கூறுவதற்குள், முதன் மந்திரி குறுக்கிட்டு, ''வேண்டாம், சக்கரவர்த்தி! தங்கள் வாயால் அப்படியொன்றும் சபதம் கூற வேண்டாம்!'' என்று பரபரப்புடன் சொன்னார்.

''ஏன்? அவள் பேரில் என்ன தங்களுக்கு அவ்வளவு இரக்கம்? என்னை அவ்வளவு தூரம் வேதனைப்படுத்தியவளை என்ன செய்தால்தான் என்ன?'' என்று சுந்தர சோழர் பொங்கினார்.

''எவ்வளவுதான் கஷ்டப்படுத்தியிருந்தாலும், கஷ்டப்படுத்தியவர் நெருங்கிய பந்துவாயிருக்கும் பட்சத்தில்... ஒருவேளை சொந்தப் புதல்வியாயிருக்கும் பட்சத்தில்...'' என்று முதன் மந்திரி கூறித் தயங்கி நின்றார்.

''முதன் மந்திரி! இது என்ன பிதற்றல்?'' என்றார் சுந்தர சோழர்.

''சக்கரவர்த்தி! தங்களுடைய பொறுமையை உண்மையில் சோதித்துவிட்டேன். அதற்காக எனக்கு உசிதமான தண்டனையைக் கொடுங்கள். ஆனால் நந்தினி தேவியைத் தண்டிப்பது பற்றிப் பேச வேண்டாம். நந்தினி தேவி தனாதிகாரி பழுவேட்டரையரின் இளையராணி மட்டும் அல்ல; மூன்று உலகமும் உடைய சுந்தர சோழ சக்கரவர்த்தியின் புதல்வி. அவரை எந்தக் குற்றத்துக்காக யார்தான் தண்டிக்க முடியும்?'' என்றார்



அநிருத்தப் பிரம்மராயர்.

இதைக் கேட்ட சக்கரவர்த்தி சிறிது நேரம் முதன் மந்திரியை அளவிலாத வியப்போடு உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு கலீர் என்று சிரித்தார்.

"சக்கரவர்த்தி! இன்றைக்கு மிகவும் ஸுதினம். இரண்டு தடவை தாங்கள் சிரிக்கக் கேட்டேன்" என்றார் அநிருத்தர்.

"பிரம்மராயரே! இந்த அரண்மனையில் இப்போது ஒரு பெண் பைத்தியந்தான் இருக்கிறது என்று நினைத்தேன். நீர் அவளை விடப் பெரிய பைத்தியம் என்று இப்போது அறிந்தேன். அவள் பேசாத ஊமைப் பைத்தியம்; நீர் பேசிப் பிதற்றும் பைத்தியம்!" என்று கூறி விட்டுச் சுந்தர சோழர் மறுபடியும் நினைத்து நினைத்துச் சிரித்தார்.

## அத்தியாயம் 36
## பின்னிரவில்


சுந்தர சோழரின் சிரிப்பு ஒலி கேட்டுக் கொண்டிருக்கும்போதே பெண்மணிகள் அங்கு வந்தார்கள். முன்னால் மகாராணியும், அவளுக்குப் பின்னால் குந்தவை ஒரு பக்கமும் வானதி ஒரு பக்கமும் பிடித்து இழுத்துக் கொண்டு வர மந்தாகினியும், அவர்களுக்கும் பின்னால் பூங்குழலியும் ஒரு தாதிப் பெண்ணுமாக ஊர்வலம் போல வந்தார்கள். சுந்தர சோழரின் சிரிப்பு அவர்களுக்கும் சிறிது குதூகலத்தை உண்டு பண்ணியிருந்தது. மந்தாகினி அவரை ஒரு கணம் நிமிர்ந்து பார்ப்பதும் மறு கணம் குனிந்து தரையைப் பார்ப்பதுமாயிருந்தாள். அவளுடைய அலங்காரம் இப்போது பூரணம் அடைந்திருந்தது. குந்தவைப் பிராட்டி அலங்காரக் கலையில் இணையில்லாத தேர்ச்சி பெற்றவள் என்று அந்தக் காலத்தில் புகழ் பெற்றிருந்தாள். அதற்காகவே சிற்றரசர்கள் தங்கள் மகளிரை இளையபிராட்டியின் தோழியாயிருப்பதற்குப் பழையாறைக்கு அனுப்புவது வழக்கம். குந்தவை தன் முழுத் திறமையையும் ஊமை ராணியை அலங்கரிப்பதில் பயன்படுத்தியிருந்தாள். அடி உள்ளத்தில் தோன்றிய ஏதோ ஓர் உருத்தெரியாத உணர்ச்சியினால் மந்தாகினியின் தலைக் கூந்தலை நந்தினியைப் போல் ஆண்டாள் கட்டுடன் அலங்கரித்திருந்தாள். இந்த அலங்காரம் முடிந்ததும் பெண்கள் எல்லாருக்குமே அவள் தத்ரூபமாக நந்தினியைப் போலிருந்தது தெரிந்து விட்டது. காட்டிலே அலைந்து திரிந்த தேக ஆரோக்கியமுள்ள மாதரசி யாதலால் பிராயத்திலே இருந்த இருபத்தைந்து வருஷ வித்தியாசம் கூடத் தெரியவில்லை.

மற்றப் பெண்மணிகள் மந்தாகினி தேவியைச் சிறிது பெருமையுடனேயே அழைத்துக் கொண்டு வந்தார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்தினால் பெருமை கொண்டிருந்தார்கள்.

இந்தச் சரித்திரம் நிகழ்ந்த நாட்களில் தமிழகத்துப் பேரரசர்களும் குறு நில மன்னர்களும் பல மனைவியரை மணப்பது சகஜமாயிருந்தது. ஓயாமல் போர்கள் நடந்த வண்ணமாயிருந்தன. அரசிளங் குமரர்களோ போர் முனையில் எப்போதும் முன்னணியில் இருந்தார்கள். ஆகையால் குலம் நசிக்காமல் பாதுகாப்பதற்காக அரச குலத்தவர் பெண்கள் பலரை மணப்பது வழக்கமாயிருந்தது. பட்ட மகிஷியாயிருப்பவள் மற்ற ராணிகளிடம் அசூயை கொள்ளாமல் அணைத்து ஆதரிப்பது ஒரு சிறந்த நறுங் குணமாகக் கருதப்பட்டது. இந்த முறையிலேயே மலையமான் மகள் உற்சாகமாயிருந்தாள். குந்தவை தன்னுடைய அலங்காரத் திறமையை இவ்வளவு

நன்றாகக் காட்ட முடிந்தது பற்றிப் பெருமை கொண்டிருந்தாள். பைத்தியக்காரப் பிச்சியாகத் தோன்றியவளை இணையில்லா அழகு வாய்ந்த இளம் பெண்ணாகத் தோன்றும்படியல்லவா அவள் செய்து விட்டாள்? பூங்குழலிக்கோ தன் அத்தைக்கு அரண்மனையில் இவ்வளவு இராஜோபசாரங்கள் நடப்பது பற்றிக் களிப்பு உண்டாகியிருந்தது. அவள் எதிர்பார்த்ததற்கெல்லாம் மாறாக இங்கேயுள்ள அரண்மனைப் பெண்கள் நடந்து கொண்டிருந்தார்கள் அல்லவா?

இவ்வாறு பெருமிதம் பொங்க அந்த அறையினுள் பிரவேசித்த பெண்களின் ஊர்வலத்தைச் சக்கரவர்த்தி பார்த்தார். அவருடைய சிரிப்பு அந்த க்ஷணமே நின்று விட்டது. மந்தாகினியின் புதிய தோற்றம் அவருக்கே அளவில்லாத பிரமிப்பை அளித்தது. தாம் கண் முன்னால் பார்ப்பது உண்மைதானா என்று சந்தேகிப்பவர் போல் கண்களைக் கையினால் சிறிது மூடிக் கொண்டும் பின்னர் திறந்தும் உற்று உற்றுப் பார்த்தார். சற்று முன்னால் முதன் மந்திரி சொல்லிக் கொண்டிருந்த விவரங்கள் எல்லாம் அவர் மனத்தில் பதிந்திருந்தன. சில காலமாக நள்ளிரவில் தன் எதிரே தோன்றித் தன்னை வருத்திய பெண் உருவத்துக்கும் மந்தாகினியின் உருவத்துக்கும் உள்ள ஒற்றுமை அவருக்கு நன்கு புலனாயிற்று. அதே சமயத்தில் சில வேற்றுமைகள் இருப்பதையும் கவனித்துக் கொண்டார். இதைப் பற்றிய மர்மத்தை முழுதும் ஆராய்ந்து உண்மையை அறிய வேண்டும் என்னும் ஆசை அவர் உள்ளத்திலும் உதயமாயிற்று.



மந்தாகினியின் மீது அவருக்கு முதலில் ஏற்பட்டிருந்த அருவருப்பு அப்படியே மாறாமல் இருந்தது. ஆனால் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமலிருக்கத் தீர்மானித்தார்.

அநிருத்தரிடம் அவர், ''முதன் மந்திரி! சற்று முன் உங்களை நான் பைத்தியம் என்றேன். பிரமை, பைத்தியம் எல்லாம் எனக்குத்தான் என்று தோன்றுகிறது. இனிமேல் தினந்தோறும் வைத்தியன் என்னை வந்து பார்ப்பது மட்டும் போதாது. மாந்திரீகனையும் அனுப்பி வைக்க வேண்டியதுதான். பழுவூர் இளைய ராணியைப் பார்க்க வரும் மந்திரவாதியைப் பிடித்து அனுப்பி வைத்தால் கூடப் பாதகமில்லை!'' என்று மெல்லிய குரலில் கூறினார்.

அநிருத்தரின் உள்ளத்தில் ஒரு சிறிய துணுக்கம் உண்டாயிற்று. ''அந்த மந்திரவாதிகளில் எவனும் சக்கரவர்த்தியை நெருங்காமலிருக்கட்டும்'' என்று மனத்திற்குள் வேண்டிக் கொண்டார். பிறகு, ''மன்னர் பெரும! மந்திரவாதி எதற்கு? வேறு மந்திரந்தான் எதற்கு? ஸ்ரீமந் நாராயணனுடைய திருநாமத்தை விடச் சக்தியுள்ள மந்திரம் வேறு ஒன்றுமில்லை!'' என்றார்.

குந்தவைப் பிராட்டி ''அப்பா! என்னை அழைத்து வரச் சொன்னீர்களாமே! பழையாறைக்குப் போக வேண்டும் என்றும் கூறினீர்களாமே? நாங்கள் எல்லாருமே போகலாமா?" என்றாள்.

சுந்தர சோழர் அதற்கு மறுமொழி சொல்லாமல் முதன் மந்திரியைப் பார்த்து, ''அநிருத்தரே! நான் என் கருத்தை மாற்றிக் கொண்டேன். இந்தப் பெண்கள் எதனாலோ ஒரே உற்சாகமாக இருக்கிறார்கள். வீட்டுக்குப் புதிய மருமகள் வந்தது போலக் களிப்படைந்திருக்கிறார்கள். இச்சமயம் இவர்களைப் பிரிக்க எனக்கு விருப்பமில்லை. தாங்கள் சற்று முன் சொன்னது போல் இவர்கள் எல்லாரும் சிலநாள் இங்கேயே தங்கியிருக்கட்டும். செம்பியன் மாதேவி தங்

களிடம் மிக்க நம்பிக்கையும் மரியாதையும் உள்ளவர். ஆகையால் தாங்களே நேரில் சென்று அவரை அழைத்துக் கொண்டு வாருங்கள்! தங்கள் சீடனை நாகைப்பட்டினத்துக்கு அனுப்புங்கள். பெரிய பழுவேட்டரையரையும் அவருடைய இளைய ராணியையும் உடனே அழைத்து வர ஏற்பாடு செய்யும்படி நானே சின்னப் பழுவேட்டரையருக்குச் சொல்கிறேன்!'' என்றார்.

''அப்படியே செய்யலாம். சக்கரவர்த்தி! ஆனால் எல்லாரும் வந்து சேருவதற்குச் சில தினங்கள் பிடிக்கலாம். நேற்று அடித்த புயல் மழை காரணமாக நதிகளில் எல்லாம் பூரணப் பிரவாகம் ஓடிக் கொண்டிருக்கின்றது!'' என்றார் முதன் மந்திரி.

''அதனால் பாதகம் இல்லை. இத்தனை நாள் பொறுத்த நாம் இன்னும் சில நாள் பொறுத்திருப்பதில் நஷ்டம் ஒன்றுமில்லை. கரிகாலனையும் அழைத்து வருவதற்கு ஏற்பாடு செய்தால் எல்லா விஷயங்களையும் முடிவு செய்து விடலாம். அவன் இன்னமும் வருவதற்கு மறுத்தால் நானே புறப்பட்டுப் போக வேண்டியதுதான். அதைப் பற்றிப் பிறகு பேசிக் கொள்ளலாம். நீங்கள் நாளைக்கே சென்று பெரிய பிராட்டியை எப்படியாவது கையோடு அழைத்து வாருங்கள்! போகும் போது, புயலினால் கஷ்டத்துக்குள்ளான மக்களைப் பற்றியும் கவனியுங்கள். நம்முடைய குடும்ப விவகாரங்களில் கவனம் செலுத்தி அந்த முக்கியமான காரியத்தை மறந்தே விட்டோம்'' என்றார் சக்கரவர்த்தி.

''இல்லை, பிரபு! அதை நான் மறக்கவே இல்லை. எல்லாக் காரியங்களும் சரிவர நடைபெறும். தாங்கள் நிம்மதியாயிருக்கலாம்'' என்று சொல்லி விட்டு முதன் மந்திரி விடைபெற்றுச் சென்றார்.

அன்றிரவு சுந்தர சோழர் உண்மையிலேயே இத்தனை காலமும் அனுபவியாத நிம்மதியை அடைந்திருந்தார். கரையர் குலத்து மந்தாகினி இறக்கவில்லை என்னும் செய்தி மெய்யாகவே அவருடைய நெஞ்சத்தில் வெகு காலமாகக் குடி கொண்டிருந்த ஒரு பெரும் பாரத்தை அகற்றி விட்டது. அருள்மொழிவர்மன் நாகைப்பட்டினத்தில் இருக்கிறான் என்ற செய்தியும் அவருக்கு ஆறுதல் அளித்திருந்தது. சூடாமணி விஹாரம் மிகப் பலமான கட்டிடமாதலால் அதில் உள்ளவர்களுக்கு அபாயம் ஒன்றும் நேருவதற்கில்லை என்ற தைரியமும் அவருக்கு இருந்தது. பழுவூர் இளையராணி அவருடைய புதல்வியாயிருக்கலாம் என்று அநிருத்தர் குறிப்பிட்டதை நினைக்க நினைக்க அவருக்கு வேடிக்கையாயிருந்தது. இது சக்கரவர்த்தியின் முகத்திலும் அடிக்கடி குறுநகையை உண்டாக்கியது.

மலையமான் மகள் முதலிய பெண்களுடன் அவர் சிறிது நேரம் உல்லாசமாகப் பேசிக் கொண்டிருந்தார். குந்தவையின் அலங்காரத் திறமையைப் பற்றிப் பாராட்டினார். ''காட்டுமிராண்டி ஜன்மமாகக் காணப்பட்டவளைத் தேவலோகத்து இந்திராணியாக மாற்றி விட்டாயே? ஆனால் அதற்கெல்லாம் இந்தக் கிழவிதானா அகப்பட்டாள்? வானதியைப் போன்ற சிறு பெண்களிடமல்லவா உன் திறமையைக் காட்ட வேண்டும்?'' என்று பரிகாசமும் செய்தார். பிறகு பூங்குழலியிடம் அருள்மொழிவர்மனைப் பற்றி மேலும் விவரங்கள் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

அதன் முடிவில் பூங்குழலி ''சுவாமி, நான் கோடிக்கரைக்குத் திரும்பிப் போக அனுமதி கொடுங்கள். நாளைக்கே நான் புறப்படலாம் அல்லவா? என் அத்தையைப் பற்றிய கவலை இனிமேல் எனக்கு இல்லை!'' என்றாள்.

''உன் அத்தை மகன் ஒருவன் காய்ச்சல் வந்து கிடக்கிறான் என்றாயே? அவனைப் பற்றிக் கூடக் கவலை இல்லையா? போவதற்கு நீ இவ்வளவு அவசரப்பட வேண்டாம். சில நாள் இருந்து விட்டுப் போ!'' என்றார் சக்கரவர்த்தி. பூங்குழலி மௌனமாயிருந்தாள்.

அன்றிரவு சுந்தர சோழ சக்கரவர்த்தி நிம்மதியாக உறங்கினார். கனவுகள் கூட அதிகம் காணவில்லை. கண்ட கனவுகளும் துர்ச்சொப்பனங்களாக இல்லை; இன்பமான கனவுகள்.

அவருக்குப் பக்கத்து அறையில் படுத்துறங்கிய அரண்மனைப் பெண்டிர்களும் நிம்மதியாகவே தூங்கினார்கள். அவர்களிலே நிம்மதியில்லாமலும் நன்றாகத் தூங்காமலும் இருந்தவள் மந்தாகினி ஒருத்திதான். இன்று நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் அவளுடைய மனத்தில் பெருங் கிளர்ச்சியை உண்டு பண்ணியிருந்தன. முக்கியமாக அவளுடைய நினைவு பொக்கிஷ நிலவறைக்கும் சுரங்கப் பாதைக்குமாக ஊசலாடிக் கொண்டிருந்தது. இராவணனுடைய கரங்களை உடைத்து அந்தச் சுரங்கப் பாதையை மூடி விடுவதற்குத் தான் செய்த முயற்சி பலிக்காமற் போனது பற்றி எண்ணி எண்ணி அவள் மனம் நிம்மதி கொள்ளாமல் தவித்தது. தூங்கா விளக்கின் மங்கலான வெளிச்சத்தில் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டேயிருந்தாள். முக்கியமாக, மேல் மாடங்களின் சாளரங்களை அடிக்கடி உற்று நோக்கிக் கொண்டிருந்தாள்.

நள்ளிரவு கழிந்தது; பின்னிரவு தொடங்கியது. மூன்றாவது ஜாமம் ஏறக்குறைய முடியும் நேரம் ஆகிவிட்டது. அப்போது மேல் மாடத்தின் சாளரம் ஒன்றில் ஒரு தோற்றம் அவளுக்குத் தென்பட்டது. அகோர பயங்கர முகம் ஒன்று அந்தச் சாளரத்தை ஒட்டினாற் போலிருந்து, அந்த அறைக்குள்ளே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டாள். அந்த முகம் இன்னாருடைய முகம் என்பதும் ஒருவாறு அவளுக்குத் தெரிந்துவிட்டது. தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு எழுந்து நின்றாள். மறுபடியும் அந்தச் சாளரத்தை உற்றுப் பார்த்தாள். அங்கே அந்த முகத்தைக் காணவில்லை. பக்கத்து அறை வாசற்படி வரையில் மெள்ள நடந்து சென்று எட்டிப் பார்த்தாள். அங்கே சக்கரவர்த்தி நிம்மதியாக உறங்குவதைக் கண்டாள். அந்த அறையில் மேல் மாடச் சாளரங்களையும் உற்றுப் பார்த்தாள். ஒன்றும் தெரியவில்லை.

திரும்பி வந்து சிறிதும் சத்தம் செய்யாமல் பூங்குழலியைக் கையினால் தொட்டு அசைத்து எழுப்பினாள். அசந்து தூங்கிய பூங்குழலி கண் விழித்தாள். ஊமை ராணியின் முகத் தோற்றத்தைக் கண்டு திடுக்கிட்டாள். ஊமை ராணி சமிக்ஞையினால் தன்னைத் தொடர்ந்து வரும்படி அவளிடம் சொன்னாள். அத்தையிடம் அளவிலாத பக்தி விசுவாசம் வைத்திருந்த பூங்குழலியும் சத்தம் செய்யாமல் எழுந்து அவளைப் பின்பற்றிச் சென்றாள்.

ஊமை ராணி சிற்ப மண்டபத்தை நோக்கிச் சென்றாள். போகும்போது நடைபாதையில் எரிந்து கொண்டிருந்த தூங்கா விளக்கு ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டு நடந்தாள்.

சிற்ப மண்டபத்தை அடைந்ததும் பூங்குழலிக்குச் சிறிது கவலை உண்டாயிற்று. மறுபடியும் இவள் இராவணச் சிற்பத்தை உடைக்கப் போகிறாளா, என்ன? அப்படியானால், அதனால் ஏற்படும் சத்தத்தில் அரண்மனையில் உள்ளவர்கள் அத்தனை பேரும் விழித்துக் கொள்வார்களே? தன் அத்தை பைத்தியக்காரிதான் என்று ஊர்ஜிதமல்லவா ஆகி விடும்?

அத்தை அந்த முயற்சியில் இறங்கினால் தான் அதைத் தடுத்தேயாக வேண்டும். சுத்தியைப் பலவந்தமாகப் பிடுங்கியாவது தடுத்தாக வேண்டும்... இப்படி எண்ணிக் கொண்டே அத்தையைத் தொடர்ந்து சிற்ப மண்டபத்துக்குள் பூங்குழலி பிரவேசித்தாள்.

ஆ! இது என்ன! அந்த இராவணச் சிற்பத்தின் தலை ஒன்று அசைகிறதே? இல்லை, இல்லை! இராவணன் தலை அசையவில்லை. இராவணனுடைய தலைகளுக்கும், மேலேயுள்ள கைலாச மலைக்கும் மத்தியில்,

வேறொரு மனிதனின் தலை மாதிரி தெரிந்தது! உடனே அது மறைந்து விட்டது. வீண் பிரமை! தூக்கக் கலக்கம்! விளக்கின் ஒளியில் உண்டாக்கும் சிற்பங்களின் நிழல் தோற்றமாயிருக்க வேண்டும்!......

மந்தாகினிக்கும் அந்தத் தோற்றம் புலப்பட்டதோ என்னமோ, தெரியவில்லை. ஆனால் அவள் இராவணன் சிலையை நெருங்கித்தான் சென்றாள். நல்லவேளையாகப் பக்கத்தில் கிடந்த சுத்தியின் மீது அவள் கவனம் செல்லவில்லை. இராவணன் தலைகள் — கைகளுக்கும் அவை தாங்கிக் கொண்டிருந்த கைலாசகிரிக்கும் நடுவிலிருந்த இருளடர்ந்த பகுதியில் தீபத்தைத் தூக்கிப் பிடித்துக் காட்டினாள். அங்கே ஒரு துவாரம் இருந்தது தெரிந்தது.

பூங்குழலி முன்னமேயே ஊகித்தது சரிதான். அங்கே ஒரு சுரங்கப் பாதையின் வெளித் துவாரம் இருக்கிறது. யாரும் சந்தேகிக்க முடியாதபடி அவ்வளவு சாமர்த்தியமாக அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சுரங்கப் பாதையின் துவாரத்தை மூடி விடுவதற்கே முன்னிரவில் தன் அத்தை பிரயத்தனப்பட்டாள். அதை அறிந்து கொள்ளாமல் மற்றவர்கள் தடுத்து விட்டார்கள்....

இவ்விதம் பூங்குழலி எண்ணிக் கொண்டிருக்கும்போதே ஊமை ராணி தன் மருமகளுக்குத் தன்னைப் பின்பற்றி வரும்படி சமிக்ஞை செய்து விட்டுக் கையில் விளக்குடனே அந்தத் துவாரத்தில் சிரமப்பட்டுப் புகுந்து அதில் இறங்கிச் செல்லத் தொடங்கினாள். சிறிது சிறிதாக அவள் உடம்பு மறைந்து வந்து, தலையும் மறைந்து, கையில் பிடித்திருந்த விளக்கும் மறைந்தது. கொஞ்சம் வெளிச்சம் மட்டும் தெரிந்தது. பிறகு பூங்குழலியும் உடம்பை நெளித்து வளைத்துத் தலையில் மோதிக் கொள்ளாமல் ஜாக்கிரதையாக அந்தச் சுரங்கத் துவாரத்துக்குள் இறங்கினாள். சில கணங்களுக்கெல்லாம் அவளும் மறைந்தாள். பின்னர், விளக்கின் ஒளியும் மறைந்தது. சிற்ப மண்டபத்தில் அந்தகாரம் குடிகொண்டது.

காலையில் மலையமான் மகளும் குந்தவையும் வானதியும் எழுந்து பார்த்தபோது ஊமை ராணியையும் பூங்குழலியையும் அவர்கள் படுத்திருந்த இடத்தில் காணாமல் திடுக்கிட்டார்கள். அரண்மனை முழுதும், தோட்டத்திலும், சிற்ப மண்டபத்திலும் தேடிப் பார்த்தும் அவர்கள் அகப்படவில்லை. அவர்கள் எப்படி மாயமாய் மறைந்தார்கள் என்பதை யாராலும் ஊகிக்க முடியவில்லை. சக்கரவர்த்தியிடம் கூறியபோது முதலில் அவர் சிறிது கவலைப்பட்டார். பின்னர், "அந்தப் பைத்தியங்கள் போய்த் தொலைந்ததே நல்லது! எப்படித் தொலைந்தால் என்ன?" என்றார். எனினும், அவர் உள்ளத்தினுள்ளே இனந் தெரியாத கவலையும் பயமும் குடிகொண்டன.

(தொடரும்)

---

**சந்தேகப் பேர் வழியா? சட்டென்று சொல்லுங்கள்!**

ஹிந்துஸ்தான் டைம்ஸ் நாளிதழில் தில்லி போலீஸ் வெளியிட்டுள்ள விளம்பரம் இது:

உங்கள் குடியிருப்புப் பகுதிக்குப் புதிதாக வந்துள்ள நபர் யாரேனும் சந்தேகத்தைத் தூண்டும் வகையில் நடந்து கொள்கிறாரா...? அவர் மாறுவேடம் பூண்ட ஒரு பயங்கரவாதியாக இருக்கக் கூடும்... அத்தகைய நபரை நீங்கள் காண நேர்ந்தால் உடனடியாக 100—க்கு போன் செய்யுங்கள் அல்லது அருகிலுள்ள காவல் நிலையத்துக்குத் தகவல் தெரிவியுங்கள். நீங்கள் விரும்பினால் உங்கள் செயலைப் பாராட்டி விளம்பரப்படுத்துகிறோம் அல்லது உங்கள் பெயரையே வெளியிடாமல் உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறோம்.

நீங்கள் கொடுக்கும் தகவல் பல உயிர்களைக் காக்க உதவக்கூடும். உபயோகமான தகவல் உங்களுக்குப் பத்தாயிரம் ரூபாய் (பரிசையும்) பெற்றுத் தரும்!



# யார் காலில் விழ ஆசை?

விழா மேடைகளிலேயே முன்பு எம். ஜி. ஆர். காலிலும் இப்போது கருணாநிதி காலிலும் விழுவது ஃபாஷனாகி விட்டது. போகட்டும், யார் காலில் விழுந்து ஆசி வாங்கிக் கொள்ள, உங்களுக்கு ஆத்மார்த்தமான ஆசை என்று சில சினிமா உலகப் புள்ளிகளைக் கேட்டபோது....



'கலைப்புலி' தாணு: அன்றும், இன்றும், என்றும் என் ஒரே தலைவர் கலைஞர் தான்! அவரை வணங்குவதில் இதய பூர்வமான ஈடுபாடின்றி வேறு என்ன இருக்க முடியும்?

சரண்யா: ஸாரி, எனக்குக் காலில் விழுகிற சம்பிரதாயங்களில் நம்பிக்கையில்லை!

லட்சுமி: நடமாடும் தெய்வம் காஞ்சிப் பெரியவரின் காலில் விழுந்து வணங்குவதே பெரும் பாக்கியம்.

சௌகார் ஜானகி: தெய்வீகக் குரல், அமைதியான தோற்றம் இவை போதுமே. எம். எஸ். ஸின் பாதங்களில் நமஸ்கரித்து ஆசி பெறவே விருப்பம்.

டெல்லி கணேஷ்: நான் போய் சான்ஸ் கேட்காமலேயே, என் நாடகத்தைப் பார்த்து, திறமையை மதித்து, வாய்ப்புத் தந்த கே. பாலசந்தர் அவர்களைத்தான் விழுந்து வணங்க விரும்புகிறேன்.

எஸ். வி. சேகர்: என்னைவிட வயதில் பெரியவர் யார் காலிலும் விழ நான் தயங்க மாட்டேன்.

— மௌஷ்மி.

# சூழ்நிலைக் கைதிகள்

**மதியம்** ஆபீஸ் லஞ்ச் இடைவேளை. அவரவரும் தங்கள் டிபன் பாக்ஸைத் திறக்கக் கதம்ப மணம் மூக்கைத் துளைத்தது.

"ஏண்டா சுந்தர் லேட்?" என்றான், கிட்டு என்னைப் பார்த்து.

"நம்ம மானேஜர் கிழம் அறுத்துடுச்சு. தப்பிச்சு வருவதற்குள்ள உன்பாடு, என் பாடாகிவிட்டது. அது சரி, சட்டைப் பையில் பசுமையாத் தெரியுது?" என்றேன்.

"ஆமாண்டா. நூறு ரூபாய் நோட்டு இருக்கு."

"மாசக் கடைசியிலே எப்படிடா உன் கிட்ட இவ்வளவு பெரிய தொகை இருக்கு? நான் கூட யாரிடமாவது கடன் வாங்கலாம்னு இருக்கேன்" என்று சொல்லிப் பணத்திற்கு அடி போட்டேன்.

"இதுவும் கடன்தான். நம்ம ரமேஷ் வைச்சிருந்தான். எடுத்துக்கிட்டேன்" என்று அவன் சொல்லவும் அடிபட்டாற்போல் உணர்ந்து, அருகில் சாப்பிட்டுக் கொண்டிருந்த ரமேஷைப் பார்த்தேன்.

காலையில் ரமேஷிடம் நான் பணம் கேட்டேன். தன் மனைவி, குழந்தைகள் இன்று இரவு ஒரு கல்யாணத்திற்காக ஊருக்குப் போவதால் பணம் கையிலிருந்தும் கொடுக்க இயலாது என்று காலையில் என்னிடம் சொன்னவன், இப்போது கிட்டுவுக்கு மட்டும் பணம் கொடுத்துவிட்டானே. 'என்னுடைய பத்து வருட நட்பை விட, போன வருஷம் வந்த கிட்டு இவனுக்கு நெருங்கியவனாகி விட்டானோ?' என்று பொருமியபடி உணவில் வலுக்கட்டாயமாக மனசைத் திருப்பினேன்.

என் முகம் போன போக்கை வைத்தே என்னுள் ஓடிய எண்ணங்களை ரமேஷ் கவனித்து விட்டிருக்க வேண்டும்.

சாப்பிட்டு முடித்தவுடன் என் சீட் தேடி வந்தான்.

"டேய் சுந்தர், என் சட்டைப் பைக்குள்ளே கையை விட்டு அவனே பணத்தை எடுத்துக்கிட்டுப் போய்ட்டாண்டா. அப்புறம் பத்து நிமிஷம் கழிச்சுத் திருப்பிக் கேட்டப்போ, 'குழந்தைக்கு உடம்பு சரியில்லை. மருந்து வாங்கவும், டாக்டரிடம் காண்பிக்கவும் இந்தப் பணம் வேணும்'னான். அதனால் விட்டுட்டேன். இப்ப நானும் யாரிடம் கடன் வாங்கலாம்னுதான் யோசிச்சுக்கிட்டு இருக்கேன். தப்பா நினைச்சுக்காதேடா" என்றான்.

**வீ**ட்டில் இரவு சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். வற்றல் குழம்பு ஜோராயிருந்தது. தொட்டுக் கொள்ளச் சுட்ட அப்பளம்

**கிருஷ்ணா**

வேறு. நல்ல காம்பினேஷன்.

அம்மா பரிமாறிக் கொண்டிருந்தாள் எனக்கு. மனைவி உள் ரூமில் ஏதோ கைவேலையாயிருந்தாள்.

"வடாமே போட்டுக்கலையேடா நீ?"

"வேண்டாம்மா. வயிறு ஒரு மாதிரி இருக்கு. நேற்று ஆபீஸ் கேண்டீன்ல டால்டால செஞ்ச ஸ்வீட்டை நிறையச் சாப்பிட்டுட்டேன். அதனால எண்ணெய்ப் பதார்த்தமோ இன்னிக்கு வேண்டாம்."



"நல்லா மொறு மொறுன்னு இருக்குடா" — அம்மா கெஞ்சினாள்.

"ஏன்மா வற்புறுத்தறே?"

"போடா, நீயும் உன் சாப்பாடும். இந்தக் காலத்துப் பசங்களே இப்படித்தான்..." என்று அவள் அலுத்துக் கொள்ளும் போதே வாசலில் யாரோ அழைப்பது கேட்க அங்கு விரைந்தாள்.

"என்னங்க தட்டுல தொட்டுக்க ஒண்ணுமே இல்லை? வெறும் குழம்பு சாதத்தை எப்படிச் சாப்பிடறீங்க?" என்று கேட்டபடியே உள் ரூமிலிருந்து புடைவையை இடுப்பில் செருகியபடி வெளியே வந்த என் மனைவி, நான் எதிர்பாராத விதத்தில் சட்டென்று பாத்திரத்திலிருந்த வடாமை அள்ளி

என் தட்டில் போட்டு விட்டாள்.

''சாப்பிட்டுப் பார்த்து எப்படியிருக்குன்னு சொல்லுங்க. நானே பிழிஞ்சது...'' என்று பெருமையுடன் சொல்லியபடி அவள் சமையலறையில் புகவும், என் அம்மா என்னை நோக்கி வந்தவள் என்னையும் தட்டையும் மாறி மாறிப் பார்த்தாள்.

''ஓகோ, அம்மான்னா வயிறு மந்தமாயிருக்கும். அதே பெண்டாட்டின்னா நல்லா ஆயிடுமாக்கும். பெத்து வளர்த்தவங்களை விட, நேத்து வந்தவள்தான் ஒஸ்தியாயிட்டா...'' என்று முணுமுணுத்தபடியே சென்றாள்.

சட்டென்று ரமேஷின் ஞாபகம்



வந்தது.

'ஓ...! காலையில் அவன் நிலைமையும் இப்படித்தானோ! ஒரு நல்ல நண்பனைப் போய்த் தவறாக நினைத்து விட்டேனே!' என்று வருத்தப்பட்டேன்.

# ஆளை மயக்கும் அந்தமான் தீவுகள்...




• சோம்பென் இன இளைஞர்கள்...

**அதிகாலை** நேரம். அந்தமான் தலைநகரான போர்ட் பிளேயரை எங்கள் கப்பல் நெருங்கிக் கொண்டிருந்தது. கப்பல் பயணம் ஒத்துக் கொள்ளாததால் ஏறத்தாழ மூன்றரை நாள் பயணத்திலும் வயிற்றுக் குமட்டலால் சோர்ந்து போயிருந்தவர்கள் கூட கரை காணப் போகும் சந்தோஷத்தில் கப்பலின் மேல் தளத்திற்கு வந்து விட்டார்கள்.

கிழக்குப் பக்கம் சூரியோதயமாகிக் கொண்டிருந்தது. கண்ணுக்குத் தெரிந்த சிறு சிறு தீவுகளெல்லாம் காலைக் கதிரவனின்



• வண்டூர் கடற்கரை...



* தாகத்திற்கு இளநீர்...

பொன்னொளி பட்டுத் தங்கத் தீவுகளாக ஜொலித்தன. அங்கிருந்த மரங்களிலும் செடி கொடிகளிலும் அமர்ந்திருந்த பனித் துளிகளில் பிரதிபலித்த இளஞ் சூரியனின் கதிர்கள், அந்தப் பனித் துளிகளை வைரக் கற்கள் போன்று பிரகாசிக்கச் செய்தன. இப்படி ஒவ்வொரு பக்கமும் ஒவ்வொரு தீவு ஒளிச் சிதறலில் வண்ண ஜாலம் காட்டிய போது அதைப் பார்ப்பதா, இதைப் பார்ப்பதா என்று தடுமாறாத மனித மனமே இல்லை.

தூரத்திலிருந்து பார்ப்பதற்கே இப்படியென்றால் அருகில் சென்று பார்க்க எப்படியிருக்கும் என்ற கற்பனையுடனேயே போர்ட் பிளேயர் துறைமுகத்தில் இறங்கினோம். நானும் என் நண்பனும் டாக்ஸி பிடித்துக் கொண்டு நகரில் உள்ள என் சகோதரி வீட்டுக்குச் சென்றோம்.



* எங்கெங்கு காணினும் பச்சைப் பசேல்தான்...

அந்தமான் நிகோபார் தீவுகளின் எண்ணிக்கை எத்தனை?

''சில நூல்களில் ஐந்நூறு என்று குறிப்பிட்டிருந்தாலும் அரசு கணக்குப்படி மொத்தம் 321 தீவுகள்தான். அவற்றில் 38 தீவுகளில் மட்டுமே மனிதர்கள் வாழ்கிறார்கள். மற்றவையெல்லாம் இன்னும் மனிதர்களின் காலடி படாத கன்னித் தீவுகளாகத்தான் இருக்கின்றன...'' என்றார் என் சகோதரியின் கணவர். அதோடு, ''இதுவரை கன்னியாகுமரிதான் இந்தியாவின் தென்முனை



* போர்ட் பிளேயரின் முக்கிய கடைவீதி....




• கார்பைன் ஸ்கோவ் பீச்.

என்று நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால், உண்மையான தென்முனை கிரேட் நிக்கோபார் தீவின் இந்திரா பாயிண்ட் (பிக்மாலியன் முனை)தான்'', என்றார் அவர். தேசப் படத்தை அவர் எடுத்துக் காட்டிய போது, ''அட ஆமாம்!'' என்றேன் நான்.

பிறகு, ''இங்கே எங்கு பார்த்தாலும் கடற்கரையாகத்தான் உள்ளது. ஆயினும் அழகான கடற்கரை ஏதேனும் உள்ளதா?'' என்று நான் கேட்ட போது, ''வண்டூர் பீச், கார்பைன் ஸ்கோவ் பீச் ஆகியவை அனைவரையும் கவரக் கூடியவை'' என்றார்.

மறுநாள் போர்ட்பிளேயருக்கு அருகிலுள்ள அக் கடற்கரைகளுக்குப் புறப்பட்டோம். முதலில் வண்டூர் பீச். செல்லும் வழியெல்லாம் சிறு இடம் கூட பாக்கியில்லாமல் பச்சைப் பசேல் மரங்களின் அணிவரிசை. அத்தனையும் விதம் விதமான மரங்கள். அவ்வப்போது கொஞ்சம் மரகதப் பச்சைகளில் புல்வெளிகள். அங்கங்கே தேங்கி நிற்கும் மழை நீர். கூடவே இளநீர்க் காய்களின் பாரம் தாங்காமல் தவித்துக் கொண்டிருக்கும் தென்னைகள். வெயிலே படாத தரை... இவற்றையொட்டித்தான் வண்டூர்க் கடற்கரை!

கடற்கரை மணலில் மல்லாந்து படுத்துக் கொண்டு நீல வானத்தை ரசித்துக் கொண்டிருந்த நாங்கள் எழுந்து பார்த்த போது ஓர் அதிர்ச்சி! ஆம்; எங்கள் காலருகில் இருந்த கடல் நீர் எங்கே? நாங்கள் படுத்துக் கிடந்த போது ஏதாவது தேவதைகள் வந்து எங்களை அப்படியே தூக்கிக் கொண்டு போய் வேறு இடத்தில் போட்டு விட்டனவா என்ன?



• இதுபோன்ற கன்னித்தீவுகள் ஏராளம்...


இப்படி நாங்கள் திகைத்துக் கொண்டிருக்கையில், ''இங்கே வெயில் ஏற ஏறக் கடல் நீர் பின்னோக்கிச் சென்று விடுவதும் பின்னர் இரவில் முன்னேறி வருவதும் ஒரு விசேஷம்...'' என்று எங்கள் திகைப்பைப்

போக்கினார் ஒருவர்.

அங்கிருந்து புறப்பட்டு கார்பைன் ஸ்கோவ் கடற்கரைக்குச் செல்ல ஆரம்பித்தோம். நாங்கள் சென்ற டிரக் வாகனத்தை ரோடில் போகச் சொல்லி, அதைக் குறுக்கு வழியாகச் சென்று மீண்டும் பிடித்துக் கொள்வதாக ஓர் ஏற்பாடு. காரணம் அந்த இடத்தின் இயற்கையைப் பூரணமாக அனுபவிக்க வேண்டும் என்பதுதான்.

அப்படி நாங்கள் குறுக்கு வழியாகச் சென்றபோது இடையில் ஒருசிறுமைதானம். பையன்கள் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தார்கள். பச்சைக் கம்பளத்தின் நடுவே எப்படி வந்தது அந்த மைதானம்? அது அண்மையில் பிரதமர் ராஜீவ் காந்தி சென்ற போது போடப்பட்ட ஹெலிகாப்டர் தளமாம்! யாரோ ஒரு ஜோதிடர் சென்ற வருடத்தின் ஆரம்பத்தில் பிரதமருக்கு நிலத்தில் ஒரு பெரிய கண்டம் இருக்கிறது. அதனால் அந்த நாட்களில் நீரின் மீதிருப்பதே நல்லது என்று சொல்லவே, பிரதமர் புறப்பட்டு அந்தமானுக்குச் சென்று ஒரு வாரம் படகில் வாசம் செய்தாராம்! சொன்னார்கள். நம்புகிறவர் நம்புங்கள்.

இப்போது கண் முன்னாலேயே வந்து விட்டது கார்பைன் ஸ்கோவ் கடற்கரை. வண்டூர் பீச்சை விட அகலமானது இது. அலைகளின் வேகம் மிதமாக இருப்பதால் கடற்குளியல் பிரியர்களுக்கு இக்கடற்கரை ஒரு வரப்பிரசாதம் என்றுதான் சொல்ல



* தண்ணீரில் மிதந்த பிரதமர்...



வேண்டும். வசதியுள்ளவர்கள் வந்து தங்க இதன் ஓரத்திலேயே ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றும் இருக்கிறது.

'கார்பைன் ஸ்கோவ்' என்று இதற்கு எப்படிப் பெயர் வந்தது? "நூறாண்டு காலத்திற்கு முன்பு போர்ட் பிளேயரில் இருந்த பாதிரியார் ஒருவரின் பெயர் கார்பைன். அவர் பழங்குடிகளைக் கண்டு பிடித்து முன்னேற்றுவதற்காகத் தீவுகளின் பல இடங்களுக்கும் சென்றார். அவர்களின் முன்னேற்றத்திற்கு அடிகோலினார். எனவேதான் அவர் நினைவாக இப்பெயர்" என்றார் ஓர் அன்பர். கூடவே, விதம்விதமான கடற்சிப்பிகளைச் சேகரிக்கும் ஆர்வமுள்ளவர்களுக்குச் 'சிடியாடாப்' என்ற கடற்கரை ஒரு வரப்பிரசாதம். சிப்பிகளின் சுரங்கம் போல் இருக்கும் அது....." என்றார் அவர்.


மறுநாள் ஆசியாவிலேயே மிகப் பெரிய மர அறுவை ஆலையான சாத்தம் ஆலைக்குச் சென்றோம். தலைநகரிலிருந்து நடை தூரம்தான். இத்தனை பெரிய மர அறுவை ஆலை அமையக் காரணம் என்ன? சந்தேகமென்ன? அந்தமானின் வனவளமே தான்!

அந்தமான், நிக்கோபார்த் தீவுகளில் தொண்ணூறு சதவிகிதம் காடுகள்தான். போர்ட் பிளேயர் நகரைத் தவிர மற்ற இடங்களிலெல்லாம் அங்கங்கே மரங்களுக்கு மத்தியில்தான் வீடுகளே காணப்படுகின்றன என்றால் வேறென்ன விளக்கம் வேண்டும்? மனிதர்கள் புகமுடியாத அடர்ந்த காடுகள் தவிர, ஆறாயிரம் சதுர கி.மீ. பரப்பளவுக்கு அந்தமானில் பயனுள்ள மரங்கள் செழித்து நிற்கின்றன. இவற்றோடு உலகிலேயே வேறெங்கும் காண முடியாத இருநூறு வகைப் பூவினங்களும் இங்குதான் உள்ளன. முதல் ஐம்பதடி உயரத்திற்கு மொழுமொழுவென்று வளர்ந்து ஐம்பதடிக்குப் பிறகே தனது முதல் கிளையைத் துளிர்விடும் 'கூர் ஜன்' என்னும் மரவகையும் அந்தமானில் மட்டுமே உள்ளது! இத்தனை காரணங்களால் தான் ஆசியாவிலேயே பெரிய மர ஆலை இங்கே அமைந்திருக்கிறது. இது 'சாத்தம்' என்னும் தீவில் அமைந்திருப்பதால் சாத்தம் மர அறுவை ஆலை என்ற பெயரைப் பெற்று விட்டது!

இப்படி ஒரு பக்கம் மரங்கள் வெட்டப்பட்டு உலகின் பல பாகங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டுக் கொண்டிருந்தாலும், மறுபக்கம் வெட்டிய காடுகளைப் புதுப்பிப்பதில் அரசு காட்டும் அதீத ஆர்வத்தைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. அதோடு, இங்கு காடுகளைப் புதுப்பிப்பதில் பிரச்னை துளியும் இல்லை. விமானத்திலிருந்தோ, ஹெலிகாப்டரிலிருந்தோ விதைகளைத் தூவி விட்டால் போதும்; இங்கு பெய்யும் அபரிமிதமான மழையில் விதைகள் தாமாகவே முளைத்து மரங்களாகச் செழித்து விடுகின்றன என்பதும் விசேஷம்!

விவசாயப்பயிர்களுக்கும் இங்கேகுறைவில்லை. நெற்பயிர்கள் குஷியாக வளர்ந்து அசைகின்றன. ஆனால் நெற்பயிரைத் தவிர, மற்ற பயிர்களுக்கு இங்குள்ள நத்தைகள் முதல் தரமான எதிரி! நத்தை என்றால் நம்மூர் நத்தை மாதிரியல்ல. எல்லாம் ஓரடி நீளத்திற்கும் அதிகமான நத்தைகள்!

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் போர்ட் பிளேயர் விமான நிலையத்தில் கோரைப்



* நிக்கோபாரிகளின் வீடு.

புற்களின் தொல்லை அதிகமாக இருக்கவே, அவற்றை ஒழிக்க ஆப்பிரிக்கக் காடுகளிலிருந்து இந்த நத்தைகளைக் கொண்டு வந்து விட, அதுவே இப்போது பெரும் பிரச்னையாகி விட்டது! ஒரேயொரு வசதி, இவை கோடைக் காலத்தில் கூட்டுக்குள் சுருங்கிப் படுத்துக் கொண்டு விடும்; மழைக்காலத்தில் மட்டுமே வெளியே நடமாடத் துவங்கும் என்பதுதான். அதோடு இதன் மேல் கடல் நீர் பட்டால் உடனே இறந்துவிடும் என்பதும் விவசாயிகளுக்கு ஒரு வசதியாக இருக்கிறது.

நத்தைகள் இப்படியென்றால் இங்குள்ள நண்டுகளோ படு பயங்கரமானவை. ஆம்; இந்த நண்டுகள் சர்வ சாதாரணமாக ஒரு பெரிய தென்னை மரத்தில் ஏறி, அதிலுள்ள தேங்காயைப் பறித்து மட்டையையும் உரித்துத் தேங்காயை உடைத்துச் சாப்பிடும் என்றால் இதன் அபாயத்தைச் சொல்லவே தேவையில்லை! இப்படி இவை தேங்காய்களைத் திருடித் தின்பதால் இதற்குத் 'திருட்டு நண்டு' **(Robber Crab)** என்றே பெயர்.

இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு விஞ்ஞானி இந்த நண்டுகளைப் பற்றி ஆராய்வதற்காக ஒன்றைப் பிடித்து இரும்புப் பீப்பாய்க்குள் போட்டு அடைத்து வைத்திருந்தாராம். அரை மணிக்குள் பீப்பாயைத் துளைத்துக் கொண்டு வெளியே வந்து விட்டதாம்! இது ஒருவேளை கதையாகக் கூட இருக்கலாம், ஆனால் இந் நண்டுகள் ஐந்து கிலோ எடையை ஒற்றைக் காலிலேயே தூக்கும் பலம் வாய்ந்தவை என்பது முற்றிலும் உண்மை! இந்த பயங்கர நண்டுகள் மனிதர்கள் இல்லாத 'தென் சென்டினல்' போன்ற தீவுகளில் மட்டும்தான் இருக்கின்றன என்பது நம்மைப் போன்றவர்களுக்கு ஓர் ஆறுதல்!

போர்ட் பிளேயரில் பார்க்க வேண்டியவற்றுள் முதலாவது நேதாஜி ஸ்டேடியம். இங்குதான் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் முதன் முதலில் சுதந்திர இந்தியாவின் கொடியை ஏற்றி வைத்து, இந்திய விடுதலையைப் பிரகடனப்படுத்தினார்.

அடுத்தது, வனவளத் துறையினரின் மியூசியம். அரிதான மர வகைகள் அத்தனையை



* நிக்கோபாரி இளைஞர்களும் யுவதிகளும்.

* ஜாரவா இனச் சிறுவன்.



யும் இங்கே காணலாம். பிறகு இந்த மியூசியத்திற்குள்ளேயே இருக்கும் உயிரியல் பூங்கா. அந்தமானில் மட்டுமே காணப்படுவது 'மக்காடே' என்ற குரங்கு. 'மெகாபோட்' என்ற பறவையினம், ஏறத்தாழக் கோழிக் குஞ்சு போலிருக்கும். இந்த இனமும் அந்தமானில் மட்டும்தான் இருக்கிறதாம். இந்தப் பறவை முட்டையிடும் என்றாலும் அடைகாப்பு வேலைகளைச் செய்வதில்லை! இன்னொரு விசேஷம், இப் பறவைக்குப் பறக்கத் தெரியாது என்பது. இங்குள்ள புறாக்களெல்லாம் பச்சையும், தங்க நிறமும் கலந்து, ஒருவிதத் தனி அழகு பெற்றுத் திகழ்கின்றன.

அடுத்தது செல்லுலார் ஜெயில். உள்ளே நுழைந்தவுடனேயே வலது பக்கம் உள்ள ஓர் அறையில் இச் சிறையிலிருந்தோரின் புகைப்படங்களையும், பெயர்களையும் காணலாம். சிறையிலிருந்த கைதிகளுக்குச் சவுக்கடி கொடுக்கப்பட்ட போது அவர்களை எப்படிக் கட்டி வைத்து அடிப்பார்கள் என்பதை விளக்க மாதிரி உருவமொன்றை அப்படிக் கட்டி வைத்திருப்பதைக் கண்ட போது எத்தனை சுதந்திரப் போராட்டத் தியாகிகள் அப்படித் தண்டனை பெற்றார்களோ என்று நம் நெஞ்சம் நடுங்குகிறது.

இங்குள்ள எல்லா அறைகளுமே தனிமைச் சிறைகளே. கைதிகள் மாலை ஐந்து மணிக்குச் சிறைக்குள் அடைக்கப்பட்டால் காலை ஆறு மணிக்குத்தான் கதவு திறக்கப்படும். இயற்கையின் அழைப்புக்குக் கூட அனுமதி வாங்க வேண்டும்! அந்தமான் சிறையின் கொடுமைக்கு இதைவிடச் சிறந்த உதாரணம் வேறு என்ன இருக்க முடியும்! வீர சாவர்க்கர் போன்ற விடுதலை வீரர்கள் இப்படிப்பட்ட கொடுமைகளை இங்கே அனுபவித்தவர்கள்தாம் என்றால் நமது இந்திய சுதந்திரத்தின் விலை என்னவென்பதை ஒருவாறு உணரலாம்.

கூடைசியாகப் பழங்குடி இன மக்கள். அந்தமான் தீவுக் கூட்டங்களில் மட்டும் அந்தமானியர், சென்டிநெலியர், ஜரவாக்கள், ஓங்கிகள் என்று நான்கு இனம். நிக்கோபார்த் தீவுகளில் நிக்கோபாரிகள், சோம்பன் என்று இரண்டு இனங்கள்.

அந்தமான் தீவுகளிலுள்ள நான்கு இனத்தவரும் நீக்ரிடோ என்ற பிரிவைச் சேர்ந்தவர்கள். நிக்கோபாரிலுள்ள மற்ற இரு இனத்தவரும் மங்கோலாய்டு என்ற பிரிவைச் சேர்ந்தவர்கள். இந்த இரண்டு பிரிவினரும் அருகருகேயுள்ள தீவுகளில் இருந்தாலும் பழக்க வழக்கங்களிலும் சரி, மொழிகளிலும் சரி சிறிதும் ஒற்றுமை கிடையாது.

நீக்ரிடோ இனத்தவர் கறுப்பு என்றால் அப்படியொரு கறுப்பு. ஆடை என்று எதும் இவர்கள் அணிவதில்லை. மங்கோலாய்டு பிரிவினரின் தோற்றம் மஞ்சள் நிறம்.

அந்தமானியர் என்ற இனத்தவர்களின் எண்ணிக்கை இப்போது மிகவும் குறைந்து




## அருள்வாக்கு

இப்போதெல்லாம் பண்பு, நாகரிகம், கலாசாரம் என்கிற வார்த்தைகள் நிறைய அடிபடுகின்றன. ஆனால் இதுகளைச் சொல்லும் போது விநயத்தை முக்யமான அம்சமாக நினைத்து நாம் பேசவில்லை. முன் காலத்தில் இப்படியில்லை. அப்போது கல்ச்சர், கலாசாரம் என்றாலே அதற்கு முதல் லக்ஷணமாக விநயத்தைத்தான் நினைத்தார்கள். கல்ச்சர், கலாசாரம் என்ற வார்த்தைகளுக்கும் கல்வி என்ற வார்த்தைக்கும் ரொம்பவும் ஸம்பந்தம் இருப்பதைக் 'கல்' என்பது இவை எல்லாவற்றுக்கும் பொதுவாக இருப்பதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். கல்வி பெற்றவர்கள்தான் Cultured ஆக நாகரிகமுள்ளவர்களாக இருப்பார்கள். இங்கே கல்வி என்கிற போது எழுதப் படிக்கத் தெரிவதைச் சொன்னதாக அர்த்தமில்லை. நல்ல விஷய ஞானம்தான் கல்வி. அதை 'வித்யா' என்று சொல்வார்கள். அந்த வித்யையின் வாஸ்தவமான ப்ரயோஜனம் நமக்கு விஷய ஞானம் வந்து விட்டது என்று திமிர் பிடித்து அலையாமல் இன்னமும் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கிறது' என்று அடங்கி, விநயமாக இருப்பதுதான்.

ஆதி காலத்தில் சிஷ்யனானவன் குருவிடமும் தான் கற்கிற கல்வியிடமும் பகவானிடமும் ஸகல லோகத்திடமுமே அடங்கி விநயமாக இருந்ததால்தான் ஆத்ம வித்யையை யதேஷ்டமாக ஸம்பாதித்து வந்தான். ப்ரம்மசாரியானவன் குருகுல வாஸம் செய்கிற காலத்தில் அவன் எத்தனை பெரிய மிராசுதார் வீட்டுப் பிள்ளையானாலும் வீடு வீடாகப் போய், 'பவதி பிக்ஷாம் தேஹி' என்று பிச்சை எடுத்து வர வேண்டும் என்று வைத்தார்களே, அது முக்கியமாக இந்த அடக்க குணத்தை உண்டாக்கத்தான்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.




"இன்னிக்கு ஞாபக மறதியா ஹெல்மெட் போடாம வண்டியில் போய்க்கிட்டு இருந்தேனா...! எதிரில் போலீஸ்காரர் வரவே நானாப் போய் 'சாரி சார் ஹெல்மெட் போட மறந்துட்டேன்'னு சொல்லி அஞ்சு ரூபாய் மாமூல் வெட்டிட்டேன். வீடு வந்து பார்த்தால்...!"

"என்ன ஆச்சு?"

"நான் போனது சைக்கிளில்தான் என்பது அப்போதுதான் ஞாபகத்துக்கு வந்தது!"

— ரா. ரகோத்தமன்.




— எஸ். நாகராஜன்.


டாக்டரின் மனைவி:

"ஞாபக மறதி அதிகமாயிருக்குன்னு வந்த நோயாளியைப் பரிசோதிக்க ஏங்க அரை மணிக்கு மேல் எடுத்துக்கிட்டீங்க?"

டாக்டர்:-

ஹி...ஹி... அந்த அரைமணி நேரத்தில் அவரிடம் நாலைந்து தடவை ஃபீஸ் வசூலிச்சுக்கிட்டே இருந்தேன்.. அதான்...

— ரா. ரகோத்தமன்.



போய் இருபத்தெட்டில் வந்து நிற்பதால், அவர்களைப் பாதுகாப்பதில் அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. அதனால் இப்போது இவர்கள் மற்ற நாகரிகமடைந்த மக்களோடு பழகும் பக்குவத்தையும் சிறிது சிறிதாகப் பெற்றுக் கொண்டு வருகிறார்கள்.

வட சென்டினல் தீவில் வசிக்கும் சென்டிநெலியர்கள் என்பவர்களும் இன்னும் ஆடைகளை அணியும் பழக்கத்திற்கு வரவில்லை. இன்னும் வில், அம்புகளுடன்தான் வேட்டையாடுகிறார்கள். இவர்களின் எண்ணிக்கையும் 250 மட்டுமே. இவர்கள் வசிக்கும் தீவு மிகவும் தனித்து இருப்பதால் வெளியுலக நாகரிகம் இவர்களைச் சிறிதளவும் பாதிக்கவில்லை.

தென் மத்திய அந்தமானில் வசித்து வந்த 'ஓங்கி' என்ற இனத்தவரை அரசு ஒட்டு மொத்தமாக அள்ளிக் கொண்டு போய் ஸ்ட்ரெயிட் தீவில் குடியமர்த்தி நாகரிகமடையச் செய்ய முயன்றது. அப்போது சாதுவான இம் மக்களிடம் நம்மவர்கள் போதைப் பொருட்களை அறிமுகப்படுத்தி ஓரளவுக்குக் கெடுத்து விட்டார்கள் என்றே சொல்லலாம். இவர்களின் எண்ணிக்கையும் முந்நூறு மட்டுமே.

தெற்கு அந்தமானில் உள்ளவர்கள் 'ஜரவா' இனத்தவர் மட்டுமே. இவர்களின் உணவு மீன், தேன், கனி வகைகள் ஆகியன. இன்னும் மரக்கட்டைகளைக் கொண்டுதான் தீயை உண்டாக்குகிறார்கள். பல் துலக்குகிற விஷயம் கூட இவர்களுக்கு இன்னும் தெரியாது. சொல்லிக் கொடுக்கச் சென்றால் அடிக்க வருவார்களாம்! அதையும் மீறி நெருங்கினால், அம்பு நுனியில் தங்கள் எச்சிலைத் தடவி எய்வார்களாம். அது பட்ட ஐந்தாவது நிமிஷத்திலேயே நாம் அவுட்! ஆம்; இவர்கள் எச்சில் அப்படியொரு விஷமாகி விட்டதாம்! கடந்த நூறாண்டு காலமாக இவர்களைத் திருத்த முயன்று கொண்டிருந்தும் முடியவில்லை.

நிக்கோபாரில் வசிக்கும் நிக்கோபாரிகள் ஓரளவுக்கு நாகரிகமடைந்து விட்டார்கள். விரைவாக முன்னேறியும் வருகிறார்கள்.

எல்லாம் சரி, அந்தமானில் உள்ள தமிழர்களின் நிலை எப்படி என்று கேட்கிறீர்களா?

"மற்ற மாநிலங்களிலிருந்து அந்தமானுக்கு வந்தவர்கள் தலையில் மூளையையும், வயிற்றில் பசியையும் மட்டும்தான் கொண்டு வந்தார்கள். ஆனால் தமிழர்களோ கூடவே தங்கள் பாக்கெட்டுகளில் அரசியல் கட்சிக் கொடிகளையும் சேர்த்துக் கொண்டு வந்து விட்டார்கள். அதுதான் பிரச்னையே..." என்கிறார் அந்தமான் முரசு என்னும் தமிழ் வார இதழின் ஆசிரியர் எஸ். பி. சுப்பிரமணியன். இதைவிட ரத்தினச் சுருக்கமாக வேறு என்ன சொல்லிவிட முடியும்?

— எல். வெங்கடேஷ்

# கேண்டிலை அட்டவும்

''முடிவாக என்ன சொல்றே மணி?'' சற்று கோபமாகக் கேட்டார் மாருதி ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸின் மானேஜர் பிரபு.

''சொல்றதுக்கு என்ன சார் இருக்கு? உங்களுக்கு உடனடியா டீ பாக்கெட் வேணும்... அதுக்காக என்னை மிஷினை ஓட்டச் சொல்றீங்க. சரி, ஓட்டறேன்... ஆனால் எனக்கு என்னோட சம்பளத்தைத் தவிர, ஆபரேட்டர் சிவதாணு சம்பளத்தையும் சேர்த்துத் தரணும். தந்தால்தான் ஓட்டுவேன்...''

பிரபு யோசித்தார்.


''வேண்டியதில்லை. நீ போய் உன்னோட வேலையைச் செய். நானே வந்து ஆபரேட் பண்ணறேன்...''

மணி விருட்டென்று போய் விட்டான்.

அவன் போகும் போது அவன் பின்புற பேண்ட் பாக்கெட்டிலிருந்து ஒரு பேப்பர் விழுந்தது. மணி அதைக் கவனிக்கவில்லை.

பிரபு ஓடிச் சென்று அதை எடுத்தார். படித்தார்.

''அன்புள்ள மணி, நான் நாலு நாட்கள் லீவ் கேட்டேன். இன்னும் பர்மனென்ட் ஆகவில்லை. அதனால் சம்பளம் இல்லாத லீவ் வேண்டுமானால் தருவேன் என்றார் மானேஜர். நான் அவசரமாகப் போக வேண்டியிருப்பதால் புறப்பட்டு விட்டேன். அந்த ஸீ இ மெஷினில் நான் மட்டுமே பயிற்சி பெற்றவன். வேறு யாருக்கும் ஓட்டத் தெரியாது. எனக்கு நீ அஸிஸ்டெண்ட்டாக இருப்பதால் உனக்குக் கொஞ்சம் ஓட்டத் தெரியும். எனவே உன்னை ஓட்டச் சொன்னால் டபுள் சம்பளம் கேள். தர மறுத்தால் ஆபரேட் பண்ணாதே... மற்றபடி நான் நேரில் வந்து பேசிக் கொள்கிறேன். முதலில் டீத்தூளைக் கொட்டி, சிவப்பு பட்டனை அழுத்து. பின் இடது புறக் கைப்பிடியை இழு. அப்புறம் மஞ்சள் பட்டனை அழுத்து. தானே ஓடி பாக்கெட் கேனில் பாக்கெட் வந்து விழும். கஷ்டம் ஒண்ணுமில்லை. இப்படிக்கு உன் அன்புள்ள சிவதாணு. பின் குறிப்பு: பாக்கெட்டுக்குள் டீத்தூள் விழவில்லை என்றால், கேண்டிலை அட்டவும்... மெஷினை நிறுத்த வெள்ளை பட்டனை அழுத்து.''



பிரபு கடிதத்தைப் படித்து முடித்தார்.

'ஓ... ஹோ... சீனியரும் ஜூனியரும் சேர்ந்து கொண்டு மிரட்டறீங்களா? இதோ நானே மெஷினை ஆபரேட் பண்ணறேன்...' என்று கம்பீரமாகப் புறப்பட்டார்.

டீத்தூளை பேசினில் கொட்டினார். சிவப்பு பட்டனை அழுத்தினார். இடது புறக் கைப்பிடியை இழுத்தார். மஞ்சள் பட்டனை அழுத்தினார்.

என்ன ஆச்சரியம்! 'டபடபடப...' என்று மெஷின் ஓட ஆரம்பித்து விட்டது. டீ பாக்கெட்டுகள் மாலை போல் கோத்து ஓட ஆரம்பித்தன. வெற்றிப் புன்னகையோடு மணியைப் பார்த்தார். மணியின் முகத்தில் அசடு வழிந்தது.

இருபது நிமிடம் ஆனது. பிரபுவின் முகம் பேயறைந்தது போல ஆயிற்று. டீ பேசினை எட்டிப் பார்த்தார். டீத்தூள் நிரம்பி இருந்தது.

டீ பாக்கெட்டுகள் டீத்தூள் இல்லாமல் மாலையாய்க் கோத்தபடி டீ கேனுக்குள் விழுந்து கொண்டிருந்தன.

பட்டென்று வெள்ளை பட்டனை அழுத்தினார். நேராகத் தம் அறைக்குச் சென்று சிவதாணுவின் கடிதத்தைப் படித்துப் படித்துப் பார்த்தார்.

'டீத்தூள் விழவில்லை என்றால் கேண்டிலை அட்டவும்.' கேண்டில் என்றால் மெழுகுவர்த்தி...அட்டவும் என்றால்...' குழம்பினார்.

''மணி சார்... உங்களை மானேஜர் கூப்பிடறார்...'' பியூன் தண்டபாணி மணியை அழைத்தான்.

''கூப்பிட்டீங்களா சார்...'' நெற்றி வியர்வையைத் துடைத்தபடி பிரபுவின் முன்னே வந்து நின்றான் மணி.

''சிவதாணுவின் சம்பளத்தையும் தர்றேன். மெஷினை ஓட்டு...''

''எஸ் சார்...''

''மணி... ஒரு சந்தேகம்...''

''என்ன சார்?''

''கேண்டில்னா... மெழுகுவர்த்தி... நாம மெழுகுவர்த்தி வாங்கறதே இல்லையே...''

குபுக்கென்று சிரித்தான் மணி.

''அட்டவும்னா என்ன...?''

''அதெல்லாம் தொழில் ரகசியம் சார்... நான் போய் மெஷினை ஓட்டறேன்...'' என்றபடி போனான்.

'ம்... சிவதாணு நல்ல வேலையா ஹேண்டிலை கேண்டில்னும், ஆட்டவும் என்கிறதை அட்டவும்னும் தப்பா எழுதினான்...' என்று மனசுக்குள் நினைத்தபடி ஹேண்டிலை ஆட்டினான்.

டீத்தூளுடன் பாக்கெட்டுகள் மாலை போல வந்தன.

— மழபாடி ராஜாராம்

# உயிரே உருகாதே...

விஜயநிலா



"எனி அதர் லெட்டர்ஸ் ஸார்?" என்றாள் மஞ்சுளா.

யோசனையாய்க் கண்களை மூடித் திறந்த அஷோக், மெல்ல அவளைப் பார்த்தான்.

"இல்லை. அவ்வளவுதான். அப்புறம் இன்னிக்கு இம்பார்ட்டண்ட் அப்பாய்ண்ட்மெண்ட்ஸ் எதுவுமிருக்கா?"

"சொல்றேன் ஸார்" எனக் குறிப்புப் புத்தகத்தில் மஞ்சுளா விரலோட்டியபோதே அவசரமாய் மறுத்து —

"எல்லாத்தையும் கான்ஸல் பண்ணிடு மஞ்சுளா... ஐ நீட் ரெஸ்ட். நோ மோர் எங்கேஜ்மெண்ட்ஸ் டுடே..."

மஞ்சுளா இன்ட்டிமேட் மணத்தை மட்டும் விட்டு விட்டு வெளியேறியதும் கண் மூடி யோசித்தான்.

முழுதாய் ஐந்து வருடங்கள்!

'எப்படி ஓடி விட்டன. ப்ரிமியா இன்னும் என்னை ஞாபகம் வைத்திருப்பாளா...? என்ன இளக்காரமாய் என்னை வீசி எறிந்து போனாள். எத்தனை வார்த்தை நெருப்புகள். அத்தனையும் சாட்டையடியாய் என் மேல் விழ, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமும் உழைக்க வேண்டும் — உயர்ந்து காட்ட வேண்டும் என்று முனைப்புடன் செயல்பட்டு...

'ப்ரிமியா... என்னைப் பற்றித் தப்புக் கணக்குப் போட்டு விட்டாய். தச்சுப் பட்டறை கூட வைக்கத் தெரியாதவன் என்று என்னை இளக்காரமாய்ப் பார்த்த நீ, நினைத்துக் கூடப் பார்த்திருக்க முடியாது. எனது விஸ்வரூப வளர்ச்சியை! ப்ரிமியா என்கிற உன் பெயரிலேயே நான் சிறு புள்ளியாய்த் துவங்கி வைத்த முயற்சி தழைத்து, இன்று பெரிய அளவில் வளர்ந்து இன்று நான் சிட்டியில் பெரிய பிஸினஸ்மேன்.

'என்ன சுலபமாய்ச் சொல்லி விட்டாய் ப்ரிமியா... நான் எதற்கும் லாயக்கில்லாதவன் என்று. உத்தியோகம் பார்க்கிறோம் என்கிற திமிர். கை நிறையச் சம்பாதிக்கிற ஆணவம். உன்னைச் சந்தித்த அந்த இனிய நாட்களை எல்லாம் எப்படி உன்னால் தூக்கி எறிய முடிந்தது?'

அஷோக் யோசித்தான். அந்த நினைவுகள். அந்த சந்தோஷ அலைகள்...

'ஸாரி ப்ரிமியா.. பத்து நிமிஷம் லேட்டாயிருச்சு. பார்த்தியா முகத்தைக் காட்ட மாட்டேங்கிறியே. கோவமா என் தேவதைக்கு...'

அஷோக் ஆர்வமாய் வந்து நிற்பான். முகத்தைத் திருப்பிக் கொள்வாள் ப்ரிமியா.

'இப்ப நீ திரும்பிப் பார்க்கலேன்னா...'

விருட்டென்று கிளம்பிக் கடலலைகளை நோக்கி நடக்கவும், மெலிதான ஐஸ்க்ரீம் குரலால் அழைப்பாள்.

"அ...ஷோ...க்.."

திரும்பி வந்து திகைத்துப் போயிருக்கிற அவள் முகத்தைப் பார்த்தபடி —

'என்ன ப்ரிமியா.. பயந்துட்டியா? நான் தற்கொலை பண்ணிக்கப் போறேன்னா நினைச்சே... தா பார்த்தியா.. நாலடி தொலைவில் ஒருத்தி பஞ்சாபி போலிருக்கு... கிட்டப் போய்ப் பார்த்துட்டு வரலாம்னு..."

'யூ.. யூ... உங்ககூட பத்து நிமிஷத்துக்கு நான் பேசப் போறதில்லை.'

சொன்ன மாதிரியே பத்து நிமிடங்களுக்கு வாய் திறக்க மாட்டாள்.

அவளைப் பேச வைக்கிற வித்தை அவனுக்குத் தெரியும்.

'ச்சே... என்ன இருந்தாலும் நான் அவசரப்பட்டிருக்கக் கூடாது. எதிர் வீட்டுல புதுசாக் குடி வந்திருக்கிற அந்த உஷாக் குட்டிகிட்டே சும்மா ரீல் விட்டா... தினம் கால்குலஸ், ட்ரிக்னாமெட்ரின்னு கணக்குப் புத்தகத்தை எடுத்துக்கிட்டு அதுவும் முழங்கால் தெரியறாப்ல கவுன்... அப்புறம்...'

'ச்சீய்.. வாயைக் கழுவுங்க... என்ன ஆம்பிளைங்களோ... தினம் இதே நினைப்புத்தானா... சொல்லுங்க அஷோக்? இன்னிக்குப் போயிட்டு வந்த இண்டர்வ்யூ எப்படி, ஹோப் இருக்கா?'



அவளது அந்தக் கனிவான வார்த்தைகளைக் கேட்கிற போது, கண்களில் நீர் திரண்டு விடும். வேலையில்லை என்று அலட்சியப்படுத்துகிற அப்பா.. தங்கைகள். எங்கே கடன் கேட்டு விடுவானோ என்று விலகிப் போகிற நண்பர்கள். இவர்களிடையே அவன் ஒரே பிடிமானம் இந்த ப்ரியா தேவதைதான்.

'வ... வந்து எனக்கு நம்பிக்கையில்லை ப்ரியா. எனக்கு இந்த ஜன்மத்துல வேலை கிடைக்கப் போறதில்லை.'

விரக்தியாய்க் கூறுவான்.

அதற்கப்புறம் வந்த நாள்களில்தான் ப்ரிமியா வெகுவாய் மாறிப் போனாள். ரெண்டு நாளாய் வழக்கமாய்ச் சந்திக்கிற இடத்தில் முன்கூட்டியே கனவுகளுடன் ஓடிப் போய் ஏமாந்து...

மறுநாள் —

'என்ன ப்ரிமியா.. ரிங் போயிட்டே இருக்குது. உங்க ஹெட் கிளார்க் உன்னைக் கூப்பிட்டு விட்டு எத்தனை நேரமாகுது. ஹேய்.. என்ன ரெண்டு நாளாக் காணோம். என்ன, கட்டாய விடுமுறையா?'

'ஸாரி அஷோக். எனக்கு வேறே வேலை இருந்துச்சு... வரலை. என்ன விஷயம்?'

அசுவாரசியமாய்க் கேட்டாள்.

'ஹேய்.. என்ன எதுவும் விஷயமிருந்தாத்தான் உன்கிட்டப் பேசணுமா... இன்னிக்கி ஒரு இண்டர்வ்யூ போறேன். இந்தத் தரம் கிடைக்கும்னு நம்பிக்கையிருக்கு.'

'ப்ச்...'

'என்னம்மா.. உடம்பு எதுவும் சரியில்லியா?'

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. என்ன விஷயம்? சட்டுன்னு சொல்லுங்க அஷோக். எனக்கு இங்கே தலைக்கு மேல் வேலைங்க இருக்கு.''

மளுக்கென்று உடைந்து போனான்.

அன்று என்னமாய்ப் பேசி விட்டாள்.

'ப்ரிமியா.. நீ.. நீ நிஜமாத்தான் சொல்றியா? நீயே எடுத்த முடிவுதானா இது?'

'யெஸ்' தீர்மானமாய்ச் சொன்னாள்.

'அப்ப இத்தனை நாள் நாம பழகினதெல்லாம்...'

'ஸாரி அஷோக். ஏதோ பழகினோம். இப்ப என்ன ஆச்சு? எனக்கு எங்க வீட்டுல ஒரு நல்ல வாழ்க்கை அமைச்சுத் தரப் போறாங்க. அதை ஏன் நான் கெடுத்துக்கணும். லுக்! ஒரு நொண்டிக் குதிரையை நம்பி யாரும் ரேஸுக்குப் போக மாட்டாங்க...'

ச்சே... காதலை எப்படிக் கொச்சைப் படுத்தி விட்டாள். என்னைக் கையாலாகாதவன் என்று பணக்கார மாப்பிள்ளைக்குக் கழுத்தை நீட்டத் தயாராகி விட்டாளா? விட மாட்டேன்.

'என்னை மிதித்துத் தள்ளிய உன் முகத்தில் கரி பூசப் போகிறேன்...'

கறுவிக் கொண்டே நடந்தான்.

முழுதாய் ஐந்து வருடங்கள்!

ப்ரிமியா இந்த ஊரில்தான் வேலை பார்க்கிறாள். போய் அவளை நாக்கைப் பிடுங்கிக் கொள்கிறாற் போல் கேட்டு விட வேண்டும்.

புறப்பட்டான்.

அவனை எதிர்பார்த்திருக்கவில்லை. ஐந்து வருட இடைவெளி பெரிய மாற்றத்தை அவளிடம் ஏற்படுத்தவில்லை. எனினும் முகத்தில் சோகத்தின் சாயல் தெரிந்தது.

''நீங்க... அஷோக்தானே?''

சிரித்தான்.

''பரவாயில்லியே... என் பேர்கூட நினைவிருக்கே. இஃப்யூ டோண்ட் மைண்ட், உங்க கூட பேசணும். பர்மிஷன் போட்டுட்டு வர்றீங்களா.... வாசல்ல டொயட்டா இருக்கு.''

தன் பணத்தின் பகட்டை மறைவாய்த் தெரிவித்தான். அவன் மனத்தில் நொண்டிக் குதிரை வலுப்பெற்றுக் கனைத்தது ஆங்காரமாய்.

வந்தாள்.

''ட்ரைவ் இன்ல போய்ப் பேசுவோமா, பைதிபை உனக்குத் தெரியுமோ என்னவோ... இன்றைய தேதியில ஏகத்துக்கு இன்கம்டாக்ஸ் கட்டற பிஸினஸ்மேன் நான்.. என் கம்பெனியைக் கூட, என்னைப் புழுவாத் தூக்கி எறிஞ்ச உன் பெயரில்தான் ஆரம்பிச்சேன்... இப்ப நான் உசந்தாச்சு ப்ரிமியா. நீ என்னை அண்ணாந்து ஆச்சர்யமாப் பார்க்கிற அளவுக்கு உசந்தாச்சு. என்ன அப்படி பார்க்கறே? அது சரி, நீ எதுக்காக வேலை பார்க்கறே ப்ரிமியா? உன் வசதியான ஹஸ்பண்ட் உன்னை வேலைக்கு அனுப்பறாரா என்ன?''

குத்தலாய்க் கேட்டான். அவள் விழிகளில் குபுக்கென்று நீர் திரண்டது.

''இவ்வளவு தூரம் பழகிட்டு, என்னை நீங்க இன்னும் புரிஞ்சுக்கலையா அஷோக்?'' சன்னமாய்க் கேட்டாள்.

சிரித்தான்.

''உன்னை — உன் கால்குலேட்டிவ் மைண்டை எப்பவோ புரிஞ்சுக்கிட்டாச்சு ப்ரிமியா.. வெல்... உன் ஹஸ்பண்ட் என்ன பண்றார்? டாக்டரா, இல்ல இன்ஜினியரா?''

கண்களில் நீர் மல்க அவனைத் தீர்க்கமாய்ப் பார்த்தாள்.

''அஷோக்.. நான் உங்களை உதறிட்டதாத்தானே நினைக்கறீங்க... உங்க திறமையில் எனக்கு அபார நம்பிக்கை உண்டு. நீங்க என்னையே சுத்திச் சுத்தி வந்து வேலை வெட்டியில்லாம வீணாப் போயிடக் கூடாதேங்கறதுக்காகத்தான் உங்களுக்குள்ளே இருக்கற வேகத்தை — ஆங்காரத்தைத் தூண்டி விட்டேன்...''

திகைத்தான்.

''அப்படின்னா நீ இன்னமும் என்னை...''


''லவ் பண்றேன் அஷோக். ஐ ஸ்டில் லவ் யூ... நான் எதிர்பார்த்தபடியே நீங்க வளர்ந்தாச்சு. அது போதும் எனக்கு. நான் வரேன்...''

எழுந்தாள்.

''நான் உன்னை விட மாட்டேண்டா.. ப்ரிமியா.. என்னால நம்பவே முடியல... எனக்காக நீ ஊரை எதிர்த்துக்கிட்டு இத்தனை காலமும் தனியாவா இருந்தே?''

''இல்லே அஷோக். எனக்குள்ள எந்நேரமும் நீங்க இருக்கீங்களே...''

அவளது வார்த்தையில் தெரிந்த காதலின் பரிமாணத்தைப் பூரணமாய் உணர்ந்து சிலிர்த்தான் அஷோக்.



புது பீரோ
கதை: காஞ்சனா சந்திரசேகர்
படம்: செல்லம்
புத்தாவது திருமண நாளுக்குப் பீரோ வாங்கலாம்னு நேற்றுச் சொன்னபோது மறுத்தவர், இன்னைக்குச் சர்ப்ரைஸாக வாங்கி யனுப்பிச் சுட்டாரே... முதலில் போன் செய்யலாம்...
என்னாங்க... நேத்திக்கு மாட்டேன்னீங்க.... இப்போது வாங்கி அனுப்பிட்டீங்களே....
பீரோவா? நானா? ஒண்ணும் அனுப்பலையே! ஏதோ சூது நடந்திருக்கு.... திறக்காதே... போலீஸோடு வாறேன்....
சற்று நேரத்தில்....
ஏம்மா..... பீரோவை நீங்க திறக்கலையே... சரி, சாவியைக் கொண்டாங்க....


பீரோவைத் திறந்ததும்....
அய்யோ... நான் பீரோவைத் திறந்திருந்தால், என்னவாகியிருக்கும்... நல்ல வேளை....
உண்மையைச் சொல்லுடா திருட்டுக் கழுதை... எதுக்கடா இப்படியொரு நாடகம்?
அடிக்காதீங்க... நேற்று இரவு இவங்க ரெண்டு பேரும் பஸ்ல போனபோது, இந்தம்மா, வீட்டிலிருக்கிற நாப்பது பவுன் நகையை வைக்க பீரோ வாங்கலாம்னாங்க...
....அவர், வேண்டாம், புதுடிசைன்ல நகையா வாங்கலாம்னார். அதைப் பின்னாலிருந்த நாங்க கேட்டோம்... அதுதான் வீட்டிலிருக்கும் நகையைத் திருட இப்படியொரு திட்டம் போட்டோம்....
பாத்தீங்களா.... பொது இடத்தில் வீட்டு சமாச்சாரங்களைப் பேசினா இப்படித்தான். நல்லவேளையா எங்களுக்குத் தகவல் சொன்னீங்களே...

# தடுமாற்றமில்லாத தலையங்கம்

* கோழிவளர்ப்பு, மாடு வளர்ப்பு, போன்றவைகளில் தான் பணம் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில் மீனையும் வளர்த்து அதிகப் பணம் சம்பாதிக்கலாம் என்பதை 'மீன் பண்ணையில் பணம் பண்ணலாம்' என்ற கட்டுரை மூலம்தான் அறிந்து கொண்டோம்.

தக்கோலம், அ. முஸ்தபா.

* வேலையில்லா இளைஞர்களுக்குத் தன்னம்பிக்கை ஏற்படும் வகையில் மீன் பண்ணை பற்றி விளக்கம் அளித்துச் சுய தொழிலுக்கான யோசனைகளையும், ஆர்வத்தையும் அளித்த உங்கள் கட்டுரைக்குப் பல நூறு நன்றிகள்.

புதுக்கோட்டை, எஸ். சஞ்சீவி தாஸ்.

* 'தங்கள் அரசியல் ஜால்ரா அற்புதமாக ஒலிக்கிறது: குருகுல வாசம் எங்கே பயின்றீர்கள்?' என்றகேள்விக்கு, 'நடுநிலை ஆசிரமத்தில்' என்ற தங்களின் நறுக்கான பதிலில் கலப்படமில்லாத உண்மை உள்ளது. "தி.மு.க. ஆட்சியில் முதல் தடுமாற்றம்!" என்ற தலைப்பில் தடுமாற்றமில்லாத, எந்த பக்கமும் சாயாத நடுநிலைத் தலையங்கத்தைத் தந்திருப்பதே, தங்களின் பதிலுக்குச் சரியான சான்றாகும்.

சிதம்பரம், தங்க. குஞ்சிதபாதம்.

* அன்று அ.தி.மு.க.வை எதிர்த்துக் கொண்டு தி.மு.க.வில் சேர்ந்த போதும் சரி, இன்று தி.மு.க.வை எதிர்த்துக் கொண்டு தனியே நிற்கும் போதும் சரி, அரசியல் ஆதாயம் ஏதும் தேடாமல், சுயமரியாதை இழக்காமல், தன்னம்பிக்கை — தளராத உழைப்பு — தன்மானம் என்று வாழும் டி. ராஜேந்தர் உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியவர்!

லால்குடி, எம். இராஜேந்திரன்.




* 'நான் தூக்குக் கயிற்றில் தொங்கினாலும் தொங்குவேனே தவிர, மீண்டும் ஜெயலலிதா கட்சியில் சேரமாட்டேன்' என்று கூறியதிருநாவுக்கரசும், 'சயனைட் சாப்பிட்டாலும் சாப்பிடுவேனே யொழிய, தன்மானத்தை விட்டுச் சரணாகதி அடையமாட்டேன்' என்று கூறிய டி. ராஜேந்தரும் ஒன்றல்ல!

பூனாம்பாளையம்,
சுப்பிரமணியன்.

* காதலிக்காக உயிர் விட்டவர்களையும் தியாகம் செய்தவர்களையும்தான் படித்திருக்கிறோம்; பார்த்திருக்கிறோம். ஆனால் ஏதல் தன்னுடைய காதலனுக்காக வாய்பேசாமல் இருப்பதைப் படித்ததும் உண்மையிலேயே கண்ணீர் சிந்தி விட்டேன்.

மேலப்பாதி, எஸ். நாகராஜ்.

* 'பதவி வரும் பொழுது: பணிவு வர வேண்டும், துணிவும் வர வேண்டும், தோழா...' என்ற பாடல் வரிகளே, கா.சு. வேலாயுதனின் 'சேற்றில்மலர்ந்தவர்கள்' கதையைப் படித்தபோது நினைவுக்கு வந்தன.

புதுச்சேரி 12, புதுவை ராஜுமுனி.

* பெங்களூரைப் போல் நம் மூரில்வயதானவர்களுக்கு அரைக் கட்டணம் வசூலிக்கவில்லை என்றாலும் அவர்களிடம் அன்பாக நடந்து கொள்ளவாவது கண்டக்டர்கள் கற்றுக்கொள்வது அவசியம்.

செம்பொன்னார்கோயில்,
எஸ்.வி.ஏ. பிரகாஷ்.

* ஜெயசேகரன் எழுதிய 'நேர் கொண்ட பார்வை' சிறுகதை உறுதி, தன்னம்பிக்கை வேண்டும் என்ற கருத்தை விளக்கியதோடு, எப்படியான கஷ்டத்திலும் பெற்றோருக்கு உதவ வேண்டும் என்ற கருத்தையும் வலியுறுத்தியது. முத்திரைக் கதை! லதாவின் ஓவியம் அருமை.

நீடூர், அ. முஹம்மது நிஜாமுத்தின்.

* இவ்வாரச் சிறுகதைகள் அனைத்துமே தரமிக்கவையாய் இருந்தன.

குத்தாலம், ஜி.ஆர். ஜேஷ்.

* வைஜயந்திமாலா பாலி, பெண்ணுரிமைப் பாதுகாப்புக்காக, கட்சிக் கட்டுப்பாடுகளையும் மீறி, ஆக்ரோஷக் குரல் எழுப்பியிருப்பது—அதிர்ச்சி தந்த நிஜம்! இந்த ஆக்ரோஷம் அவரது பொது வாழ்க்கை முதிர்ச்சியைக் காட்டுகிறது!

வேலாயுதம்பாளையம்,
எம். சம்பத்.



* சமகோண்ட் அவர்களின் பேட்டியைக் கல்கியில் வெளியிட்டதற்கு நன்றி. இது சம்பந்தமாக ஒரு கவலையான நிகழ்ச்சி:

சமகோண்ட் அலுவலகத்திலிருந்து வெளியே வந்து நேர் எதிரே இருந்த தபால் நிலையத்துக்குள் நுழைந்தேன். தபால் தலை வாங்கினேன். அது கவுன்டரிலிருந்து பறக்கவே, கீழே குனிந்து எடுத்தேன். நிமிர்வதற்கு முன் என் மணி பர்ஸ் அபேஸ்! அரக்கப் பரக்க சுற்று முற்றும் பார்த்தேன். பிக்பாக்கெட் செய்தவன் மறைந்த மாயம் புரியவில்லை.

சில நிமிடங்களுக்கு முன் தான் உதவி போலீஸ் கமிஷனர் சமகோண்ட் எனக்களித்த பேட்டியில் "ஜனங்கள் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருந்தால் நிறையக் குற்றங்கள் குறைந்து விடும்" என்று சொல்லியிருந்தார். அது எவ்வளவு உண்மை!

ஒரு நிமிட அஜாக்கிரதையினால் 130 ரூபாய் இழந்தேன்.

பம்பாய்-71, செம்பூர் சந்துரு.





# விக்ராந்த்

நம்பகமான டயர்

**இந்தியாவின் முதல் டிரக் ரேடியல்களைத்
தயாரித்த தொழில் நுட்பத்துடன்**

MAA COMMUNICATIONS VTL 488A TAM




காலம் கடந்த கடும் மழைகள், சாலைகளில் எதிர்பாராத வெள்ளங்கள், மண்சரிவுகள், பல காத தூரம் குண்டு குழிகள் — ஆம் இந்தியச் சாலைகளில் எதிர்பாராத-வற்றை எதிர்பார்க்கலாம். இத்தகைய எதிர்பாராத சவால்களை நேரிடுவதற்கென்றே, ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர்களை டன் கணக்கான சுமை ஏற்றிய டிரக்கில் எளிதாகக் கடப்பதற்கென்றே பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டுள்ள டயர் விக்ராந்த். இந்தியச் சாலைகளில் ஓட்டுவதற்காகவே நவீன தொழில் நுட்பத்தால் வலுப் படுத்தப்பட்டு வரும் நம்பகமான டயர்.

**உலகின் முதன்மையான வேக ஓட்ட டயரின் தொழில் நுட்பம்**

ஒவ்வொரு விக்ராந்த் டயரின் பின்னிலும் இங்கிலாந்தின் ஏவான் நிறுவனத்தின் மேம்பட்ட தொழில் நுட்பம் உள்ளது. இந்நிறுவனம் மோட்டார் வண்டிகளின் ராஜாவான, உலகின் முதன்மையான ஓட்டப் பந்தய டயர்கள் பொருத்தப்பட்ட ரோல்ஸ்-ராய்ஸின் தேவைகளைச் சந்திக்கும் பெரிய நிறுவனமாகும். விக்ராந்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி இலாகா ஏவான் தொழில் நுட்பத்தைப் பின்பற்றி இந்தியச் சாலைகளுக்கு ஏற்றபடி செயல்திறன் வாய்ந்ததாக டயர்களைத் தயாரிக்கிறது.

**இந்தியாவின் முதல் டிரக் ரேடியலைத் தயாரித்த தொழில் நுட்பம்**

விக்ராந்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி இலாகா டிரக் ரேடியல்களைப் பற்றி ஆய்ந்ததின் விளைவு இங்கிலாந்தின் மார்க்கெட்டினை வென்ற மிகமிக வலிமை வாய்ந்த ஒரு டயராகும். இதன் காரணமாக இங்கிலாந்துக்கு டிரக் ரேடியல்களை ஏற்றுமதி செய்த முதல் கம்பெனி விக்ராந்த் எனப் பெயர் பெற்றது.

**விக்ராந்த் — புதிய வண்டியில் பொருத்தப்படும் ஒரிஜினல் பாகம்**

விக்ராந்தின் செயல்திறன் நாடு முழுதும் போக்குவரத்துத் துறையில் நம்பகரமானதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. முன்னணி நிறுவனங்களான டெல்கோ, மற்றும் அசோக் லேலண்டு வண்டிகளில் இது ஒரிஜினல் பாகமாக பொருத்தப்படுகிறது. பெரும்பான்மையான மாநில போக்குவரத்து நிர்வாகங்களின் பஸ்களில் பல்லாயிரக்கணக்கான மக்களை நாடு முழுவதும் ஏற்றிச் செல்கிறது.

எனவே, செயல்திறன் நிரூபிக்கப்பட்டு, நவீன தொழில் நுட்பத்தைப் பின்பற்றி அமைக்கப்பட்டு, எதிர்பாராத சவால்களை நேரிட வரும்போது நீங்கள் நம்பக் கூடியதாக இருக்க வேண்டிய டயர் உங்களுக்கு வேண்டும் எனின், எந்த டயரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை இப்போது அறிவீர்கள்!

**VIKRANT**

நம்பகமான டயர்
பொறுப்பான கம்பெனி

# அண்ணா மாவட்டம் பெயர் மாற்றம் அவசியமா?

* ''அவுட்' லிஸ்ட்'...''



* முதல்வருக்கு யோசனைகள்







* அனுமதி மறுப்பு

* எஸ். சுந்தர், பாளையங்கோட்டை.

**? வேஷ்டியில் வந்ததற்காக முன்னாள் நீதிபதி கிருஷ்ணய்யருக்கு மெட்ராஸ் கிரிக்கெட் கிளப்பில் அனுமதி மறுக்கப்பட்ட அநாகரிகச் செயல் பற்றி...?**

! அதுதான் வருத்தம் தெரிவித்து, அந்த பிரிட்டிஷ் காலத்திய அபத்தமான விதிமுறையையும் மாற்றி விட்டதாக அறிவித்திருக்கிறார்களே... மன்னிப்போம், மறப்போம்!

* ஜி. குசேலன், சங்கராபுரம்.

**? சட்டமன்றத்தில் நடந்த அடிதடி கலாட்டாக்களுக்கு ஆளும் கட்சி நாங்கள் பொறுப்பல்ல என்றும் எதிர்க் கட்சிகள் நாங்கள் பொறுப்பல்ல என்றும் கூறுகின்றன. ஆக இவர்களுக்கு வோட்டுப் போட்ட மக்கள் குற்றவாளிகள் எனக் கூறுகிறார்களோ?**

! அப்படியல்ல. மக்கள் தங்கள் ஜனநாயகக் கடமையைச் சரிவர நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆளும் கட்சிக்கும் எதிர்க் கட்சிக்கும் இடையில் உள்ள குரோதம் அடங்காததுதான் அடிப்படைக் காரணம். சினம் அடங்கிச் சீரிய சிந்தனை செயல்படும்போது தான் ஜனநாயகம் செவ்வனே நடக்கும். அண்ணல் காந்தி தினந்தோறும் நடந்த தமது பிரார்த்தனைக் கூட்டத்தில் நான் தவறாமல் கூறிய கீதை வரிகள் இவை: ''கோபத்திலிருந்து மோஹம் உண்டாகிறது. மோஹத்திலிருந்து மறதி உண்டாகிறது. மறதியிலிருந்து புத்தி நாசமாகிறது. புத்தி நாசத்தால் எல்லாம் அழிகிறது!'

* எஸ். ராமநாதன், திருநெல்வேலி.

**? ஜெயலலிதா விஷயம் பேசப்படும் போது சட்டசபையில் கருணாநிதி சம்பந்தமே இல்லாமல் ''நான் சூத்திரன்'' என்ற வாதத்தை முன் வைத்தது பற்றி...?**

! அவருடைய இன்றைய தகுதிக்குத் தேவையற்ற வார்த்தைதான். அதீத உணர்ச்சி வசப்படும் போது நாம் என்ன பேசுகிறோம் என்பது நமக்கே சில சமயம் தெரிவதில்லை. அப்புறம் வருந்துகிறோம், அல்லவா? அப்படிப்பட்ட ஒரு கணம், கனிந்துள்ள கருணாநிதிக்கும் ஏற்படக் கூடும் என்பதை நிரூபிக்கும் நிகழ்ச்சி.

* எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

**? 'தி.மு.க. ஆட்சியைக் கவிழ்ப்பது எங்கள் நோக்கமல்ல' என்று அ.தி.மு.க. தலைவர்கள் கூறுகிறார்களே, உண்மையா?**

! சுத்தப்பொய். இல்லையெனில், 'தி. மு. க. ஆட்சியிலிருந்து விலகும் வரை போராட்டம் நடக்கும்' என்றும், 'தி. மு. க. ஆட்சியிலிருந்து நீக்கப்படும் வரை சட்டமன்றத்துக்குள் நுழைய மாட்டேன்' என்றும் எதிர்க் கட்சித் தலைவி சபதம் செய்ய வேண்டிய அவசியமென்ன? பல சினிமா பாணி சாகசங்களை அரசியலுக்குள் நுழைக்கின்ற ஜெயலலிதாவின் 'டபுள் ரோல்' இது, என்றுதான் கருத வேண்டும்.

* வி. ரெங்கநாதன், ஈரோடு.

**? அரசியல் விமர்சனப் பத்திரிகைகள்**

நிறைய வந்திருந்தும் கூட அரசியலின் தரம் தாழ்ந்து போய்க் கொண்டிருக்கிறதே?

! அரசியலின் தரம் தாழ்ந்து போனதால் தான் ஐயா, அரசியல் விமர்சனப் பத்திரிகைகள் நிறையத் தோன்றி மக்களின் ஆதரவையும் பெறுகின்றன!

* மு. நடராசன், போடி.

**? அண்ணா மாவட்டம் பெயர் மாற்றம் அவசியமா? வீண் குழப்பம் விளையாதா?**

! நடைமுறைக் குழப்பம் சில காலம் இருக்கும். பிறகு தெளிவாகிவிடும். ஆனால் அடிப்படையில் வீதிகளுக்கும், மாவட்டங்களுக்கும் கட்டடங்களுக்கும், பெயர் மாற்றங்கள் செய்து கொண்டிருப்பது ஒரு சாதனையாகாது. புதிய குடியிருப்புக்கள், அவற்றில் புதிய வீதிகள், புதிய கட்டடங்கள் எழும் போது நமக்கு விருப்பப்பட்டவர்களின் பெயர்களைச் சூட்டலாம். பெயர் மாற்றங்கள் என்பது ஏற்கெனவே உள்ள பெயர்களுடன் தொடர்பு கொண்ட சரித்திரத்தின் முக்கியத்துவத்தைக் குறைப்பதாகும். சரித்திரத்தைச் சீண்டுவது சரியல்ல என்பது சரித்திரக் கதைகள் எழுதுகிறவருக்குத் தெரிய வேண்டாமா?

* டி. சீனிவாசன், சென்னை.

**? மறைந்த சோஷலிச இயக்கத் தலைவர் ஜோஷிக்கு உமது அஞ்சலி உரைகள்?**

! எந்தச் சூழ்நிலையிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கச் சொன்ன காந்தியவாதி. தார்வார், பெல்காம், நிப்பானி பகுதிகளை மகாராஷ்டிரத்துடன் இணைக்க முயன்றாலும் அதை வன்முறையில் சாதிக்க விரும்பாத சோஷலிஸ்வாதி. அரசுப் பதவியில் இல்லாத போதிலும் அரசு மரியாதையுடன் அவர் அடக்கம் செய்யப்பட்டதும் ஆயிரக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்தியதும் அவருக்குப் பெருமை.

* வித்யா, தர்மபுரி.

**? வெஸ்ட் இண்டீஸ் அணிக்கெதிரே நம் இந்திய அணி அட்லீஸ்ட் ஒரு டெஸ்டிலாவது வெற்றி பெறுமா?**

! மார்ஷலும், பி[illegible]ம், விவியன் ரிச்சர்ட்ஸும் அவர்கள் பக்கம் இருக்கும் போது அட்லீஸ்ட் அதிர்ஷ்ட தேவதையாவது நம் பக்கம் இருந்தால்தான் உண்டு!

* எஸ். நாதன்பாபு, திருவிடைமருதூர்.*

**? 'முதல்வருக்கு யோசனைகள்' என்று வாசகரிடம் சேகரித்தவை என்னவாயின?**

! அச்சிலே வந்தவற்றை எடுத்துக் கொண்டு முதல்வரிடம் செல்கிறோம். கோட்டையில் அவரைச் சந்திக்க உடனே அனுமதி கிடைக்கிறது. வாசகர்களின் யோசனைகளையும், அவற்றைப் பரிசீலித்தபின் தமது கருத்தை முதல்வர் கூற வேண்டும் என்ற கோரிக்கையையும் சமர்ப்பிக்கிறோம். பக்கங்களைப் புரட்டுகிறார். சிலவற்றைப் படிக்கிறார். வேறு எந்த அபிப்பிராய வாக்கெடுப்புக்கும் முன்னதாக 1988 ஜூலை மாதத்திலேயே, 'அடுத்த முதல்வர் கலைஞர்தான்' என்று கல்கி வாசகர்கள் தீர்ப்பளித்ததை நினைவூட்டுகிறோம். புன்னகை புரிகிறார். ''ஜாதி, மதம் சம்பந்தப்பட்ட எந்த ஊர்வலத்துக்கும் அனுமதி வழங்கக் கூடாது'' என்ற யோசனையை உரக்கப் படிக்கிறார். ''நல்ல யோசனைதான். ஆனால் எப்படி அமல்படுத்த முடியும்? அங்கேதான் சிக்கல்'' என்கிறார். தொடர்ந்து, ''சாவகாசமாகப் படித்துவிட்டு என் கருத்தை எழுதித் தருகிறேன்'' என்கிறார். நம்பிக்கையோடு திரும்புகிறோம். அதன்பின் பட்ஜெட்... சட்டசபை அமளி துமளி என்று பல... இருந்தாலும் நம்பிக்கை இன்னும் இருக்கிறது... பார்ப்போம்...

* ஜி. என். சரவணன், பழனி.

**? நீங்கள் சந்திக்க விரும்பும் மனிதர் யார்?**

! 'உங்களுடைய கருத்து எனக்குப் பிடிக்காமல் இருக்கலாம்; ஆனால் உங்கள் கருத்தை நீங்கள் வெளியிட உங்களுக்கு உள்ள உரிமையை நான் என் உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றுவேன்' என்று மெய்யான ஜனநாயக உணர்வோடு கூறினான் ஓர் அறிஞன். நமது சாசனத்தில் உறுதி செய்யப்பட்டுள்ள இந்தக் கருத்துச் சுதந்திரத்துக்கு ஆபத்து வரும் போதெல்லாம் நீதிமன்றங்கள்தான் தலையிட்டு நமக்குப் பேச்சுரிமையை உறுதி செய்து தந்துள்ளன. அந்த முறையில் தற்போது 'ஒரே ஒரு கிராமத்திலே' திரைப்படத்துக்கு உயர் நீதிமன்றம் விதித்த தடையை உச்ச நீதிமன்றம் நீக்கி, அபிப்பிராயச் சுதந்திரத்தை உறுதியாக நிலைநாட்டியுள்ளது. பெஞ்சுத் தீர்ப்பை வழங்கிய உச்சநீதிமன்ற நீதிபதி ஜகந்நாத ஷெட்டியை நேரில் சந்தித்து வாழ்த்திக் கைகுலுக்க முடியாது போனாலும் மானசீகமாக அதைச் செய்கிறேன்.

* ரூ. 20 பரிசு பெறுபவர்:

எஸ். நாதன் பாபு,
66, வடக்கு வீதி,
திருவிடைமருதூர் — 612 104.



தொழிலகங்கள் பெருக, வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்க, தமிழகம் முன்னேற, அடிப்படைத் தேவை மின் உற்பத்தி. மிக முக்கியமான பொறுப்பில் இருக்கும் மின்துறை அமைச்சர் நேருவுடன் ஒரு பேட்டி...

# மின்வெட்டு நீங்குமா? முன்னேற்றம் நிகழுமா?

**கேள்வி:** தமிழ் நாட்டில் முழு மின் உற்பத்தித் திறனும் பயன்படுத்தப்படுகிறதா? இல்லையெனில் அதற்குண்டான இடையூறுகள் என்னென்ன?

பதில்: தமிழ்நாடு மின் வாரியத்தின் தற்போதைய நிறுவனத்திறன் 4785 மெகா வாட். ஆனால் தற்பொழுது தமிழ்நாட்டிற்கு எல்லா வகையிலும்கிடைக்கும்மின்சாரத்தின் அளவு சுமார் 2400 மெகாவாட்டுகள்தான். நிறுவனத் திறனில் 1914 மெகா வாட் புனல் மின் நிலையங்களிலிருந்து கிடைக்க வேண்டும். புனல் மின் நிலையங்களிலிருந்து 750 மெகா வாட் அளவுக்கான மின் உற்பத்தித் திறன் பாசனத்துடன் இணைக்கப்பட்டுள்ளதால் அவைகளிலிருந்து பாசனம் இல்லாத நேரங்களில் மின் உற்பத்தி செய்ய இயலாது. மற்ற புனல் மின் நிலையங்களிலிருந்து கிடைக்கும் மின் உற்பத்தியின் அளவு பருவ மழையின் நீர் வளத்தைப் பொறுத்து அமைகிறது. இவ்வாண்டு வட கிழக்குப் பருவ மழை பொய்த்ததனால் புனல் மின் நிலையங்களில் 400 மெகா வாட் அளவே மின் உற்பத்தி செய்ய முடிகிறது.

காற்றாலை மற்றும் அனல் மின் நிலையத்தின் நிறுவுத் திறன் 1503 மெகா வாட். இதில் பராமரிப்புப் பணிகளுக்காகவோ அல்லது திடீரெனப் பழுதாவதாலோ 35

சதம் அளவு மின் உற்பத்தி செய்ய இயல வில்லை. தூத்துக்குடி மற்றும் மேட்டூர் அனல் மின்நிலையங்கள் முழு அளவில் செயல்பட்டு வருகின்றன. எண்ணூர் அனல் மின் நிலை நிலையத்தைப் பொறுத்தவரை தற்சமயம் மூன்று பிரிவுகள் மட்டுமே மின் உற்பத்தி செய்து வருகின்றன. மற்ற இரண்டு பிரிவு களும் அக்டோபர் 1988-ல் ஏற்பட்ட திடீர் தீ விபத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. இவை மின் உற்பத்தியை மே—ஜூலை மாதங் களிலிருந்து துவக்குமெனஎதிர்பார்க்கிறோம். நெய்வேலி முதல் அனல்மின் நிலையம் நன்கு செயல்பட்டு வருகிறது. இரண்டாவது அனல் மின் நிலையத்தில் அடிக்கடி இடர்பாடுகள் ஏற்படுவதால் இந் நிலையத்திலிருந்து நிலை யாக முழு அளவு மின்சாரம் கிடைப்ப தில்லை.

மைய மின் நிலையத்திலிருந்து தமிழகத் தின் பங்காகக் கிடைக்க வேண்டியது 1368 மெகாவாட். ஆனால் கல்பாக்கத்தில் இரண்டு பிரிவுகளும் பழுது அடைந்திருப்ப தால் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. கூடிய விரைவில் மின் உற்பத்தியைத் துவக் கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


கேள்வி: இராமகுண்டம் போன்ற மைய மின் நிலையங்களிலிருந்து மின்சாரம் பெறு வதற்கு ஏதேனும் சிரமங்கள் உள்ளனவா?

பதில்: ஆம்; சில சிரமங்கள் உள்ளன. முக்கியமாகத் திருப்பெரும்புதூரில் அமைந் துள்ள துணை மின் நிலையத்தில் உள்ள 400/230 கிலோ வோல்ட் மின் மாற்றி (டிரான்ஸ்பார்மர்) 20.1.89 முதல் பழுத டைந்துள்ளது. இதனைப் பழுதுபார்க்கும் பணி தீவிரமாக நடந்து கொண்டிருக்கிறது. ஏப்ரல் மாத இறுதிக்குள் சரி செய்யப்படும்.

கேள்வி: மின் இழப்பினைப் பற்றிய கருத்து என்ன? இந்த மின் இழப்பு (**transmission loss**) தமிழ்நாடு மி ன் சா ர வாரி யத்தால் எவ்வாறு தடுக்க அல்லது குறைக் கப்படுகிறது?

பதில்: மின் இழப்பு இரு வகைகளில் ஏற்படுகிறது. ஒன்று தொழில் நுட்ப ரீதி யினாலும் மற்றது மின் திருட்டு போன்ற வற்றாலும் ஏற்படுகிறது. தொழில் நுட்ப ரீதி யினால் ஏற்படும் மின் இழப்பு என்பது மின் சாரம் அனுப்புதலும் மற்றும் விநியோகித் தல் ஆகியவைகளில் ஏற்படும் மின் இழப்பு ஆகும். தமிழ் நாடு மின்சார வாரியத்தைப் பொறுத்தமட்டில் இது உற்பத்தி செய்யும் மின்சாரத்தில் சுமார் 18.6 சதவீதம் அளவு உள்ளது. இது அனைத்திந்தியச் சராசரியாக 21 சதவீதத்தைக் காட்டிலும் குறைவான தாகும். இதனை மேலும் குறைப்பதற்காக மின்சார வாரியம் பல அபிவிருத்தித் திட்டங் களை எடுத்து வருகிறது.

திருட்டின் மூலம் ஏற்படும் மின் இழப் பினைக் குறைப்பதற்காகத் தமிழ் நாடு மின்சார வாரியம் காவல் துறையினரின் உதவியுடன் சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது. மின் சக்தி களவு, முறைகேடுகள்




"ஆர்வமற்றவருக்கும் ஆர்வத்தைத் தூண்டியது..."

- "கல்கி தொழில் மலர்" தொழில் துறையில் ஆர்வமற்றவரும் படிக்கத்தூண்டும் வண்ணம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு துறை பற்றியும் வண்ணப்படங்களின் தலைப்புடன் சுருக்கமான கட்டுரைகள் சுவாரசியமாக இருந்தன. ரோஜா பயிரிடுவது, வனவளப் பாதுகாப்பு கோழித் தீவனத்துறை என்று இவ்வளவு விஷயங் களைக் கொடுத்திருப்பது, தொழில் துறை மிக விரிவடைந்திருப்பதைப் புரியவைக்கிறது. மனம் நிறைந்த பாராட்டுக்கள்.

சென்னை 13, எஸ். விஸ்வநாதன்.

- தொழில் மலருக்கு ஏற்ற வகையில் எட்டுப் பகுதிகளிலும் அருமையான எட்டுச்சிறுகதை இணைத்திருந்தது. தொழில் மலரின் சிறப்பைப் பட்டை தீட்டிய வைரமாக்கியது. பாராட்டிப் பாதுகாக்க வேண்டிய மலர்.

பெங்களூர், - 53, கவிஞர் 'தாரகை'.

- கல்கி விவசாயத் தொழில் மலரில், விவசாயம் பற்றிய முழுமையான செய்திகளும், ஆடு, மாடு, கோழி வளர்த்தல் போன்றவைகளும், உரத் தயாரிப்பிலிருந்து சாக்லெட் தயாரிப்பு வரையி லான கட்டுரைகளும் சிறப்பாக அமைந்திருந்தன.

சாத்தூர், எம். செல்லையா.

- கட்டுரைகள் மட்டுமா? புகைப்படங்களும் "அற்புதம் அற்புதம்" என்று மனத்தைத் துள்ள வைத்தன. அட்டையையும் சேர்த்து ஒன்பது வண்ணப் பக்கங்களும் நவரத்தினங்களாக ஜொலிக்கின்றன. தொழில் மலரையும் இவ்வளவு சுவாரஸ்யமாக வெளியிட முடியுமா என்று நான் நினைத்துக்கொண்டிருக்கிறேன்.

மங்கை நல்லூர், ஆர். செல்வராணி.

- விஷயங்கள் நிறைந்த புள்ளி விவரங்களுடன் கூடிய பயனுள்ள கட்டுரைகள், உயிரோட்டமான நல்ல சிறுகதைகள், நேரில் பார்ப்பதைப்போன்ற புகைப்படங்கள், கார்ட்டூனுடன் கூடிய அறிஞர் களைப் பற்றிய குறிப்புகள் என்று எல்லாமே சிறப்பாக இருக்கின்றன. பகுதி, பகுதியாகப் பிரிக்கப் பட்டு, வண்ண வண்ண இணைப்புடன் மிக அழகாக அமைக்கப்பட்டிருக்கும் இந்த மலர், எல்லா வகையிலும் என்னை வியப்பில் ஆழ்த்து கிறது. பொருளாதார விஷயங்களைப் போரடிக் காமல் மட்டுமல்ல; போற்றிப் புகழும் படியும் தந்திருப்பது பாராட்ட வேண்டிய ஒன்றாகும்.

முடிகண்ட நல்லூர், க. ராஜேந்திரன்.

பற்றிய தகவல் தருவோர்களுக்கென வெகுமதி வழங்கும் திட்டமொன்று மின் வாரியத்தில் நடைமுறையில் உள்ளது. இதன்படி 10 சதவீத வரவுத் தொகை அல்லது ரூபாய் 10,000 இதில் எது குறைவாக உள்ளதோ அந்தத் தொகை மின்சார வாரியத்திற்குக் கிடைக்கும் வருமானத்தைப் பொறுத்துத் தகவல் தருவோருக்கு அளிக்கப்படும்.

கடந்த ஆண்டு மட்டும் 489 மின் திருட்டுக்களும் மற்றும் 13,519 சில்லறைக் குற்றங்களும் கண்டுபிடிக்கப்பட்டு, அதனால் ரூபாய் 11.19 கோடி வருமானம் கிடைக்கும் என்று மின் வாரியம் கணக்கிட்டுள்ளது.

கேள்வி: மின் நிறுவுத் திறனை அதிகரிக்காமல் கிராம மின் திட்டங்களுக்கு அதிக அளவு மின்சாரம் அளித்ததுதான் இன்றைய மின் பற்றாக்குறைக்குக் காரணம் என்பது சரியா?

பதில்: இக் கருத்து சரியல்ல. மொத்த மின் உற்பத்தியில் கிராம மின் விநியோகத்திற்காக பம்பு செட் உட்பட வழங்கப்படும் மின்சாரம் 26 விழுக்காடுகள்தான். மின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதைப் பொறுத்தவரை ஏழாவது திட்டக் காலத்தில் 1416 மெகா வாட் அளவு கூடுதலாக அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அவற்றுள் இன்று வரை 1175 மெகா வாட் நிறுவப்பட்டுப் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மீதமுள்ள 241 மெகா வாட் திட்டமிட்டபடி பயனுக்கு அடுத்த ஆண்டு இறுதிக்குள் கொண்டு வரப்படும். இவை தவிர பணிகள் துவங்கப்பட்டுள்ள பல திட்டங்களும் தொலைநோக்குத் திட்டங்கள் பலவும் உள்ளன. இவ்வை தாமதப்படாமல் இந்த அரசு கவனித்துக் கொள்ளும்.

கேள்வி: தமிழ் நாடு மின்சார வாரியம் மாநிலத்திலுள்ள மிகப் பெரிய பொதுத் துறை நிறுவனமாகும். இதன் நிதி நிலை மிகவும் மோசமடைந்து வருகிறது. தமிழ் நாடு அரசிற்கு மின்சார வாரியம் கொடுக்க வேண்டிய நிலுவை வட்டி மட்டும் சுமார் ரூபாய் 300 கோடியாகும். இதற்கு மின் வாரியத்தை நிர்வகிப்பதிலுள்ள திறமையின்மை காரணமாகுமா?

பதில்: வசூலிக்கப்படாமல் நிலுவையிலுள்ள தொகை மொத்த வருவாயில் இரண்டு சதவீதம் அளவுதான் உள்ளது. இருப்பினும் வருவாயை விட செலவினம் அதிகமாக உள்ளது. இதற்கு முக்கிய காரணம் விவசாயம் மற்றும் வீடுகள் போன்றவற்றிற்கு மிகக் குறைந்த விலையில் மின்சாரம் வழங்கப்படுவதும் மேலும் குடிசைகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதும் ஆகும். இவ்வாறு மின்சாரம் வழங்குவது அரசின் கொள்கையாகும். இதனை ஈடுகட்டுவதற்கு மாநில அரசு மின்சார வாரியத்திற்கு மானியம் வழங்குகிறது. மேலும்



சென்னை அப்பாசாமி ரியல் எஸ்டேட் அதிபரான ஸ்ரீ எஸ். அப்பாசாமி அவர்களின் குமாரன் சிரஞ்சீவி ஸ்ரீனிவாசனுக்கும், தமிழ்நாடு அரசு, விவசாய இலாகா செயலர் ஸ்ரீ எம். ரகுபதி, ஐ. ஏ. எஸ்., அவர்களின் குமாரத்தி சௌபாக்கியவதி சாருபாலாவுக்கும் சென்னையில் சமீபத்தில் விவாஹம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாலையில் நடந்த வரவேற்பிற்கும், காலை முகூர்த்தத்துக்கும் சென்னை நகரப் பிரமுகர்கள் பலரும் வந்திருந்து சிறப்பித்து மணமக்களை வாழ்த்தினர். வாழ்க மணமக்கள்! வாழ்க பல்லாண்டு!

பல மாநிலங்களில் வருடா வருடம் நிலக்கரி விலைக்கேற்ப மின்சாரத்தின் விலையும் உயர்த்தப்படுகிறது. தமிழகத்தில் பத்து வருடங்களாக பெரிய மாற்றம் எதுவும் இல்லை. ஆகக் கூடி மின்வாரியம் சந்திக்கும் சில இடர்பாடுகளுக்கு நிர்வாகத் திறமையின்மையே காரணம் என்று ஒரேயடியாகக் கூறி விட முடியாது. மக்கள் நலனை உத்தேசித்து அரசு வகுக்கும் சில கொள்கைகள் லாப நோக்கில் அமைய முடியாது போவதும் காரணமாகும்.

கேள்வி: விவசாயத்திலும்தொழிலிலும் இந்த ஆண்டு மின் பற்றாக்குறையினால் எந்த அளவு உற்பத்தி பாதிப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது?

பதில்: மின் பற்றாக்குறையினால் உயர் அழுத்த மின்சாரம் பெறும் தொழிற் சாலைகள் 1300 பாதிக்கப்படும். அவற்றுக்குத் தற்சமயம் 40 சதவீதம் அளவு மின் வெட்டு அமலில் உள்ளது. இவை தவிர வேறு எந்த வித தொழிலுக்கும் மின் வெட்டு இல்லை. விவசாயத்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் கிராமப் பகுதிகளுக்கு மின்சாரம் மூன்று பிரிவுகளாகப் பிரித்து வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் விவசாயிகளுக்கு நாளொன்றுக்கு பத்து மணி நேரம் மின்சாரம் கிடைக்கிறது.

கேள்வி: சூரிய ஒளியிலிருந்தும் மற்றும் காற்றிலிருந்தும் அதிக அளவு மின்சாரம் பெறுவதற்கான திட்டங்கள் ஏதேனும் தமிழக அரசு வைத்துள்ளதா?

பதில்: ஓ! இருக்கிறதே! சூரிய ஒளியிலிருந்து மின் உற்பத்தி செய்து சேலம் மாவட்டத்தில் உள்ள பழங்குடி மக்கள் வாழும் இருபது கிராமங்களுக்கும் தென்னாற்காடு மாவட்டத்தில் 29 கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளன. தூத்துக்குடி அருகில் உள்ள முல்லைக்காடு கிராமத்தில் ஒவ்வொன்றும் 55 கி. வாட் திறனுள்ள இருபது காற்றாலைகளும் மற்றும் கயத்தார் அருகே உள்ள தெற்கு இலந்தைக்குளம் கிராமத்தில் ஒவ்வொன்றும் 90 கி. வாட் திறனுள்ள பதினைந்து காற்றாலைகளும் ஏற்கெனவே அமைக்கப்பட்டு மின் உற்பத்தி செய்து வருகின்றன. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள புளியங்குளத்திலும் கோயம்புத்தூர் மாவட்டம் கல்தான் பேட்டையிலும் 90 கி. வாட் திறனுள்ள இரு காற்றாலைகள் அமைக்கப்பட்டு மின் உற்பத்தி நடக்கிறது. பத்து மெகா வாட் திறன் கொண்ட ஒரு பெரிய காற்றாலைத் திட்டம் கயத்தாரிலும் (6 மெ. வா.) முப்பந்தலிலும் (4 மெ.வா.) அமைப்பதற்குண்டான தீவிரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை அடுத்த ஆண்டுக்குள் பயனுக்கு வரும்.

பேட்டி: ப்ரியன்

புகைப்படம்: 'சுபா'





## டி. வி. — வீடியோ பக்கங்கள் :

### மந்திரி கட்டிய கடிகாரம்

●● ஒரு சமயம் என் அத்தையும் அவருடைய ஐந்து வயது மகனும் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார்கள். அன்றிரவு டி.வி.யில் நாடகம் ஒன்றைப் பார்த்துக் கொண்டிருந்தோம். அது ஒரு சரித்திர நாடகம் என்பதால், ராஜா, மந்திரி, புலவர், அரசி... என்று பாத்திரங்கள் அமைந்திருந்தன. திடீரென்று நாடகத்தில் வந்த மந்திரி தம் கையில் கடிகாரம் கட்டியிருந்ததைப் பார்த்த என் அத்தை மகன், "ஏன் அம்மா! அந்தக் காலத்து மந்திரியே கையில் வாட்ச் கட்டியிருக்கிறார். எனக்கு இன்னும் வாங்கித் தரவில்லையே..." என்று சொன்னவுடன் எங்களால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

— ஸ்ரீதேவி, மதுரை — 1.




# அன்னநடை காண அவகாசம் இல்லை!

### அம்மா வேண்டாம்...

●● என் மூன்று வயதுப் பெண் டி.வி.யில் நடனக் காட்சி வந்தால் தானும் ஆட ஆரம்பித்து விடுவாள். சில சமயங்களில் அவள் அப்பாவும் அவளுடன் சேர்ந்து ஆடுவார். ஒருநாள் 'ஒளியும் — ஒலியும்' நிகழ்ச்சியில் ரஜினிகாந்த் ஸ்ரீதேவியுடன் டூயட் பாடிக் கொண்டிருந்தார். என் பெண்ணும் அவர்களைப் போல் ஆட முயன்று கொண்டிருப்பதை நாங்கள் ரசித்துக் கொண்டிருந்தோம். திடீரென்று அவள் அப்பாவிடம் வந்து, "அப்பா என்னைத் தூக்கிச் சுற்றுங்கள்..." என்றாள். அவரோ, "எனக்கு டயர்டாக இருக்கிறது. அம்மாவைத் தூக்கிச் சுற்றச் சொல்" என்றார். அவள் விடவில்லை. "அம்மா வேண்டாம்; நீங்கதான் சுற்றணும். ஆம்பிளைங்க தானே பொம்பிளைங்களைத் தூக்கிச் சுற்றணும். அதோ பாருங்க" என்று டி.வி.யை சுட்டிக் காண்பித்தாள். ரஜினிகாந்த், ஸ்ரீதேவியைத் தூக்கிச் சுற்றிக் கொண்டே பாடிக் கொண்டிருந்தார்!

— ஏ. ஜெகதாம்பாள், சிறுமுகை.

### சுமதியின் சேஷ்டைகள்...

●● என் சகோதரியின் திருமணத்தை வீடியோ எடுத்திருந்தோம். அதைப் போட்டுப் பார்க்கும் பொழுது, எனது அத்தை மகள் சுமதி, பெண்ணுக்குத் தாலி கட்டும் சமயத்தில் நாக்கைத் துருத்தி அழகு காட்டுவதைப் பார்த்து விட்டு நாங்கள் எல்லோரும் சிரித்தோம். பிறகு கல்யாணம் நெடுகிலும் அவள் கண்ணை உருட்டியும் கையை ஆட்டியும், ஏதோ சேஷ்டை செய்து கொண்டேயிருந்தாள். அவள் அவ்வாறு செய்வதைப் பார்த்து எல்லாரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். எனக்கு மட்டும் மனசுக்கு ஒரு மாதிரி ஏதோ தோன்றவே, ஒருநாள் வீட்டில் யாருமில்லாத சமயத்தில் கேசட்டைப் போட்டுத் திருமணத்தைக் கவனிக்காமல் அவளையும், அவள் பார்வை போகிற திசையையுமே உற்றுக் கவனித்துப் பார்த்தேன். எங்கள் தூரத்து உறவுக்காரப் பையன் இரண்டு சந்தர்ப்பங்களில் அவளுக்குப் பதில் சைகை செய்து கொண்டிருந்ததைக் கண்டுபிடித்தேன். உடனே தாமதிக்காமல் என் அத்தைக்கு நாசூக்காக இந்த விவரத்தை எழுதினேன். உடனே அவர்கள் செயலில் இறங்கி, ஒரு வருடமாக அவர்களுக்குள் உள்ள தொடர்பை அறிந்து கொண்டனர். அவனும் நல்ல பையன் என்பதால் மேலும் தாமதிக்காமல் இரு குடும்பமும் கலந்து பேசித் திருமணமும் முடிந்து விட்டது. இந்த விவரம் இப்போது குடும்பத்தினர் அனைவருக்கும் தெரிந்து விட்டதால், யாருக்காவது பொழுது போகா விட்டால், "கீதாவின் கல்யாண காஸெட்டைப் போடு! சுமதியின் சேஷ்டைகளைப் பார்த்துக் கொஞ்ச நேரம் சிரிக்கலாம்..." என்பார்கள்.

— ரமா கோபாலன், சிதம்பரம்.

### டி. வி. க்கு ஒரு யோசனை

●● 'முகராசி' என்னும் சினிமாவை டி. வி. யில் காட்டும் போது, "எங்களுக்குக் கிடைத்துள்ள இப் படத்தின் பிரதி திருப்தியாக இல்லை. எனவே, நேயர்கள் தங்கள் தொலைக் காட்சிப் பெட்டிகளைச் சரி செய்ய முயல வேண்டாம்" என்று அறிவிப்புச் செய்தார்கள். அது போலவே தினமும் கீழ்க்கண்ட அறிவிப்புகளை அவர்கள் செய்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

1. "இன்று ஒளிபரப்பாகப் போகும் நாட

கம் எங்களுக்கே சகிக்கவில்லை. எனவே, நேயர்கள் 'போகப் போக விறுவிறுப்பாக இருக்கும்' என்று எண்ணிக் கடைசி வரையிலும் பார்த்து ஏமாற வேண்டாம்.''

2. "இன்றைய 'ஒளியும்—ஒலியும்' நிகழ்ச்சியில் இடம்பெறும் பாடல்கள் எல்லாம் கொள்ளுத் தாத்தா காலத்தவை. எனவே, 'இரண்டொரு புதுப் பாடல்களாவது வரலாம்' என்று நேயர்கள் எதிர்பார்க்க வேண்டாம்.''

—மு. கண்ணுசாமி, அப்பநாயக்கன்பட்டி.





## அன்னநடை காணவா அத்தனை நேரம்?

●● கடந்த 18.3.89 இரவு டீ.வி.யில் மறுநாள் காலை நம் விமானப் படையின் மகத்தான சாதனைகளைப் பற்றிய நிகழ்ச்சிகளைக் காண்பிக்கப் போவதாக அறிவித்தார்கள். எனவே ஞாயிறு காலை ஆர்வத்தோடு டீ.வி. முன் அமர்ந்தோம்.

நிகழ்ச்சி ஆரம்பித்ததும் முதலில், பிரதமர் ராஜீவ் காந்தி சோனியாவுடன் ஹெலிகாப்டரிலிருந்து இறங்கி, ராஜ நடை போட்டு நடந்து வந்த ஒவ்வொரு அடியையும் காட்டி, பிறகு ஒவ்வொருவராக எல்லோருடனும் கைகுலுக்கி, கைகூப்பி, இருக்கையில் அமர்ந்ததைக் காண்பித்தார்கள். அதைத் தொடர்ந்து உதவி ஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மா ஹெலிகாப்டரிலிருந்து இறங்கி அதே போல் ராஜ நடை போட்டு அடி மேல் அடி வைத்து இருக்கையில் வந்து அமர்ந்த வைபவம். மூன்றாவதாக பாரத ஜனாதிபதி சதிபதியாக ஹெலிகாப்டரிலிருந்து இறங்கி, அதே ராஜ நடை; அதே கை குலுக்கல்; இருக்கையில் அமர்தல். இப்படியாக ஒரு மணி நேரத்திற்கு மேலாக அவர்கள் ஒவ்வொருவராக அன்ன நடை போட்டு நடந்து வந்ததையே காட்டிக் கழுத்தை அறுத்தார்கள். இடையில் பல முறை சோனியா காந்தியைக் குளோசப்பில் காண்பித்தார்கள். 'விமானப் படையின் சாகசங்களா, வேண்டவே வேண்டாம்!' என்று தோன்றி விட்டது. தலைவர்களின் நடையழகுகளைத் தொடர்ந்து ஒரு மணி நேரம் பார்க்க எங்களுக்குப் பொழுது இல்லை என்று டெல்லி டீ.வி. நிலையத்தாருக்குக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

— ராமமூர்த்தி, செகந்திராபாத்.




## என் மகள் கேட்ட கேள்வி...

●● அந்தக் காலத்தில், (1956—ல்) என் தாத்தா முதன் முதலாக ஒரு ரேடியோ. வாங்கி வந்ததும் ஆறு வயதான நான் மகிழ்ச்சி தாங்காமல் ஒரு வாரம் குஷியாக இருந்தது இன்னும் என் நினைவில் பசுமையாக இருக்கிறது. அது போல் என் ஆறு வயது மகளும் சந்தோஷப்படுவாள் என்று நினைத்துக் கஷ்டப்பட்டு பாங்க் லோன் போட்டுக் கலர் டீ.வி. வாங்கி வீட்டுக்கு எடுத்து வந்தேன். என் மகளுக்கு அது ஒரு திடீர்ப் பரிசு என்பதால் அவள் எப்படி சந்தோஷப்படப் போகிறாள் என்ற கற்பனையோடு டீ.வி.யை உள்ளே கொண்டு போனேன். அவள் டீ.வி.யைப் பார்த்து விட்டு வெளியே ஓடினாள். பிறகு ஏமாற்றத்துடன் திரும்பி உள்ளே வந்து, "வெறும் கலர் டீ.வி.தானா? வி. ஸி. ஆர் வாங்கல்லியா?" என்று கேட்டதும் எனக்கு அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை. வசதிகள் பெருக பெருகப் 'போதும்' என்ற மனமே யாருக்கும் ஏற்பட மாட்டேனென்கிறது!

— ஆரார். தமன், சென்னை — 24.

## பாதுகாப்பு வளையம்

●● என் நண்பரின் கடையில் நான் அவரோடு பேசிக் கொண்டு இருந்த பொழுது ஒரு பெண்மணி கோல்கேட் பேஸ்ட் வாங்கினார். பின், இலவசப் பரிசாக பாதுகாப்பு வளையத்தைத் தருமாறு கேட்டார். எங்களுக்கு ஒரே சிரிப்பு. ''அப்படி ஒன்றும் கொடுக்குமாறு போடப்படவில்லை' என்று பேஸ்ட் பாக்கெட்டைக் காட்டினோம். அதை அவர் நம்பாமல், ''டீ.வி.யில் பாதுகாப்பு வளையத்தைப் பெறுமாறு விளம்பரத்தில் வருவது பொய்யா?'' என்று கேட்டார். வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு, விளம்பரத்தின் அர்த்தத்தைக் கஷ்டப்பட்டு விளக்கினோம்!

— வே. சாம்பு, திருச்சி — 21.

# திக்கற்ற முதியோர்களுக்கு ரூ. 1/- நன்கொடை கொடுத்து உதவ வாருங்கள்.

சிவானந்த ஆசிரமம் சுமார் 400 ஆதரவற்ற குழந்தைகளுக்கும், முதியோர்களுக்கும் தொண்டாற்றி வருவதை தாங்கள் அறிந்ததே. இப்பத்திரிக்கை படிக்கும் வாசகர்களாகிய தங்களுக்கு திக்கற்ற முதியோர்கள் சார்பாக ஓர் வேண்டுகோள் சமர்ப்பிக்கிறோம்.

குழந்தைகள் இல்லாத முதியோர்கள், குழந்தைகள் இருந்தும் நிராகரிக்கப்பட்ட முதியோர்கள், குழந்தைகள் இழப்பினால் அனாதைகளாக விடப்பட்ட முதியோர்கள் பலரும் தள்ளாத வயதில் கையில் பொருள் இல்லாமல், இருப்பிடம் இல்லாமல் அடைக்கலம் தேடி எமது ஆசிரமத்தில் சரணடைகிறார்கள். இவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிறது. இவர்களுக்கு என்று பிரத்தியேகமாக ஒரு முதியோர் இல்லம் கட்ட சுமார் 10 லட்சம் ரூபாய் தொகையில் 100 பேர்கள் கொண்ட அமைப்பினை ஏற்படுத்தி அவர்களுக்கு வாழ்வும், இலவச உணவு, உடை இருப்பிடம் தர எண்ணியுள்ளோம். இத்திட்டத்தில் பத்திரிக்கை படிக்கும் வாசகர்களாகிய தாங்கள் ரூ. 1/- நன்கொடை கொடுத்தால் எங்களது கனவு நினைவாகும் என்பது திண்ணம்.

''சிறு துளி பெருவெள்ளம்'' என்ற அடிப்படையில் பலரின் ஒத்துழைப்பும், காணிக்கையும் மையமாகக் கொண்டு எண்ணற்ற ஒரு ரூபாய்களை வைத்துக் கொண்டு பல திக்கற்ற முதியோர்களின் வாழ்க்கை ஒளிமயமாக்க எண்ணியுள்ளோம். இந்த நன்கொடைக்கு வருமான வரி விலக்கு உண்டு. தாங்கள் ''சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்'' என்ற பெயரில் காசோலையாகவோ, மணியார்டர் மூலமாகவோ அனுப்பி வைத்தால் பேருதவியாக இருக்கும். அனுப்ப வேண்டிய முகவரி:

நிர்வாகி,

**சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்,**

நெ. 20, கம்பர் தெரு, கிழக்கு தாம்பரம், சென்னை 600 059.



பாராட்டு விழாவுக்குப் பிறகு லால்குடி கச்சேரி....

# மஹாராஜபுரம் "சின்னக் கோல்டு!"


**பல** ஆண்டுகளுக்கு முன் ஆலத்தூர் சகோதரர்கள் ஒரு கஷ்டமான பல்லவியைச் சிரமப்பட்டுச் சாதகம் பண்ணி, அகாடமியில் அரங்கேற்றுவதாக இருந்தார்கள். பக்க வாத்தியம் வாசிக்கவிருந்த லால்குடி வெளியூரிலிருந்து நேராகக் கச்சேரிக்கு வந்து சேர்ந்து விடுவதாக ஏற்பாடு. 'அவருக்கு முன்கூட்டியே சொல்லவில்லையே, பல்லவியைச் சேர்ந்து சாதகம் பண்ணவில்லையே' என்று ஆலத்தூரார் இருவரும் கவலைப்பட, பாலக்காடு மணி அய்யர் சொன்னார்: ''கவலைப்படாதீர்கள், சுவாமி! அது பிரும்ம லயம்!'' 'அது' என்று அவர் குறிப்பிட்டது லால்குடியிடம் குடியிருந்த வித்வத்தை. அதன்படியே லால்குடி அன்று பல்லவிக்குப் பக்கபலமாக விளங்கினார்.

இந்த நிகழ்ச்சியைக் கூறி லால்குடியின் சிறப்பைப் பாராட்டினார் எம்.எல்.வி. அதே போல, பூர்ண சந்திரிகா ராகக் கீர்த்தனை ஒன்றுக்கு ஓர் இசை மேதை தாம் அமைத்திருந்த சிட்டை சுவரத்தைப் பாடிக் காட்ட, அதனை மறுகணமே மறு பிரதி எடுத்தது போல் லால்குடி திரும்பப் பாடியதை நினைவு கூர்ந்து சிலாகித்தார் டி. எம். தியாக ராஜன்.

'அது சரி, லால்குடி ஜெயராமனின் சிறப்பு எல்லோரும் அறிந்த ஒன்றுதானே, அவரைப் பாராட்டிப் பேச இப்போது அவசியம் என்ன நேர்ந்தது?' என்றால், மகாராஜபுரம் விசுவநாத அய்யர் டிரஸ்ட் நிறுவி நடத்தி வரும் சந்தானத்தைத்தான் கேட்க வேண்டும்! இந்த ஆண்டு லால்குடியைப் பாராட்டுவது, தங்க மெடல் மாட்டிப்



லால்குடிக்கு இந்தியன் வங்கி கோபாலகிருஷ்ணன் தங்கமெடல் அணிவிக்க போக...




— அரகண்டநல்லூர் சாதிக்பாஷா.

பெருமைப்படுத்துவது என்று அவர் தீர்மானித்த பிறகு யார் குறுக்கே நிற்க முடியும்? லால்குடி ஏற்கெனவே சுமக்க முடியாமல் சுமந்து கொண்டிருக்கும் விருதுகள், பட்டங்கள் ஆகியவற்றுடன் மேலும் ஒன்று என்றாலும், பாராட்டைப் பெற்றுக் கொண்ட பிறகு அவர் அளித்த பதிலுரையைக் கேட்ட போது, 'நல்ல கருத்துக்களைக் கொண்ட இந்த அழகான பேச்சுக்காக அவரை மறுபடியும் ஒருமுறை பாராட்டி கௌரவிக்கலாமே' என்றுதான் தோன்றியது!

அப்படி என்ன சொன்னார் லால்குடி என்றால்:

1. "இந்தப் பாராட்டெல்லாம் என் குருநாதரான என் தந்தையையே சேரும். அந்த நாளில் லால்குடி அமைதியின் உறைவிடமாக விளங்கியது. எங்கு பார்த்தாலும் பசுமை. கோயில் உற்சவங்களின் போது வாசிக்கப் பிரபல நாதசுவர வித்வான்கள் வருவார்கள். அவர்கள் இசையைக் கேட்டுக் கேட்டு இசைபட வாழ்ந்து வளர்ந்தவர்கள் நாங்கள். காலை நாலு மணிக்கு என்னை அப்பா எழுப்பி விட்டு விடுவார். சாதகம் முடிந்து வயலினைக் கீழே வைக்கும் போது மணி ஏழரை ஆகிவிடும். அப்படி விச்ராந்தியான சூழ்நிலையில் மணிக்கணக்கில் சாதகம் பண்ணின காலம் அது. இப்போது அவசர யுகம். சூழ்நிலையின் பரபரப்பு இசையிலும் புகுந்து கொண்டு விட்டது. சாதகம், கச்சேரி எல்லாவற்றிலும் ஒரே வேகம்தான்; பரபரப்புத்தான்!"

2. "சங்கீதம் என்பது இதர சில கலைகளைப் போல இருந்து, பார்த்து ரசிக்கக் கூடிய விஷயமல்ல. காற்றிலே தோன்றி காற்றிலே மறைந்து விடுகிறது. அதனால் கச்சேரி செய்ய மட்டுமின்றி அதனை ரசிக்கவும் ஓரளவு பயிற்சி தேவை."

3. "இந்தப் பயிற்சியைப் பெற முயற்சி எடுக்காதவர்கள் 'ஸவுண்ட் புரூப்' 'ஷாக் புரூப்' என்பது போல 'மியூஸிக் புரூப்' ஆகி விடுகிறார்கள்!"

4. "அந்த நாட்களில் மன்னர்கள் சிறந்த ரசிகர்களாக விளங்கி, இசை விற்பன்னர்களைப் போஷித்தார்கள். இன்று, ரசிகப் பெரு மக்களைத்தான் வித்வான்கள் நம்பியிருக்கிறோம். ஒரு வித்வான் எப்படி ஓரிரு சிஷ்யரை உருவாக்குகிறாரோ, அப்படியே ஒவ்வொரு ரசிகரும் தம் குடும்பத்தில் ஓரிரு நல்ல ரசிகர்களை உருவாக்க வேண்டும். ரசிகர்கள் இல்லையென்றால் நாங்கள் இல்லை."

5. "'மறு பிறவி எடுத்தால் யாராகப் பிறக்க விரும்புவாய்?' என்று என்னைக் கேட்டால், 'தமிழ் நாட்டில் வயலின் வித்வானாகத்தான் பிறக்க விரும்புவேன்' என்பேன். ஏனென்றால், வயலினில்தான் தனிக் கச்சேரி செய்யவும் முடியும்; பிறர் பாட்டுக்கு வாசிக்கவும் முடியும். மற்ற வாத்தியக் கச்சேரிகளுக்கும் பக்க வாத்தியமாக வயலினை இசைக்க முடியும். நமது ஆற்றலை தனிக் கச்சேரியில் காட்டி, பக்க வாத்தியம் வாசிக்கும் போது, பிரதான வித்வானின் ஆற்றலால் நாம் வளர்வது மட்டுமின்றி, வித்வானின் சவால்களை ஏற்கவும் அவரது கச்சேரியை சோபிக்கச் செய்யவும் முடியும். இதைப் புரிந்து கொள்ளாத போதுதான் சிலருக்கு, 'என்னடா, ஓரத்தில் உட்கார வேண்டியவன் நடுவில் வந்து அமர்கிறானே?' என்று யோசனை வந்து விடுகிறது!"

மகாராஜபுரம் விசுவநாத அய்யர் கச்சேரிக்கு வாசிக்க ஒரு சமயம் போயிருந்தார் லால்குடி. அப்போது விசுவநாத அய்யர், "ஜெயராமா, எனக்கு அப்புறமா வாசிக்கலாம்; முதல்ல நம்ம சின்னக் கோண்டுவுக்கு வாசி" என்று அன்புக் கட்டளையிட்டார். 'சின்னக் கோண்டுவா? அது யார்?' என்று லால்குடி வியப்புடன் யோசித்தவாறே மேடையேறினார். மத்தியில் அமர்ந்து பாட ஆரம்பித்த சின்னக் கோண்டு வேறு யாருமல்ல, விசுவநாத அய்யரின் மகன் சந்தானமேதான்! "அந்தச் சின்னக் கோண்டு இன்று இப்படி இசையால் வளர்ந்து, இசையையும் வளர்த்து வருவதுடன் நில்லாமல், தகப்பனார் பெயரால் அறக்கட்டளை நிறுவி நிகழ்கால, கடந்த கால, எதிர்கால இசைக் கலைஞர்களைப் பாராட்டியும், நிதி வழங்கியும் கௌரவிப்பதைக் காணப் பரமானந்தமாக இருக்கிறது" என்றார் லால்குடி.

அவருடைய அந்த ஆனந்தத்தில் அன்று அவையை நிறைத்திருந்த ரசிகர்களும் முழுமையாகப் பங்கேற்றார்கள்.

— நமது நிருபர்

புகைப்படங்கள்: ஏ. வி. பாஸ்கர்

நடந்து கொண்டே
சிரிக்கின்றேன்!

# சட்டசபைக்குச் சில புதிய விதிமுறைகள்!

மெரீனா

**எடையைக்** குறைப்பதற்காகவோ, சீரான ரத்த ஓட்டத்திற்காகவோ, டயபடீஸுக்காகவோ டாக்டர் சொல்லி, திடீரென்று நடக்க ஆரம்பித்தவன் அல்ல நான். ரொம்ப வருஷங்களாகவே நடையாய் நடந்து கொண்டிருப்பவன்.

சின்ன வயசில் புரசைவாக்கம் தெருக்களிலும், சந்து பொந்துகளிலும் சோம்பேறியாய் நடந்திருக்கிறேன். சற்றுப் பெரியவனாதும் வீட்டுக்குத் தெரியாமல், மறைந்த 'அமர' மூர்மார்க்கெட்டுக்கும் 'பீச்'சுக்கும் நடந்து விட்டு வந்திருக்கிறேன். ஓரிரு முறை குறுக்கு விசாரணையின் போது கையும் களவுமாக மாட்டிக் கொண்டு, அம்மாவால் 'சோறு' மறுக்கப்பட்டு, கோபத்தோடு 'வெளி நடப்பு'ச் செய்து, பசி தாங்க முடியாமல் வீட்டுக்குத் திரும்பி, திருட்டுத்தனமாக அடுக்களையில் நுழைந்து, கிடைத்ததைத் தின்று, உண்ணாவிரதத்தைக் கை விட்டிருக்கிறேன்!


பத்திரிகை உத்தியோகம் கிடைத்த பின்னர், உடம்போடு பிறந்த பழைய நடையை தினப்படி 'வாக்' கிங்காக மாற்றிக் கொண்டேன். அதுவும் உடல் நலம் கருதி யல்ல. நடக்கும் போது பலவித ஐடியாக்கள் என்னோடு ஓடி வரும் ரகசியத்தை நான் தெரிந்து கொண்டேன். உடனுக்குடன், கோழி பிடிப்பது போல் அவற்றைப் பிடித்து மண்டையில் அடைத்துக் கொள்வேன். அது என் வாரப் பணிக்குக் கை கொடுத்து உதவியது. அந்த வாரத்துக்கான ஜோக்குகளும், கார்ட்டூன் ஐடியாக்களும் கிடைத்த மறு நிமிடமே எனக்குள்ளேயே 'ரைட் அபௌட் டேர்ன்' சொல்லிக் கொண்டு வீடு திரும்பி விடுவேன். இந்த ஐடியாக்கள் என்னை மனதுக்குள் சிரிக்க வைக்கும். சில சமயம் என்னை அறியாமல் வாய் விட்டுச் சிரித்து விட, தலைகள் திரும்பி என்னை 'ஒரு மாதிரி' பார்த்ததும் உண்டு!


**ப**த்திரிகைத் தொழிலிலிருந்து ரிடையர் ஆன பிறகும் நடைப் பழக்கத்தை விட முடியாமல், தினமும் நடந்து கொண்டிருக்கிறேன்.

அண்மையில் ஒரு ஞாயிற்றுக் கிழமை 'வாக்' சென்று கொண்டிருந்தேன். முதல் நாள் சட்டசபையில் 'கறுப்பு சனிக்கிழமை' (கோமல் கவனிக்க). பத்திரிகை போஸ்டர்களைச் சூழ்ந்து கொண்டு கடை கடையாய், கும்பல் கும்பலாய் தமிழ் மக்களின் பெருங் கூட்டம். போஸ்டர்களையெல்லாம் படித்து முடிக்கவே அரை மணி நேரமாகும். நாளும் பெருகி வரும் நாளிதழ்கள் திறந்திருக்கும் இலவச நூல் நிலையம். ஒரே செய்தியை பல்வேறு போஸ்டர்கள் வெவ்வேறு விதமாகப் பறைசாற்றுவதைப் படிப்பதில் ஒரு தனிச் சுவை.

ஒரு போஸ்டர் 'சட்ட சபையில் அமளி துமளி' என்றால், பக்கத்துப் போஸ்டர் 'சட்ட சபையில் அடிதடி' என்றது. அடுத்தது 'குத்து வெட்டு' என்று அலற, வேறொன்று 'ரத்த வெள்ளம்' என்று மிகைப்படுத்தியது. மர்மமும் சஸ்பென்ஸும் கலந்து திடுக்கிட வைக்கும் ஒரு வாராந்திர வதந்தி நம்மைப் பார்த்து அடுக்கு மொழியில் கேள்விகள் கேட்டது: 'கருணாநிதியின் கண்ணாடி உடைந்ததா?' ஜெயலலிதாவின் ஜாக்கெட்டும் கிழிந்ததா?' 'துகில் உரித்தவர் துரைமுருகனா?'

**ஜ**னநாயகத்தைப் பேணிக் காக்கவும் மக்கள் பிரச்னைகளை அலசி ஆராய்ந்து, வாதப் பிரதிவாதங்களைப் பண்போடு பேசி, நமக்கு உடையும், உணவும், உறைவிடமும் தேடித் தருவதற்காக நாம் நம்பிக்கையோடு அனுப்பி வைத்தவர்களின் வீர தீரச் செயல்களையும், கண்ணியமும், கட்டுப்பாடும் குலையாத கடமையுணர்வுகளையும் அசை






போட்டவாறே நான் நடந்து கொண்டிருந்தேன். சில 'ஐடியா'க்கள் பின்னால் குதித்தோடி வந்தன.

அவ்வப்போது கை ஊறும் சண்டைப் பிரியர்களுக்கு செளகரியமாக இருக்கும் பொருட்டு வாரத்துக்கு ஒரு நாள் கேள்வி நேரம் முடிந்ததும் 'கை கலப்பு நேரம்' என்று ஒதுக்கி விடலாம். சாதுக்களும் அகிம்சா வாதிகளும் அச் சமயம் வேறு அலுவல்களைக் கவனிக்க அவையை விட்டு வெளியேறி விட அனுமதிக்கப்படலாம்.

வெளி நடப்புச் செய்வதில் ஆர்வம் கொண்டவர்கள் அடிக்கடி 'வாக்கவுட்' செய்வதற்காக அவைத் தலைவர் தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் உறுப்பினர்களைப் பார்த்து 'வாக்கவுட் செய்ய விரும்புகிறவர்கள் வெளியே சென்று விட்டு காலாற நடந்து விட்டு வரலாம்' என்று கூறி அறிவித்து எதிர்க் கட்சியின் ஜனநாயக உரிமையைக் காக்கலாம்.

'மைக்'ராடுகள் பிளாஸ்ட்டிக்கில்தான் இருக்க வேண்டும். காகித எடைகள் (மிகவும் சிரமப்பட்டு 'பேப்பர் வெயிட்'டுக்கு தமிழ்ச் சொல் கண்டுபிடித்துள்ளேன்!) அழிப்பானில், அதாவது ரப்பரில்தான் வைக்கப்பட வேண்டும். அதனால் காகிதம் பறந்தாலும் பரவாயில்லை. அது பறக்கும் போது உறுப்பினர்களுக்கு சிறு சிராய்ப்புக் கூட இருக்காது.

பட்ஜெட் உரைப் புத்தகம் மிகவும் மெல்லிதான காகிதத்தில் அச்சடிக்கப்பட வேண்டும். கனமான மேலட்டையைத் தவிர்க்க வேண்டும். ஒரே புத்தகமாக இல்லாமல், ஏழெட்டுப் பகுதிகளாகப் பிரித்து, சிறிய-சிறிய புத்தகங்களாக, 'ரேஸ் புக்' அளவுக்கு இருந்தால், அவை கற்களாகப் பயன்படுத்தப்படும் போது ரத்தக் காயம் ஏற்படாது.

சட்டமன்றம் ஒரு ஜனநாயகக் கோயிலாக மதிக்கப்பட வேண்டும். அதற்கு அடையாளமாக, உறுப்பினர்கள் தங்கள் காலணிகளை வெளியே கழற்றி வைத்து விட்டு உள்ளே வர வேண்டும் என்று ஒரு சட்டம் இயற்றுவது நல்லது. 'போர்' முடிந்தவுடன் அவர்கள் தங்கள் காலணிகளைத் தேடி அலைய வேண்டியிருக்காது.

ஒவ்வொரு உறுப்பினர் இருக்கையின் அருகிலும் ஒரு 'முதலுதவிப் பெட்டி' கட்டாயமாக வைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு சட்டமன்றத்தின் வளாகத்திற்குள்ளும் அரசு மருத்துவ நிலையம் ஒன்று திறக்கப்பட வேண்டும். ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்குள் தனியார் 'நர்சிங் ஹோம்' திறக்கவும் அனுமதி வழங்கப்படலாம்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157; ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/—.
ஆறுமாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.


கேட்கும் ஸின்த்தால் எதுவோ, கிடைக்கும் ஸின்த்தால் அதுவே
Godrej
CINTHOL
DEODORANT AND COMPLEXION
ஒரிஜினல்
Godrej
CINTHOL
Godrej
NEW
CINTHOL
AND COMPLEXION SOAP
புதிது
CINTHOL
விருப்பமானதை தேர்ந்தெடுப்பீர்
கோத்ரெஜ்
MADISON-G-39-TM

REGISTERED No. M 4360
Registered as a Newspaper in Sri Lanka

